

# திருக்கோயில்

செப்டம்பர் 1976 ரூ 1

(101)
RR 407/76
27 . . 1976

# மறவாதீர்கள்;

# உங்கள் மகள் ஒருநாள்

# மணமகளாக அமர வேண்டியவள்!



திருமணம் என்றாலே-அதுவும் உங்களது மகளின் திருமணம் என்றால்—செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கினால் எதிர்காலத்தில் எந்த செலவையும் சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும்.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களை நாங்கள் வழங்குகின்றோம். மாதச் சேமிப்புத் திட்டத்தின்படி ரூ. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரி விதிப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது—இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

இதோ சில முக்கிய விவரங்கள்

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| | ரு. | ரு. | ரு. |
| ரெக்கரிங் டிபாசிட் | 5/- | 375/- | ... |
| | 10/- | 750/- | ... |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | ... | 825/- |
| | 10/- | ... | 1,650/- |

இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002

முகப்பு :

காஞ்சிபுரம் அருள்மிகு கச்சபேசுவரர் திருக்கோயில் தோற்றம்

# திருக்கோயில்

மாலை : 19 நள ஆண்டு—புரட்டாசித் திங்கள் செப்டெம்பர்—1976 மணி : 12

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

''திருக்கோயில்'' திங்கள் இதழின் 'சந்தாதாரர்'களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

திரு. ஆணையர்,
*அறநிலைய ஆட்சித் துறை,*
*சென்னை—600 034*

என்னும் முகவரிக்கு ரூபாய் பன்னிரண்டு (12) அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

அந்தந்த வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் சந்தாவைச் செலுத்திச் சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளலாம்.

இதழ்கள் தவறாது கிடைத்திடச் சந்தாதாரர்கள் முழு முகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரி மாற்றத்தை உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

**ஆண்டுச் சந்தா ரூ. 12/- தனி இதழ் ரூ. 1/-**

## பொருளடக்கம்

தீபாவளி விழா
—திரு. ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.,

மாங்காடு காமாட்சியம்மையின் மாட்சிமை
—திரு. உமாசங்கரன்.

பிரபத்தியின் பெருமை—
ஸ்ரீமத் அண்ணங்கராசார்ய சுவாமிகள்.

கண்டறியாதன கண்டேன்
—கவியோகி சுத்தானந்த பாரதியார்.

'செறியும் பிறவிக்கு நல்லவர் செல்லன்மின்'
—பேராசியர் திரு. செ. வேங்கடராமச் செட்டியார்.

தல வரலாற்றுக் குறிப்புகள்—ஆசிரியர்.

திருச்சிற்றம்பலக் கோவையார்—ஆசிரியர்.

பிரமேய சாரம்—ஆசிரியர்.

தமிழிலக்கியங்களில் சூரிய வழிபாடு
—திரு. ச. ஹரிஹரன், எம்.ஏ.,

காமாட்சியம்மையின் கருணை நலம்—ஆசிரியர்.

அருணகிரிநாதரும் திருவானைக்காவும்—ஆசிரியர்.

திருவுத்தர கோச மங்கை—ஆசிரியர்.

திருவிருத்தம்
—திரு. என். எஸ். தாதாசாரியார்.

''திருவளர் தாமரை''—ஆசிரியர்.

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L,

**"என் கடன் பணி செய்து கிடப்பதே"**

# தீபாவளி விழா



ந. ரா. முருகவேள் M.A., M.O.L.,

JL
Q2m 211, N58
N76-19.12

## முன்னுரை

ஒரு நாட்டின் நாகரிகம் பண்பாடு என்பன வற்றை யுணர்தற்கு, அந்நாட்டு மக்களாற் பெரிதும் கொண்டாடப்பெறும் விழாக்கள் பெரிதும் துணைசெய்வன ஆகும். "நாகரிகம் பெற்ற ஒரு சமுதாயம் உண்மை, அழகு, அருஞ்செயல், கலைத்திறன் அமைதிநலம் ஆகிய ஐந்து பண்புகளைச் சிறப்புறக் காட்டித் திகழும்"* என அறிஞர் ஒருவர் குறிப்பிட்டார். அவர் குறிப்பிட்ட ஐந்தனோடு, ஆறுவதாக அவ்வந்நாட்டு மக்கள் கொண்டாடும் பலவகைச் சமுதாயத் திருவிழாக்களையும் கூடச் சேர்த்துக் கொள்ளுதல் பொருந்தும்.

## திருவிழாக்கள்

158616

திருவிழாக்கள் நாட்டு மக்களின் இன்ப வாழ்வையும், செல்வச் செழிப்பையும், கலையுணர்வையும், இனிய பழக்க வழக்கங்களையும், நன்கினிது உணர்த்த வல்லனவாகும். விழாக்கள் மக்களிடையில் அன்பையும் ஒற்றுமையும் வளர்க்கின்றன. துன்பமும் கவலையும் போக்கி, இன்பமும் உவகையும் அளிக்கின்றன.

விழா-சாறு-சிறப்பு என்பன, ஒரு பொருட் சொற்கள். மக்கள் அன்புடன் கூடி விழைவுடன் கொண்டாடுவது விழா; வாழ்க்கையில் இன்பங் கனிந்த பழச்சாறு எனலாம்படி பயன் நிரம்பி விளங்குவன சாறு; சுவையிலாப் பேதை மனித வாழ்வுக்கு ஓரளவேனும் சுவையூட்டி, இனிமை பெருக்கிச் சிறப்பை யளிக்கும் நிகழ்ச்சிகள், சிறப்பு எனப் பெறும்.

## சங்ககால விழாக்கள்

சங்க நூல்களில் 'விழவுமலி மூதூர்', 'சாறயர் மூதூர்' என்னும் தொடர்கள் பலவிடத்தும் பயின்று வருதலின், பண்டைத் தமிழ்நாட்டில், பல்வேறு விழாக்கள் நிகழ்ந்து வந்தமை யுணரப்படும். 'இறையனார் களவியல்' உரையில், ஆசிரியர் நக்கீரர் பண்டை நாளில் தமிழகத்தில் நடைபெற்று வந்த பெருவிழாக்கள் என, மதுரை ஆவணி அவிட்டம், உறையூர்ப் பங்குனி உத்திரம், கருவூர் உள்ளிவிழா என்பனவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.

"கழுமலம் தந்த நற்றேர்ச் செம்பியன்
பங்குனி விழவின் உறந்தையொடு
உள்ளி விழவின் வஞ்சியும் சிறிதே"

என வரும் நற்றிணைப் பாடல், இச்செய்தியினை வலியுறுத்தும்.

## தீபாவளி விழா

சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களால், இவ்விழாக்களைப் பற்றி மட்டுமே யன்றி, புகார் நகரில் நிகழ்ந்த இந்திர விழாவைப் பற்றியும் நாம் அறியப் பெறுகின்றோம். இங்ஙனம் பழந்தமிழ் இலக்கியங்களால் உணரப்படும் விழாக்கள் பற்பல! ஆயினும், அவற்றுள் தீபாவளியைப் பற்றிய குறிப்பு ஏதும் நமது பழந்தமிழ் இலக்கியங்களுள் காணப் படவில்லை.

தீபாவளி விழா. இந்தியா முழுவதிலும், இந்து மத மக்கள் அனைவராலும் கொண்டாடப் பெறுகின்றது. ஜைனர்கள், சீக்கியர்கள் ஆகியோரும் கூடத் தீபாவளி விழாவைக் கொண்டாடுகின்றனர். நாட்டின் பல பாகங்களில், பல மக்களால், பலகாலமாகக் கொண்டாடப் பெற்று வருவதனால், தீபாவளி விழாவைப் பற்றிப் பற்பல வகையான ஐதிகங்கள் வழங்கி வருகின்றன.

ஐப்பசி மாதத்தில் அமாவாசைக்கு முன்வரும் திரயோதசி-சதுர்த்தசி-அமாவாசை-அதனை அடுத்த சுக்கிலப் பிரதமை ஆகிய நான்கு நாட்கள், தீபாவளியோடு தொடர்புடைய நாட்கள் ஆகும். இந்த நான்கு நாட்களில் திரயோதசியையும், சதுர்த்தசியையும் முதன்மையாகக் கொண்டு அதில் தீபாவளி கொண்டாடுவர் தென்னக மக்கள்! அமாவாசையையும் பிரதமையையும் முதன்மையாகக்கொண்டு குசராத்தியர் மார்வாரியர் ஆகியோர் தீபாவளி கொண்டாடுகின்றனர். அன்று அவர்கள் புதுக் கணக்குகள் தொடங்குவர்.

தீபாவளி அன்று, நாம் வைகறையில் எழுந்திருந்து, தீபம் ஏற்றி வைத்து, அதனைத் திருமகளாகக் கருதித் துதித்து வழிபடவேண்டும். எண்ணெய் வெற்றிலை பாக்கு பழம் தின்பண்டங்கள் ஆகியவற்றைத் திருமகள் முன்பு வைத்து, நிவேதனம் செய்ய வேண்டும். திருமகளின் முன்பு வைத்து வழிபடப் பெற்ற எண்ணெயை மனைவியின் கையால் தலையில் இட்டுத் தேய்த்துக் கொள்ளுதல், திருமகளின் அருளைத் தரும். இந்த எண்ணெயில் திருமகளின் அருள் விளங்குவதாகவும், அன்று நீராடும் வெந்நீரில் கங்கை வதிவதாகவும் புராணங்கள் கூறும். அன்று விடியலிற் சூரியன் உதிக்கும் முன் எண்ணெய் தேய்த்து நீராடுவோர், கங்கையில் நீராடிய பலன்பெறுவர். அன்று அருணோதய காலத்தில் சந்திரன் உதித்த பிறகு நிற்கும் காலம் தலைமுழுகுவதற்குச் சிறந்தது! பொழுது விடிந்த பிறகு தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்பெறும். அப்போது வகைவகையான பல இனிய சிற்றுண்டிகளைச் செய்து இறைவனுக்குப் படைத்தும், புத்தாடைகளை அணிந்தும், அன்று யாவரும் மகிழ்வர். நண்பர் உறவினர் ஆகியோர் இல்லங்களுக்குச் சென்று கலந்து பழகி மகிழ்வர். புதிய மணமக்களுக்குத் தீபாவளி மிகவும் சிறப்புடைய இன்பமான நாளாகும்.

---

*"A Civilized society exhibits the five qualities of Truth Beauty, Adventure, Art and Peace."

—A. N. WHITEHEAD,
Adventure in Ideas.

## வரலாறுகள்

(1) தீபாவளியைப் பற்றிப் பற்பல வரலாறுகள் கூறப்பட்டு வழங்கி வருகின்றன. கண்ணபிரான், உலக மக்களுக்குப் பெருந்துன்பம் விளைவித்து வந்த நரகன் என்ற கொடிய அசுரனை வதம் செய்தபோது, அவனுடைய கடைசி வேண்டுகோளுக்கு ஏற்ப, தீபாவளிப் பண்டிகை கொண்டாடப் படுகிறது. வட இந்தியாவில் நரகாசுரனைப் போல உருவங்கள் செய்து, அவற்றைக் கொளுத்திக் கண்ணபிரானின் வெற்றியைக் கொண்டாடுவர். நரகாசுரனைக் கொன்ற நாள் சதுர்த்தசியாதலின், இது நரக சதுர்த்தசி எனப் பெறும்.

(2) பிரகலாதனுடைய பேரனும், திருமாலின் அடியவனுமாகிய மகாபலிச் சக்கரவர்த்தி முடி சூட்டிக் கொண்ட நாள் தீபாவளி என்றும், அன்று ஏற்றப் பெறும் தீபம் 'பலிதீபம்' என்றும், வாமன புராணம் முதலியன கூறுகின்றன. மகாராட்டிரப் பகுதியில் சில இடங்களில், தீபாவளியன்று மகா பலியின் உருவம் புனைந்து வழிபாடு செய்வது வழக்கம்.

(3) இராமபிரான் இலங்கைக்குச் சென்று இராவணனைக் கொன்று, விபீஷணனுக்கு முடிசூட்டி விட்டு, சீதைப் பிராட்டியுடன் அயோத்தி மாநகர் வந்து சேர்ந்தபொழுது, மக்கள் எல்லோரும் நகரத்தை அழகு செய்து, இரவில் தீபம் ஏற்றி வைத்து, இராமபிரான் மீது தாங்கள் கொண்டிருந்த எல்லையற்ற பேரன்பினை வெளிப்படுத்தி, தமது மகிழ்ச்சியை விழாவாகக் கொண்டாடினார்கள். அதன் நினைவாகவே தீபாவளி விழாக் கொண்டாடப் பெறுகிறது என்றும் சிலர் கூறுவர்.

(4) ஜைன சமயத்தவர்கள் தீபாவளி விழாவைப் பற்றி, வேறொரு ஐதிகம் கூறுவர். ஜைனர்களின் சிறப்பு மிக்க தீர்த்தங்கரரான மகாவீர வர்த்தமானர் பரிநிருவாணம் என்னும் வீடுபேறு எய்தியநாளே தீபாவளித் திருநாள் என்றும், தவ ஞானப் பேரொளியாக விளங்கியிருந்த அப்பெருஞ் சான்றோரின் மறைவினால், உலகிற்கு நேர்ந்த ஒளி யிழப்பை ஈடுசெய்து நிரப்பி இருளை விலக்கி ஒழிக்கும் வகையில், அவர்தம் வழிபாட்டு நினைவாகவே அன்று ஏராளமான தீபங்கள் ஏற்றப் பெறுகின்றன என்றும், ஜைனர்கள் சாற்றுவர்.

(5) கண்ணபிரான் இந்நிலவுலகை விட்டு நீங்கிப் பரமபதமாகிய வைகுந்தத்திற்கு மீண்டு சென்று சேர்ந்தருளிய நாள்தான், தீபாவளி என்றும் கூறப்படுகின்றது.

(6) இந்திய நாட்டு அரசர்களுள் மிகவும் புகழ்பெற்ற ஒருவன் விக்கிரமன் என்பவனாவன். அவன் ஏற்படுத்தியதே 'விக்கிரம சகாப்தம்' என்னும் காலக் கணக்காகும். வட இந்தியாவிலும், மேற்கிந்தியாவிலும் உள்ள இந்துக்கள், பெரும்பாலும் விக்கிரம சகாப்தத்தையே காலக் கணக்கிடுவதற்குக் கையாளுவர். அத்தகைய விக்கிரம சகாப்தத்தை ஏற்படுத்திய விக்கிரமன் என்னும் வேந்தன், கார்த்திகைச் சுக்கிலப் பிரதமையில் முடி சூடிக்கொண்டான் என்றும், அதன் நினைவாகவே தீபாவளி விழாவை மக்கள் கொண்டாடத் தலைப் பட்டனர் என்றும் சிலர் கூறுவர்.

(7) புரட்டாசி மாதத்தில் (பாத்ரபதம்), தேய்பிறை நாட்களில், மகாலய தினத்தில் தென் புலத்தார் என்னும் பிதிரர்கள் பிதுர்லோகங்களிலிருந்தும், நரகம் சேர்ந்தவர் நரக லோகங்களிலிருந்தும் விடுதலை பெற்று, ஐப்பசித் தேய்பிறை வரையில் நிலவுலகில் வந்து, தங்கி, சுற்றத்தார் கொடுக்கும் பிண்டம் தருப்பணம் முதலிய வற்றைப் பெறுவர். பின்னர்த் தத்தம் உலகங்களுக்குச் செல்வர். நரக சதுர்த்தசியன்று, சுற்றத்தார் கொள்ளியைக் கையில் கொண்டு பிதுர்க்களுக்கு வழிகாட்டுவர் எனவும், சிலர் கூறுவர். எம தருப்பணம் எமதீபதானம் என்னும் சடங்குகளையும் சிலர் செய்வதுண்டு.

(8) தென் தமிழ்நாட்டு மக்கள், கார்த்திகைத் திங்கள் முழுமதி இரவில் விளக்குகளை வரிசை வரிசையாக வைத்து, அவற்றின் ஒளிவடிவில் எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளைக் கண்ணாரக் கண்டு வணங்கிவரும் வழக்கம் உடையவர். பழந் தமிழ்ச் சங்க நூல்களில் 'கார்த்திகை விளக்கீடு' பற்றிய குறிப்புகள் பல வருதலைக் காணலாம்.

''மழைகால் நீங்கிய மாக விசும்பில்
குறுமுயல் மறுநிறம் கிளர மதிநிறைந்து
அறுமீன் சேரும் அகல் இருள் நடுநாள்
மறுகுவிளக் குறுத்து மாலை தூக்கிப்
பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய
விழாவுடன் அயர வருகதில் அம்ம!''

என்பனபோல வரும் சங்கநூற் பாடற் பகுதிகள், கார்த்திகை விளக்கீட்டின் சீர்த்தியினை விளக்கும். தென்னகத்தில் வாழ்ந்த தமிழ் மக்களின் கார்த்திகை விளக்கீட்டினைப் போல, வட இந்தியாவில் அக்காலத்து வசித்து வந்த தமிழ் மேன் மக்களும் ஐப்பசித் திங்களில் விளக்கு வரிசை வைத்து, அவற்றில் தோன்றும் பேரொளி வடிவினன் ஆன முழுமுதற் கடவுளுக்குத் திருவிழாக் கொண்டாடி வந்தனர். அதுதான் தீபாவளி (தீபம் - விளக்கு; ஆவளி-வரிசை. 'நாமாவளி' என்பது காண்க) என வழங்கி வருகின்றது என்பது, செந்தமிழ்க் கடல் சிவத்திரு பேராசிரியர் மறைமலையடிகளார் அவர்களின் கருத்து ஆகும்.

## மற்றும் பல வரலாறுகள்

தீபாவளியைப் பற்றி வேறு சில வரலாறுகளும் ஆங்காங்கே வழங்கப்படுகின்றன. மகிஷன் என்னும் அசுரனை, அம்பிகை காளிவடிவம் கொண்டு வென்று கொன்றருளிய நாள் தீபாவளி ஆகும். சிலப்பதிகாரம் போன்ற மிகப்பழைய நூல்களிலும், அம்பிகை மகிஷாசுர மர்த்தனம் செய்த வரலாறு குறிப்பிடப் பெற்றுள்ளது. ஆதலின் அம்பிகை மகிஷாசுர மர்த்தனம் செய்தருளிய நாளே, தீபாவளி விழா ஆயிற்று என்று சிலர் கூறுவர். இனி,

''அரியணை அனுமன் தாங்க,
அங்கதன் உடைவாள் ஏந்தப்
பரதன்வெண் குடை கவிக்க,
இருவரும் கவரி வீச,
விரைசெறி கமலத் தாள்சேர்
வெண்ணெய்மன் சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி,
வசிட்டனே புனைந்தான் மவுலி'

எனக் கம்பர் கவினுறப்பாடுவதுபோல, வசிட்ட மாமுனிவரால் அயோத்தி மாநகரில் இராமபிரான் முடிசூட்டப் பெற்ற நாளே தீபாவளியாகும் என்றும், ஒரு வரலாறு உண்டு. ஆதிசங்கரர் தமது ஞான பீடங்களை நிறுவியருளியதும், சீக்கிய மதத் தலைவராகிய குருநானக் இவ்வுலக வாழ்வை நீத்துத் தெய்விக நிலைபெற்றதும், அவர் வழிவந்த பத்தாம்

குருவாகிய குருகோவிந்தசிங் என்பவர் கல்சா என்னும் சமய அமைப்பை நிறுவியதும், சத்தியார்த்தப் பிரகாசிகை முதலிய சிறந்த நூல்களை எழுதியவரும் ஆரிய சமாசத்தைத் தோற்றுவித்தவருமாகிய தயானந்தசுவாமிகள் மறைந்தருளியதும், தீபாவளித் திருநாளிலேயே நிகழ்ந்தனவாகும்.

## முடிவுரை

தீபாவளி போன்ற விழாக்கள், நமது நாடு முழுவதிலும் பல கோடிக்கணக்கான மக்களால் மகிழ்ந்து கொண்டாடப் பெறும் சிறப்பு வாய்ந்தனவாகும். இயல்பாகச் சுவையின்றிக் கழிந்து செல்லும் மக்களின் வாழ்க்கை நெறியில், இடையிடையே போதரும் இத்தகைய விழாக்கள், ஒரு புத்துணர்ச்சியையும் மகிழ்ச்சியையும் பொலிவையும் ஏற்படுத்தி மக்களின் வாழ்க்கைக்குச் சுவையூட்டிப் பெரிதும் நலம் பயக்கின்றன. மக்களின் உணர்வை ஈர்த்து ஒருநெறிப்படுத்தி, ஒற்றுமை உணர்வை ஊட்டி மன்பதையை வாழ்விப்பதற்கும், இத்தகைய விழாக்கள் இன்றியமையாதனவாக இருக்கின்றன.

தொன்று தொட்டு எத்தனையோ பல நூற்றுண்டுகளாகத் தொடர்ந்து வழிவழியே கொண்டாடப் பெற்று வருவதனால், இவ்விழாக்கள் பழமையும் பெருமையும் புனிதமும் தெய்விகமும் பெற்று விளங்குகின்றன. நமது முன்னோர்கள் கொண்டாடி மகிழ்ந்த இத்தகைய விழாக்களை, நாமும் கொண்டாடுவதன் மூலம், நமக்கும் அவர்களுக்கும் இடையறவு படாத ஒருவகைப் புனிதம் மிக்க பெருந் தொடர்பு, என்றும் நின்று நிலவிவர வாய்ப்பு நிகழ்கின்றது. எனவே, இன்னோரன்ன விழாக்களை நாம் நம் முன்னோர்களின் அடிச் சுவட்டைப் பின்பற்றி, அன்புடன் கொண்டாடி இன்புறுவோமாக!

—**ஆசிரியர்.**

---

ஸ்ரீ :

## அரிமேய விண்ணகரம் வணங்கு மடநெஞ்சே !

திருமடந்தை மண்மடந்தை இருபாலும் திகழத்
　　தீவினைகள் போய்அகல அடியவர்கட் கென்றும்
அருள்நடந்து,இவ் வேழுலகத் தவர்பணிய, வானோர்
　　அமர்ந்தேத்த இருந்தஇடம், பெரும்புகழ்வே தியர்வாழ்
தரும்இடங்கள் மலர்கள்மிகு கைதைகள்செங் கழுநீர்
　　தாமரைகள் தடங்கள்தொறும் இடங்கள்தொறும் திகழ,
அருவிடங்கள் பொழில்தழுவி எழில்திகழும் நாங்கூர்
　　அரிமேய விண்ணகரம் வணங்குமட நெஞ்சே !

வென்றிமிகு நரகனுரம் அதுஅழிய விசிறும்
　　விறலாழித் தடக்கையன் விண்ணவர்கட்கு, அன்று
குன்றுகொடு குரைகடலைக் கடைந்தமுதம் அளிக்கும்
　　குருமணிஎன் ஆரமுதம் குலவியுறை கோயில்,
என்றுமிகு பெருஞ்செல்வத் தெழில்விளங்கும் மறையோர்
　　ஏழிசையும் கேள்விகளும் இயன்றபெருங் குணத்தோர்,
அன்றுலகம் படைத்தவனே அனையவர்கள் நாங்கூர்
　　அரிமேய விண்ணகரம் வணங்குமட நெஞ்சே !

உம்பரும்இவ் வேழுலகும் ஏழ்கடலும் எல்லாம்
　　உண்டபிரான் அண்டர்கள்முன் கண்டுமகிழ் வெய்த,
கும்பமிகும் மதயானை மருப்பொசித்துக் கஞ்சன்
　　குஞ்சிபிடித் தடித்தபிரான் கோயில்,மருங் கெங்கும்
பைம்பொனொடு வெண்முத்தம் பலபுன்னை காட்டப்
　　பலங்கனிகள் தேன்காட்டப் படவரவே ரல்குல்,
அம்பனைய கண்மடவார் மகிழ்வெய்தும் நாங்கூர்
　　அரிமேய விண்ணகரம் வணங்குமட நெஞ்சே !

ஓடாத வாளரியின் உருவமது கொண்டுஅன்று
　　உலப்பில்மிகு பெருவரத்த இரணியனைப் பற்றி,
வாடாத வள்ளுகிரால் பிளந்துஅவன்றன் மகனுக்கு
　　அருள்செய்தான் வாழுமிடம் மல்லிகைசெங் கழுநீர்,
சேடேறும் மலர்ச்செருந்தி செழுங்கமுகம் பாளை
　　செண்பகங்கள் மணம்நாறும் வண்பொழிலி னூடே,
ஆடேறு வயல்ஆலைப் புகைகமழும் நாங்கூர்,
　　அரிமேய விண்ணகரம் வணங்குமட நெஞ்சே !

—திருமங்கையாழ்வார்.




## முன்னுரை :

சென்னைக்கு மிக அருகில், பூவிருந்தவல்லிக்கும் குன்றத்தூருக்கும் இடையில் அமைந்துள்ள மாங்காடு என்னும் நீர்வளம், நிலவளம் நிரம்பிய ஊரில் கோயில் கொண்டு, தன்னுடைய அருள் வெள்ளத்தால் அற்புதங்கள் பல புரிந்து வரும் அன்னை ஸ்ரீ காமாட்சியைப் பற்றியும், அவ்வூரில் உள்ள மற்ற கோயில்களின் சிறப்புகளைப் பற்றியும், இக்கட்டுரை வாயிலாக விளக்கப்பட்டிருக்கிறது. பூவிருந்தவல்லி திருக்கச்சி நம்பிகள் என்ற வைணவப் பெரியாரின் அவதார ஸ்தலம். பக்கத்திலே உள்ள திருவேற்காடு அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான மூர்க்க நாயனாரின் அவதார ஸ்தலம். அருகில் உள்ள குன்றத்தூர் சேக்கிழாரின் அவதார ஸ்தலம். மாங்காட்டிற்கு அருகில் உள்ள மற்றொரு ஊரான கோவூர் ஸ்ரீதியாகையரால் 'பஞ்சரத்தினக் கீர்த்தனைகள்' பாடப்பெற்று அழகான சுந்தரேஸ்வரர் ஆலயத்தைத் தன்னகத்தே கொண்டதாகும். பல சிறப்புகள் கொண்ட பல ஊர்கள் மாங்காட்டைச் சுற்றி அமைந்திருப்பதில் வியப்பில்லை. அன்னை கருமாரியால் புகழ்பெற்ற திருவேற்காடும், அன்னை காமாட்சியால் புகழ்பெற்ற மாங்காடும் அருகருகே அமைந்து, வடவைத்தீஸ்வரன் கோயில் எனப்படும் பூவிருந்தவல்லியும், குமரன் குன்றத்தில் அமர்ந்து ஆட்சிபுரியும் வடதிருநாகேஸ்வரம் எனப்படும் குன்றத்தூரும், மற்றபடி கோவூர் முதலிய தலங்களும் சூழப்பெற்றிருப்பது தனிச்சிறப்பாகும்.

## தலவரலாறு :

கயிலையில் ஒருநாள் இமவானின் மகளான உமையம்மை, இறைவனுடைய கண்களை விளையாட்டாகத் தன்னுடைய கைகளால் பொத்துகிறாள். சூரிய, சந்திரரே ஈசனின் கண்கள் என்று சொல்லுகிறார்களே, அவைகளை மூடினால் என்ன ஆகும் என்று பார்க்க ஆசைப்படுகிறாள். உடனே உலகெங்கும் இருளால் சூழ்ந்து உயிர்கள் எல்லாம் மூச்சு விட முடியாமல் திணறுகின்றன. பிரளயம் ஏற்படுகிறது. இதனால் கோபம் கொண்ட முக்கண்ணன் தன்னுடைய சக்திக்குச் சோதனையையும் அளிக்கிறான். அதன்படி ஈஸ்வரி பூவுலகிற்குச் சென்று மாங்காட்டில் ஒற்றை மாமரத்தடியில் தவம் செய்ய வேண்டும் என்று ஆணை. அப்படியே சக்தியும் மாங்காட்டிற்கு வந்து ஏகாம்பரம் என்னும் ஒற்றை மாமரத்தினடியில், ஐந்தனல் (பஞ்சாக்கினியை) வளர்த்து, ஒற்றைக்காலில் ஊசி முனையில் இடது கால் அக்னி மத்தியிலும், வலது கால் தூக்கி மடித்த நிலையிலும், இடதுகையை நாபி ஸ்தானத்திற்கு மேல் சின்முத்திரையாக வைத்துக் கொண்டு ஜபமாலையுடன் கூடிய வலது கையைத் தலைக்கு மேல் தூக்கிய நிலையிலும், கண்ணை மூடி மிகவும் கடுமையான தவம் செய்கிறாள். ஒருவாறாகத் தவமும் முடிகிறது. பிறகு புனர்பூசை செய்யக் காஞ்சிக்கு பூமி மார்க்கமாகச் சென்று கம்பா நதிக்கரையை அடைந்து அங்கே மணலில் லிங்கம் பிடித்து, இறைவனுக்குப் பூசை செய்து, தன்னுடைய தவத்தை முடித்து இறைவனை அடைகிறாள். இத்தகைய நிகழ்ச்சிகள் நடந்த இடம் மாங்காடு என்னும் இந்தப் புனித ஸ்தலம் ஆகும்.

## ஸ்ரீ காமாட்சியம்மை ஆலயம் :

மாங்காட்டிற்கு ஆம்ராரண்யம், சூதவனம், மாவை என்ற பெயர்கள் உண்டு. இந்தத் தலத்து நாயகியே காமாட்சிதான். ஏன் என்றால் பெருமாள், சிவன் கோயில்களின் புகழையெல்லாம் அவளே ஏற்றுத் தனிக்கோயில்கொண்டு விளங்குகிறாள். காமாட்சி தவம் செய்த இடமாதலால் மக்கள் வசிக்க முடியாமல் வெப்பமாக இருந்ததாகவும், ஸ்ரீ ஆதிசங்கரரால் ஸ்ரீசக்ரப்பிரதிஷ்டை செய்யப்பட்ட பிறகு வெப்பம் தணிந்து மக்கள் வசிக்க ஆரம்பித்ததாகவும் கூறப்படுகிறது.

இக்கோயிலின் கருவறையில் அர்த்தமேரு என்ற அமைப்பைச் சேர்ந்த ஸ்ரீ சக்ரம் உள்ளது. அதற்குப் பின் புறம் பஞ்சலோக காமாட்சியை தரிசனம் செய்யலாம். அலங்காரமெல்லாம் பஞ்சலோக காமாட்சிக்கும், அர்ச்சனையெல்லாம் ஸ்ரீசக்ரத்திற்கும் நடைபெறுகிறது. இது தவிர, கருவறைக்கு வெளியில் உள்ள அறையில் தபஸ்காமாட்சியைத் தரிசனம் செய்யலாம். தபஸ் காமாட்சியை உற்சவ மூர்த்தி வடிவில் உலகில் வேறு எந்தக் கோயிலிலும் தரிசனம் செய்ய முடியாது. தபஸ்காமாட்சியைத் தவிர லட்சுமி, சரஸ்வதியைத் தோழியாகக் கொண்ட உற்சவ மூர்த்திகளையும், ஆதிசங்கரரையும், பாலசுப்பிரமணியரையும் இங்குக் காணலாம்.

## பார்க்கவேஸ்வரர் ஆலயம் :

பார்க்கவ முனிவருக்குக் காட்சி கொடுத்ததால் இப்பெயர் வழங்கலாயிற்று. சுக்ரேஸ்வரர், வெள்ளீஸ்வரர் என்ற பெயர்களிலும் அழைக்கப்படுகிறார். அன்னை காமாட்சிக்குப் பார்க்கவி என்ற பெயரும் உண்டு. லிங்கம் மிகப் பெரியது. இக்கோயிலில் காமாட்சி அம்மனின் திருப்பாதங்கள் இருக்கின்றன. தினமும் அம்பாள் இங்கு வந்து ஈசனைத் தரிசனம் செய்வதாகச் சொல்லப்படுகிறது. மாங்காட்டை நினைவுறுத்தும் வகையில் இங்குள்ள விநாயகர் கையில் மாங்கனியிருக்கிறது,

## வைகுண்டநாதர் ஆலயம் :

காமாட்சியம்மன் ஆலயத்திற்கு வடக்குப் புறம் இந்த ஆலயம் அமைந்திருக்கிறது. கனக

வல்லித் தாயாருடைய சந்நிதி பழுதடைந்திருக்கிறது. வைகுண்டநாதர் ஸ்ரீதேவி பூதேவியுடன் காட்சி கொடுக்கிறார். பெருமாள்தாயார் சிலைகள் பல அபூர்வ அமைப்புடன் அமைந்திருக்கின்றன. பிரயோகச்சக்கரத்துடன் பெருமாள் காட்சி தருகிறார். இதுபோன்ற அமைப்புடன் பெருமாளைக் காண்பது அரிது. பெருமாளுடைய ஒரு திருக்கரத்தில் கணையாழி காணப்படுகின்றது. காமாட்சி அம்மனுடைய திருக்கல்யாணத்திற்குக் கணையாழியைச் சீராகக் கொண்டு வந்ததாகக் கர்ண பரம்பரையாக வரும் வரலாறு கூறுகிறது. தாயார் சிலைகள் பெண்கள் எப்படி உட்கார வேண்டுமோ அந்த அமைப்பில் அமைக்கப்பட்டிருக்கின்றன. யாளிகளுடைய உருவங்கள் இந்தச் சிலைகளின் பீடத்தில் வரிசையாக அமைக்கப்பட்டிருக்கின்றன. கருட பகவானும் கம்பீரமாக இக்கோயிலில் காட்சி தருகிறார். இக்கோயிலினுடைய நுழைவுவாயிலுக்கு வலது இடது புறங்களில் மூன்று கால்களுடன் கூடிய இரு சிலைகள் இருக்கின்றன. அன்பர்கள் தவறாது இக்கோயிலுக்கு வந்து இதுபோன்ற அபூர்வ சிற்பங்களைக் கண்டு தரிசித்து, வைகுண்டநாதனின் அருளைப் பெற்று மகிழ வேண்டும்.

## மற்ற கோயில்கள் :

காமாட்சியம்மன் ஆலயத்திற்கு அருகில், பாலாண்டேஸ்வரர் ஆலயம் உள்ளது. இக்கோயிலின் விமானம் அழகானது. இது தவிர ஆடி மாதம் திருவிழா சிறப்பாக நடைபெறுகின்ற மாரியம்மன் கோயிலும், இவ்வூரில் உள்ளது.

## அன்னையின் அற்புதங்கள் :

அன்னை காமாட்சி இங்குப் பல அற்புதங்களை நிகழ்த்தி வருகிறாள். அவற்றுள் தலையானது திருமணம் ஆகாத பெண்களுக்குத் தன்னுடைய அருள் வெள்ளத்தால் திருமணம் நடைபெறச் செய்வது. ஐந்து வாரங்கள் இங்கே வந்து தொடர்ந்து வழிபட்டு, எப்பொழுதும் அவளுடைய நினைவாகவே இருந்து வந்தால், எப்படிப்பட்ட இன்னலும் தீரும் என்பது அனுபவ ரீதியாகக் கண்ட உண்மை.

முதன் முதலாக இக்கோயிலுக்கு வருகிறார் ஒருவர். அர்ச்சனை செய்ய அர்ச்சகரிடம் குங்குமம் போன்ற பொருள்களை அளிக்கிறார். அந்த அன்பரின் கோத்திரம் முதலியவைகளை விசாரித்து விட்டு அவருடைய மனைவியின் நட்சத்திரம், பெயர் போன்ற விவரங்களைக் கூறுமாறு அர்ச்சகர் வினவுகிறார். வந்தவரோ தனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை என்ற செய்தியைக் கூறுகிறார். அர்ச்சகரோ! காமாட்சியின் அருளால் திருமணம் விரைவில் நடைபெறும் என்று கூறுகிறார். ஒரே வாரம் தான். அன்னையின் அருளால் அந்த அன்பருக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டு நடைபெறுகிறது.

அன்னை செய்யும் அற்புதங்களில் பெரிய அற்புதம் என்னவென்றால், இங்குத் திருமணமாகாத பெண்கள் வேண்டுதலுக்காக வரும்பொழுது அவர்களுடன் வழித்துணைக்காக வரும் தோழிகளுக்கும் அவர்கள் வேண்டாமலே, தரிசனம் செய்த சில வாரங்களுக்குள் திருமணம் எதிர்பாராமல் நடைபெறும் நிகழ்ச்சியாகும். எத்தனையோ திருமணங்கள் இதுபோன்று நடைபெற்றுள்ளன. இன்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவையெல்லாம் வாசகர்கள் அனுபவ பூர்வமாகத் தெரிந்து கொள்ள வேண்டிய செய்தியாகும். சில திருமணங்கள் பெண்ணிற்கு உறவினர்கள் வராமல், பெண் வீட்டிற்கு நண்பர்கள் மூலமாகக் குங்கும பிரஸாதங்கள் அனுப்பப் பெற்று, நிச்சயம் செய்யப்பட்டு நடந்திருக்கின்றன. பல வருடங்களாக அலைந்து தன்னுடைய பெண்ணிற்குத் தக்கவரன் கிடைக்காமல் திருமணம் நடைபெறாமல் இருந்ததால் பம்பாய் அன்பர் ஒரு ஒருவர் தன்னுடைய சென்னை நண்பர் மூலமாக மூன்று வாரங்கள் அர்ச்சனை செய்து பிரஸாதங்கள் அஞ்சல் மூலமாகப் பெற்றார். முதல் வாரத்தில் அனுப்பப்பெற்ற குங்கும பிரஸாதம் அவருக்குப் போய்ச் சேர்ந்த அன்றே, ஏற்கனவே பெண் பார்த்து விட்டுப் போய் ஏறத்தாழ ஒரு மாத காலமாகச் சம்மதம் சொல்லாத பிள்ளைவீட்டார், திருமணத்திற்கு அந்த இடத்தை நிச்சயம் செய்த விந்தை நடைபெற்று, திருமணமும் நடந்தது.

மற்றவர்கள் கூறுகிறார்களே என்று விளையாட்டாக, சிலர் மாங்காடு வந்து அன்னையால் சோதிக்கப்பட்டு, அவதியுற்று அன்னையின் சக்தியை நினைத்து, பிறகு மனம் திருந்திய வரலாறுகளும் உண்டு.

அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டிய நிலையில் ஒருவருக்கு நோய் முற்றி மருத்துவர்களிடம் அழைத்துப் போகப்படுகிறார். இந்த நோய்க்கு அறுவைச் சிகிச்சையைத் தவிர வேறுவழியில்லை என்று கூறுகிறார்கள். ஆனால் உறவினர்களோ மாங்காட்டிற்கு வந்து அன்னை காமாட்சியிடம் வேண்டுகின்றனர். ஓரிரு வாரங்கள் கழித்து அதே நோயாளி மருத்துவரிடம் அழைத்துச் செல்லப்படுகிறார். மருத்துவர்களும் நோயாளியைப் பரிசோதிக்கிறார்கள். மருத்துவர்களுக்கே வியப்பாகிறது. நோய் இருந்த சுவடே தெரியவில்லை. அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டிய நோய்க்கு மாத்திரைகளைக் கொடுத்து அவற்றாலேயே பூரண குணம் ஏற்படும் என்று சொல்லுகிறார்கள்.

ஒரு குடும்பத்தில் திருமணமான கணவன், மனைவிக்குள் ஏதோ பிரச்சினைகள் ஏற்பட்டு உறவு முறிந்து இருவரும் பிரிந்து விடுகின்றனர். இப்படி பல வருடங்கள் ஓடி விடுகிறது. அந்தப் பெண்ணின் உறவினர்கள் மாங்காட்டிற்கு வந்து அன்னையை வேண்டி அவளுடைய கருணையை நாடுகின்றனர். சில நாட்கள் கழித்துப் பிரிந்த கணவன் மனைவியின் இல்லந்தேடி வருகிறான். பிரிந்தவர் கூடுவார்கள் என்ற நம்பிக்கையும் சுற்றத்தாருக்கு ஏற்படுகிறது.

இப்படி எத்தனையோ அற்புதங்கள், அவற்றையெல்லாம் விவரிக்க இங்கே இடமேது. நோயாளிகள், திருமணமாகாத பெண்கள், வேலை தேடும் இளைஞர்கள், மன அமைதி இல்லாமல் வாடும் அன்பர்கள், போன்றவர்களுடைய குறைகளைத் தீர்த்து அவர்களை என்றென்றும் தன்னுடைய தொண்டர்களாக ஏற்று அற்புதங்களைத் தொடர்ந்து நடத்தி வருகிறாள், அன்னை காமாட்சி! அன்னை காமாட்சியின் கருணைக்குஅளவேயில்லை.

## தலத்திற்குச் செல்லும் வழி :

சென்னையிலிருந்து 53-டி 17-பி போன்ற பஸ்களும், தாம்பரம், பூவிருந்தவல்லி ஆகிய இடங்களிலிருந்து 66-ஆம் எண் கொண்ட பஸ்களும் திருவள்ளூர், ஆவடி ஆகிய இடங்களிலிருந்து தனியார் பஸ்களும் மாங்காடு போகின்றன.

மங்களம்

# பிரபத்தியின் பெருமை

''மகாவித்வான், பத்மவிபூஷண்''

ஸ்ரீமத் அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்

உலகில் பிறக்கின்ற ஒவ்வொருவரும், நூல்களை எவ்வளவு விரிவாகக் கற்றாலும், மூன்று விஷயங்களையே முக்கியமாகவும் ஸாரமாகவும் தெரிந்து கொள்ளக் கடமைப்பட்டவர்கள். அவையாவன தத்வம், ஹிதம், புருஷார்த்தம் என்பனவாம். இவற்றுள் தத்வ மென்பது என்ன? என்று ஆராயுமளவில், உலகில் மஹான்கள் 'தத்வத்ரயம்' என வழங்கி வருவதை அனைவரும் அறிந்திருக்கலாம். சேதனப்பொருள், அசேதனப் பொருள், ஈச்வரன் என்கின்ற மூன்று தத்துவங்களுமே தத்வத்ரயமென வழங்கப் பெறுகின்றது. சேதனம் அசேதனம் என்பவற்றைச் சித்து, அசித்து என்றும் வழங்குவர். உயிர், ஆவி முதலிய சொற்களால் வழங்கப்படுகின்ற ஜீவாத்மா, சேதன தத்வமாகும். ஜடப் பொருள்கள் யாவும் அசேதன தத்வமாகும். இவ்விரண்டு தத்துவங்களையும் உடலாகக் கொண்டு ஸர்வ வ்யாபகனாகவும், ஸர்வ நியாமகனாகவும், ஸர்வ ரக்ஷகனாகவும், ஸகல கல்யாண குணநிதியாகவும் விளங்குகின்ற பரம புருஷன் ஈச்வர தத்வம். அப்படிப்பட்ட எம்பெருமானுடைய ஸ்வரூபம், ரூபம் குணம் விபவம் முதலிய எல்லாவற்றையும் நன்கு உணர்வது நமக்கு மிக அவசியமானது. இப்படிப்பட்ட பரம புருஷனைப் பெறுவதற்கு உரிய உபாயத்தை இரண்டாவதாகத் தெரிந்து கொள்ளவேண்டும். ஹிதம் என்ற சொல்லால் சொல்லப்படுவது இவ்வுபாயமே. பரம புருஷனை யடைந்த பின்பு பெறும் பேறு எதுவோ, அதுவே புருஷார்த்தம் எனப்படும். ஸ்ரீமந்நாராயணனே பரதத்வம் என்றும், ப்ரபத்தியே அப்பெருமானை யடைவதற்கு உரிய தென்றும், ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா வடிமை செய்வதே (அதாவது நித்ய கைங்கரியமே) புருஷார்த்த மென்றும், தெளிவாக அறியுமவர்கள் தத்வ ஹிதபுருஷார்த்த ஜ்ஞாநிகள் என்று சிறப்பித்துக் கூறப்படுபவர்கள். இப்போது நாம் இவற்றுள் இடையிலுள்ளதான ஹிதம் என்பதைப்பற்றியே சிறிது விவரிக்கத் தொடங்குகின்றோம். எம்பெருமானை யடைவதற்குத் தகுந்த மார்க்கம் ப்ரபத்தியே என்பதும், அதன் சிறப்பும் ஈண்டு நிரூபிக்கப்படுகின்றன. பகவத்கீதை யென்னும் திவ்ய சாஸ்திரத்தில் பகவானை யடைவதற்கு வழிகளாக நான்கு யோகங்கள் கூறப்பட்டுள்ளன. 1. கர்ம யோகம், 2. ஞான யோகம், 3. பக்தி யோகம், 4. ப்ரபத்தி யோகம். இவற்றின் தன்மைகளை ஸ்ரீகீதார்த்த ஸங்க்ரஹமென்னும் நூலில் ஆளவந்தார் சுருக்கமாக அருளிச் செய்துள்ளார்.

''யோகஸ் தபஸ்தீர்த்த தாநயஜ்ஞாதிஸேவநம், ஜ்ஞாநயோகோ ஜித ஸ்வாந்தை: பரிசுத்தாத்மநி ஸ்திதி: பக்தியோக: பரைகாந்த ப்ரீத்யா த்யாநாதிஷு ஸ்திதி:'' என்றிவை முதலான ச்லோகங்கள் காண்க. இதன் விவரணம் வருமாறு: தவம் வேள்வி முதலியவற்றை அவற்றின் பலன் கைபுகுமளவும் ஆதரவோடும் நியதியோடும் நிரந்தரமாகச் செய்தல் கர்மயோகம். மனத்தை வென்றவர்கள் இடைவிடாது சிந்தித்துக் கொண்டிருத்தலாகிற பரிசுத்த ஆத்ம த்யானத்திலே ஊன்றி யிருத்தல் ஜ்ஞான யோகம். பரம புருஷனிடத்தில் வேரூன்றிய அன்புடனே த்யானம், அர்ச்சநம், நமஸ்காரம் முதலியவற்றிலே நிலை நின்றிருத்தல் பக்தி யோகம். இனி ப்ரபத்தி யோகமாவது—''நான் ஒன்றையும் அனுட்டிக்க வல்லமை யற்றவன்; என்னைக் காத்தருள வேண்டிய பாரம் பரம புருஷனாகிய உன்னைச் சேர்ந்ததாதலால் உன் கையை எதிர்பார்த்திருப்பது தவிர என் கையால் ஆவது ஒன்றுமில்லை'' என்கிற திண்ணமான உறுதியுடன் பரம புருஷனுடைய பாதார விந்தத்திலேயே ஸகல பாரங்களையும் ஸமர்ப்பித்து நிற்றலே ப்ரபத்தியாகும். இதுவே சரணாகதி, சரண வரணம், ப்ரபதநம் முதலிய சொற்களாலும் வழங்கப் பெறும். நம் முன்னோர்களான ஆழ்வார்கள் ஆசாரியர்கள் யாவரும் மற்ற உபாயங்களில் புகாமல் இந்த ப்ரபத்தியிலேயே ஊன்றி யிருந்தார்கள். ஆனது பற்றியே அவர்களுடைய ஸந்தானம் ப்ரபந்ந குலம் என்றே வழங்கப்பட்டு வருகின்றது. இந்த ப்ரபத்தியானது கை கால் முதலிய உறுப்புக்களினால் செய்யப்படுவதன்று. நெஞ்சிலே உண்டாகும் ஒரு வகையான உறுதியே ப்ரபத்தி யெனப்படும். இவ்விஷயத்தைத் தெரிவிக்கின்ற பிரமாணங்கள் பலவற்றுள் இரண்டு ச்லோகங்களை இங்கு நாம் முக்கியமாகத் தெரிவிக்க விரும்புகிறோம்''—

''த்வமேவோ பாயபூதோமே பவேதி ப்ரார்த்தநாமதி: சரணாகதிரித்யுக்தா ஸாதேவேஸ்மிந் ப்ரயுஜ்யதாம்'' என்பது ஒரு பிரமாணம். இதன் பொருளாவது: எம் பெருமானே! என் பேற்றுக்கு நீயே ஸாதனமாக வேணும் என்கிற நினைவே சரணாகதி என்பதாம்.

''அநந்யஸாத்யே ஸ்வாபீஷ்டே மஹாவிச்வாஸ பூர்வகம். ததேகோபாயதா யாச்ஞா ப்ரபத்திரிதி கத்யதே.'' என்பது மற்றொரு பிரமாணம். இதன் பொருளாவது: தன்னுடைய இஷ்டம் வேறு எந்த உபாயத்தாலும் நிறை

வேறென்று தெரிந்து உறுதியான நம்பிக்கை யுடன் எம்பெருமானொருவனையே ஸாதனமாகக் கொள்வதுதான் ப்ரபத்தி என்றபடி. கீழ்ச் சொல்லப்பட்ட கர்மயோகம் முதலிய உபாயங் களை அனுட்டிக்கத் திறமை யற்றவர்கள்தாம் இந்த ப்ரபத்தியிலே ஊன்ற வேண்டும் என்பது சிலருடைய கொள்கை. அப்படி யல்லாமல், கர்மயோகம் முதலியவற்றை யனுட்டிக்க ஆற்றலுள்ளவர்களாகவேயிருந்தாலும், தங்க ளுடைய அத்யந்த பாரதந்திரிய ஸ்வரூப உண் மையை உணர்ந்தால், அவ்வுணர்ச்சிக்கு ஏற்ப மற்றைய உபாயங்களை ஸ்வரூப விருத்தம் என் றாவது, அதிகார விருத்தம் என்றாவது கருதி விட்டிட்டு ப்ரபத்தியிலே தான் ஊன்ற வேணு மென்பது சிலருடைய கொள்கை. ஸ்ரீ வைஷ்ணவ குலமே ப்ரபந்ந குலம் என்று வழங்கப் பெறு கின்றது. ஆழ்வார்களும் ஆசாரியர்களுமெல் லாரும் ப்ரபந்நர்கள் என்றே வழங்கப்படுகிறார் கள். ப்ரபத்திக்குத் தேசநியமம் காலநியமம் அதிகாரிநியமம் ப்ரகாரநியமம் பலநியமம் முதலிய ஒரு நியமமும் கிடையாது. 'புண்ய க்ஷேத்திரத்தில் செய்ய வேணும், வேறிடத்தில் செய்யலாகாது' என்பது தேச நியமம். 'வஸந்த ருது முதலிய காலங்களிலே செய்ய வேணும், மற்ற காலங்களிலாகாது' என்பது கால நியமம். 'ப்ராம்மண க்ஷத்திரிய வைச்ய வரு ணங்களிற் பிறந்தவர்களே செய்ய வேணும்; சதுர்த்த வருணத்தவர் செய்யலாகாது' என்பது அதிகாரி நியமம். 'ஸ்நானம் கை கால் கழுவு தல் முதலியவற்றைச் செய்த பின் செய்ய வேணும், வேறுபடியாகச் செய்யலாகாது' என்பது ப்ரகார நியமம். 'இன்ன பலனைத்தான் இது தரும், மற்ற பலனைத் தராது' என்பது பல நியமம். ஆகிற இந்த நியமங்களெல்லாம் ஜ்யோதிஷ்டோமம் முதலிய கருமங்களுக்கு ஏற்பட்டிருக்கின்றனவே யன்றி ப்ரபத்திக்கு இந்த நியமங்கள் எதுவுமில்லை. (இதனை நன்கு நிரூபிப்போம்). ஸ்ரீவிபீஷணாழ்வான் கடற் கரையிலே இராமபிரானைச் சரணம்புக வந்த போது 'இவன் அஸ்தானத்திலே அஸமயத்திலே வந்தவனாகையாலே சங்கிக்கத்தக்க நிலைமையி லிராநின்றான்' என்று ஸ்ரீராமனைக் குறித்துக் கூறிய மந்திரிகளின் பட்சத்தைத் தூஷிக்கிற அனுமன் "தேச காலச்ச" இத்யாதியாகச் சொன்ன வார்த்தைகளை நோக்குங்கால், தூய கருத்தினனாகிய விபீடணன் சரணம் என்று வந்த தேசகாலங்களில் குறை பார்க்கக்கூடாது. அவன் வந்ததுவே தேசமும் காலமும்—என்கிற சித்தாந்தம் ஏற்படுகிறபடியால் ப்ரபத்திக்குத் தேசகால நியமமில்லை. த்ரௌபதியானவள் துச்சாஸநனாலே இழுக்கப்பட்டுச் சபையில் வரு கிறபோது ரஜஸ்வலையாயிருந்தவள். ஸ்நானம் பண்ணியோ ப்ரபத்தி பண்ணினாள்? அவ் வசுத்தி யோடே யன்றோ "கோவிந்த புண்டரீகா க்ஷ மாம் சரணாகதாம்" என்று கண்ணபிரானை நோக்கி ப்ரபத்தி பண்ணினாள். இத்தால், ப்ரபத்தி பண்ணுவார் சுத்தராய்ப் பண்ணவேணு மென்கிற நியம மில்லாமை காட்டப்பட்டது. எம் பெருமான் பக்கல் விமுகரான நீசர்நிறைந்த திரளிலே யன்றோ அர்ஜுநன் கண்ணபிரானிடத் தில் ப்ரபத்தியைக் கேட்டிட்டுணர்ந்தான். இத் தால் ப்ரபத்தி ச்ரவணம் பண்ணும்போது அது நீசர் நடுவேயாகா தென்கிற நியமமில்லாமை காட்டப்பட்டது. இவற்றால் கிடைத்தது என்ன வென்றால், ப்ரபத்தியில் அநுஷ்டாந காலத் திலும் ச்ரவண காலத்திலும் த்ரௌபதியும் அர்ஜுநனும் நின்ற நின்றபடியே அதிகாரிக ளானமையாலே, ப்ரபத்தியில் அந்வயிக்குமள வில் அசுத்தனா யிருக்கு மவனுக்கு சுத்தி ஸம்பா திக்க வேண்டா; சுத்தனா யிருக்குமவனுக்கு அசுத்தி ஸம்பாதிக்க வேண்டா; ப்ரபத்தி பண் ணுங்காலத்தில் சுத்தனாகவோ அசுத்தனாகவோ யாதொரு படியிருப்பான், அப்படியே இந்த ப்ரபத்திக்கு அதிகாரி யாகலா மென்றதாயிற்று. இனி, இந்த ப்ரபத்திக்கு அதிகாரி நியமமில்லை யென்பது நிரூபிக்கப்படுகிறது: க்ஷத்திரியரான தருமபுத்திராதிகளும், ஸ்த்ரீயான த்ரௌபதி யும், தேவரூபத்தை மறைத்து மஹாபரா தத்தைப் பண்ணின காகமும், திர்யக்யோநியிற் பிறந்தவனும் பிரதிகூலனுமான காளியனும், திர்யக்யோநியிற் பிறந்து அநுகூலனான கஜேந் திராழ்வானும், ராட்சஸ ஜாதியனான விபீஷ ணாழ்வானும், ஸர்வ சரண்யரான ஸ்ரீராமபிரா னும் இளைய பெருமாளும் முதலானவர்களெல் லாரும் சரணம் புகுகையாலே ப்ரபத்திக்கு இன்னார்தான் அதிகாரி என்று ஒரு நியதியில்லை. ருசியுடையாரெல்லாம் அதிகாரிகளே. கீழ்க் குறிக்கப்பட்டவர்கள் ஒவ்வொருவர் ஒவ்வொரு பலனைக் குறித்து சரண் புகுந்திருப்பதனால் ப்ர பத்திக்குப் பலநியம மில்லையென்பது எளிதில் உணரக் கூடியது. இந்த நியமங்கள் ஒன்றும் இல்லையாகிலும் விஷய நியமம் மாத்திரமுண்டு; ஸகல கல்யாண குண பரிபூர்ணனான எம்பெரு மான் விஷயத்திலேயே இந்த ப்ரபத்தி அனுட் டிக்கப்பட வேண்டுமென்கிற விஷய நியமம் ஒன்றே யுளது என்றுணர்க. இத்துணைச் சிறப் புடையதான ப்ரபத்தியை ஒரு வியாஜமாகக் கொண்டு' எம்பெருமான் சேதனர்களைக் காத் தருள்கின்றன னாதலால், 'நம்மைக் காத்துக் கொள்வதற்கு நம்மாலாகாது, அவனே உபாயம்' என்கிற திடமான அத்யவஸாயமே ஒவ்வொரு வர்க்கும் தஞ்சம்.

# கண்டறியாதன கண்டேன்

(கவியோகி சுத்தானந்த பாரதியார்)

## சிவலிங்கச் சிறப்பு

ஓர் ஏரி உள்ளது. (Lake Wandourage Botanical garden) சோவரின்குன்றில் அதன்கரையில் ஒரு பொழில். அங்கே நாங்கள் உலாவியபோது பல நண்பர் என்னைச் சூழ்ந்தனர். அவருள் ஐந்துபேர் இந்திக்காரர். மூவர் வங்காளிகள், இருவர் தெலுங்கர், ஒருவர் தமிழ்-கத்தோலிக்கர், பதின்மர் வெள்ளைக்காரர், நால்வர் சீனர், இருவர் ஜப்பானியர். இத்தனை பேரும் ஆங்கிலம் அறிந்தவர்கள். ஆனால் நான் அவரவர் கேள்விகளுக்கு அவரவர் மொழியில் விடைகூறினேன். என்னை அவர்கள் International Linguaphone (எல்லா நாட்டு மொழிக்கருவி) என்றனர். எங்கள் பேச்சு நகைச்சுவையின் உச்ச நிலையை அடைந்தது. அப்போது ஓர் ஆங்கிலர் Land of Lingams (இலிங்கநாடு) என்ற நூலை நீங்கிலராகி இந்துசமயத்தை அதிலும் சைவ சமயத்தை அறுவை செய்து அக்கக்காகப் பிய்த்துத்தள்ளி, முடிவில் ஆண் பெண் குறியிணைப்பே லிங்கம்-அதுவே இந்துசமயம் என்று தடதடநடையில் படபடத்துப் பேசவே நண்பர் கடகடச்சிரிப்புடனே கைகொட்டி ''லிங்கம், இந்துயிசம் ஹுராலிங்கம்' என்று களிகூத்தாடினர்-நான் அந்த நூலை வாங்கிப் பார்த்தேன். வரிக்குவரி வசை, பக்கத்துக்குப் பக்கம் கேலியாயிருந்தது. நல்லவேளையாக என்பையில் Revelation of Meikandar (சிவஞானபோதம்) இருந்தது. அதை எடுத்துப் படித்தேன். இலிங்க தத்துவத்தை இருந்து காட்டினேன். பக்கவாட்டில், மார்பிடையே கைகுவித்து அமர்க-இது தான் இலிங்கவடிவு. அங்கலிங்க ஐக்கியமே வாழ்வின் உருவம். எல்லாக் கலைகளும் இலிங்கத்தில் அடக்கம். முப்பத்தாறு தத்துவங்களும் அதில் காணும். திருமூலர் தெளிவாகச் சொல்கிருர்.

மானுடர் யாக்கை வடிவு சிவலிங்கம்
மானுடர் யாக்கை வடிவு சிதம்பரம்
மானுடர் யாக்கை வடிவு சதாசிவம்
மானுடர் யாக்கை வடிவு திருக்கூத்தே.

Lingam is a spiritual symbol of-Siva Siva
Soul-God Unity, Polarity of living forces

சீவ-சிவ இணைப்பின் குறிப்பே சிவலிங்கம். நாம் காணும் இயற்கைப் பொருள்கள் எல்லாம் இலிங்க வடிவே. வான் வளைவு, கதிரவன், நிறைமதி, உடுக்கணம், மலை, மரங்கள், நமது தலை. ஆற்ருேட்டக்கற்கள் எல்லாம் இலிங்க வடிவே, சுத்தவித்தை, ஈசுரம், சதாக்கியம் சக்தி (நாதம்) சிவம் (விந்து) ஆகிய ஐந்து நுட்பமான தத்துவங்கள் இலிங்கத்தில் உள்ளன. இந்த லிங்கம் உலகை ஆளும் சக்திகளின்மேல் பொருந்தியுள்ளது. அந்தச் சக்திகள் இரண்டு, ஒன்று ஆத்துமதத்துவ சக்தி-இது கீழே முக்கோண வடிவாயிருக்கிறது. இது சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து வித்தியாதத்துவத்தில் சேரும். ஆத்தும தத்துவமாவன: ஐந்து பூதம், தன்மாத்திரை ஞான-கர்ம இந்திரியங்கள் (அறி-செயற்கருவிகள்), நான்கு உட்கரணங்கள்.

ஐம்பூதங்களாவன: ஆகாயம், காற்று, தீ, நீர், நிலம். ஐந்து தன்மாத்திரைகள்: ஓசை, ஒளி, ஊறு, சுவை, மணம். ஐந்து ஞானேந்திரியங்கள்; நாக்கு, மூக்கு, கண், காது, உடல். ஐந்து கருமேந்திரியங்கள்: வாய், கை, கால், எருவாய், கருவாய். உட்கரணம் (அந்தக்கரணம்) மனம், புத்தி, சித்தம், அகங்காரம். இந்த 24 தத்துவங்களும் மனமாகி, நுண்மையுற்று வித்தியாதத்துவத்தில் கூடும்.

வித்தியாதத்துவம் ஏழு; காலம், கலை அராகம், புருஷன், மாயை, நியதி, வித்தை—

வித்தியாதத்துவத்தின் உச்சியில் ஒரு நீட்சி காணும். அதுவே உலகாக நீண்டு விரிந்த சக்தி.

ஆத்தும-வித்தியாதத்துவம் அடங்கிய இரண்டு முக்கோணங்களும் சக்தி பீடங்கள்—இவற்றின் மேலேதான் சிவலிங்கம் நாட்டப்பட்டுள்ளது. இது இறைவனின் ஆற்றல் விளக்கம். இறைவன் சக்தி பீடத்தில் விளங்கும் அறிகுறியே இலிங்கம். நம் இதயமே இலிங்க வடிவுதான். நாம் அணுயுகத்தில் இருக்கிருேம். அணுவில் இரண்டு சக்திகள் உள்ளன. ஒன்று எலெக்ட்ரன் (பெண்), மற்ருென்று புரோடன் (ஆண்). இயற்கையின் ஆற்றல் எல்லாம் இவ்வாறே இரண்டு சக்திகளின் இணைப்பு விளக்கமே. புரோடன் எலெக்ட்ரனைக் கூடிப்பிறக்கும் சக்தியே அணுசக்தி. (Nuclear dynamics), இதனுலேயே தான் வானொலி முதல், வான்கலம் வரையில் எல்லாம் நடக்கிறது. இந்த சிவலிங்கமே நடராஜாவாகி அலகிலா விளையாடல் புரிகிறது. ஒரே சிவமே தன் சக்தியால் ஐந்தொழில் ஆடல் புரிகிறது. இலிங்க தத்துவப் கேளீர்.

ஆத்தும தத்துவம் ஆவிடை யாக
வித்தியா தத்துவம் விரிந்ததன் மேலே
சிவசக்தியாகத் திகழும் இலிங்கம்
தோன்றி ஒடுக்கும் ஆன்ற வடிவுமாம்.

இந்தச் சிவமே நடராஜ வடிவமாக ஐந் தொழிலாடல் புரிகிறது.

நான் எப்போதும் என் வழிபடு குருவான நடராஜாவைக் கொண்டு செல்வது வழக்கம். நடராஜாவைக் காட்டி ஒரு மணி நேரம் விளக்கி னேன்.

ஒன்றே சிவமென் றுணர்ந்திவ் வுலகமெலாம்
நன்றே ஒருமையுற நண்ணிய-மன்றே
நடம்புரியும் பாத நளினமலர்க் குள்ளம்
இடம்புரிக வாழ்க! இனிது.

நடராஜரிடம் அன்பர் உள்ளம் ஈடுபட்டது. நடராச வடிவத்தில் நமது சமயதத்துவம் எல் லாம் அடங்கியுள்ளன. நமது சமயம் மட்டுமா? கிறிஸ்துவ இஸ்லாம், சமயங்களும் உள்ளன.

அஞ்சலென் றங்கை காட்டி
அழகிய முறுவல் காட்டிக்
குஞ்சித பாதம் காட்டிக்
குறித்தொரு பொருளைக் காட்டிச்
செஞ்சுடர்ச் சோதிகாட்டிச்
செகவிளை யாடல் காட்டி
நெஞ்சிலே நடஞ் செய்கின்ற
நிமலனே போற்றி போற்றி!

மாணிக்க வாசகர் ''நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க, இமைப்பொழுதும் என் நெஞ்சின் நீங்காதான் தாள் வாழ்க!'' என்று திருவாச கத்தைத் தொடங்குகிறார். அத்தகைய இறை வனையும், அவன் அருட் குறியான இலிங்கத்தை யும் ஆண்-பெண் குறியிணைப்பு என்று அறியா தார் நூல் எழுதிக் கேலி செய்வது எதனால். எங்கள் சமயதத்துவத்தைத் தக்கார் உலகிற்கு விளக்காத குறையாலேதான். இது பெரும் பிழை. இத்தகைய நையாண்டி நூல்களில் காலத்தை வீணாக்காமல் உண்மையறிந்து நடந்தால் உய்வுண்டு என்று பேசினேன். எங்கள் இறைவன் ஒருவனே. அவன் எப்போதும் இனி யான், நன்றுடையான், தீயதில்லான். எல்லா உயிர்களும் அவன் திருமேனியே. அவன் பொது நடத்தரசு. இந்த நடராஜ தத்துவமந்திரமே, ஓம்நம: சிவாய என்ற ஓங்கார பஞ்சாட்சரி. ஓம் - நடராசா - ந - மழுக்கை, ம-முயலகனை அழுத்தல், சி-துடி வலதுகை, வா-இடது வீசு கரம், ய-அபயகரம்.

இடதுகை, தீ—அழித்தல் (முயலகன்—(Hostile sinful demon)

வலதுகை, துடி—தோற்றம்
வ—வீசுகை—அருளல்
ய—அஞ்சலிக்கை (அஞ்சாதே என்பது)

தோற்றம் துடியதனில்
தோயும் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் ஊற்றமாய்

ஊன்றுமலர்ப் பாதத்தில்
உற்ற திரோதம், முத்தி
நான்றமலர்ப் பாதத்தே நாடு.

நடராசரின் திருவாசியே. ஓம்வடிவு. பிரணவ ரூபம்.

நவ்விரண்டு காலதாய்
நவின்ற மவ்வயிறதாய்
சிவ்விரண்டு தோளதாய்ச்
சிறந்த வவ்வு வாயதாய்
யவ்விரண்டு கண்ணதாய்
எழுந்துநின்று நேர்மையிற்
செவ்வையொத்து நின்றதே
சிவாய அஞ் செழுத்துமே.

இவ்வாறு விளக்கவே நண்பர் ''ஹா-இவ்வளவு ரகசியம் உள்ளதா..'' (Ha such an esoteric meaning symbolises this lingam) சிவலிங்கத் தில் என்று வியந்தனர். நான் பேசி முடித்த போது என்னைச் சுற்றி ஐம்பது வெள்ளையர் கருத்துடன் அமர்ந்து கேட்டுக் குறிப்பெடுத்த னர்.. இவ்வாறு விஞ்ஞான-மெய்ஞ்ஞான விளக் கத்துடன் நமது சித்தாந்த சமயத்தை உலகம் முழுதும் விதைத்துள்ளேன். ஆனால் தனிய னேனுக்கு எவர் ஆதரவும் இல்லை. ஆண்டவன் அருளே ஆதரவு-தமிழ்நாட்டுத் திருமடங்களும் பெருமடங்களும் ஆதரவளித்தால் இதோ நாடு நாடாகச் சென்று நமது சமயத்தைப் பரப்பு வேன். சமயப் பயிற்சியளித்து ஆயிரம் ஆயிரம் திருத்தொண்டரை (பாதிரிமாரையும்) பயிற்று வேன். ஓம்சிவம். புனித சகாயம் இல்லாவிட் டாலும் மனிதருக்குள் மனிதனான ஆத்மநாதன் துணை உள்ளது.

தனியே வாழ்கின்றேன்
தனியே செல்கின்றேன்.
தனியேஉலகெங்கும்
தாவிப் பணிபுரிவேன்
தனியேன் பணி நலங்கள்
தலைவா நின்பூசை
இனிதாய் எனையுள்ளே
இயக்கும் பெருமானே....

இவ்வாறு எங்கள் சமயம் வானினும் விரிந்தது; கடலினும் ஆழ்ந்தது. ஆ! அடுத்தபடி ஓர் விஞ்ஞானக் கூட்டத்தில் நடந்ததைச் சொல்லு வேன்; திருக்கோயில் அன்பர் என்னுடன் வருக:

## நாவலர் அலென் மார்ஷல்

எனது உருவும், உரையும் டெலிவிஷனில் வந்ததும், கடிதங்கள் குவிந்தன. நண்பர் கூடினர். அழைப்புகள் வந்தன. ஒருவர் என்னி டம் ஒரு நாவலைத் தந்தார். அது அலன் மார் ஷல் (ALAN MARSHALL) என்ற அறிஞர் நூல். அந்த நூல் மிக இனிமையாக இருந்தது. 'உன் கால்கள் எவ்வளவு அழகு!' ( How beautiful are thy feet ) என்பது அதன் தலைப்பு. இந்த அறிஞரைப் பற்றி, நான் ரஷ்யாவிலே கேள்விப் பட்டேன். இவரது நாவலை ஃப்ரெஞ்சு மொழி பெயர்ப்பில் நான் படித்திருக்கிறேன். இவரது நாவல்கள் பரிசு பெற்றவை. ஏராள மாக விற்பவை.

இவர் ஏழைகளிடம் இரக்கம் கொண்டவர். தொழிலாளர் நண்பர். ஆத்திரேலியாவின் பழங்குடி மக்களிடம் பற்றுக் கொண்டவர். அம்மக்கள் இவர் கதைகளை ஆர்வமுடன் படிக்கின்றனர். இவர் அடிக்கடி பழங்குடிமக்கள் இருக்கும் இடம் சென்று இனிய கதைகள் சொல்லி அவர்களை ஊக்கப்படுத்துவது வழக்கம். பழங்குடிமக்களைப் பற்றி THESE WERE MY TRIBESMEN என்ற ஓர் அரிய கதை நூலையும் அவர் எழுதியிருக்கிறார். பழங்குடிமக்களை அன்புடன் நடத்த வேண்டும் என்றும் இவர் அரசாங்கத்திற்கு அடிக்கடி சொல்லி வந்தார்.

ஒரு நண்பர் என்னைப் பற்றி அவரிடம் கூறினர். அழைப்பு வந்தது. நான்கு வெள்ளை அறிஞர்களுடன் சென்றேன். அலன் மார்ஷல் ஒரு ஒதுக்கமான இடத்தில் மரக்குடில் கட்டி வசித்தார். சுற்றிலும் தோட்டம். அவர் அக்காள் என்னை அன்புடன் வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றாள். அலன் மார்ஷலின் நூல் அறையில் நான் அமர்ந்தேன். என்னைச் சுற்றி, பீரோபீரோவாக நூல்கள் அடுக்கியிருந்தன. நான் பார்த்துக் கொண்டே வந்தபோது, எனது நூல்களையும் கண்டேன். 'Pilgrim Soul' என்ற எனது நூல் அவரது மேஜைமேல் இருந்தது. அதைப் பாதி படித்து அடையாளக் குறிப்பு வைத்திருந்தார். நான் சிறிது நேரம் நூலகத்தைச் சுற்றிப் பார்த்து, திரும்பியபோது, அவர் தமக்கை ஓடி வந்தாள். ''என் சகோதரன் உடல் நலம் இல்லாமல் படுக்கையோடு இருந்தான். தங்கள் பெயரைத் தெரிவித்தேன். உடனே துள்ளி எழுந்தான். இதோ நாற்காலி வண்டியில் ஊர்ந்து வருகிறான். என்றதும் வியந்தேன். நானே அவரைப் பார்க்கிறேன் என்று நாலடி செல்வதற்குள், அலன் மார்ஷல் நாற்காலியில் வந்து சேர்ந்தார். அப்படியே அமர்ந்தார். எனக்கு ஒரு கோப்பையில் கனிச்சாறில் தேன் ஊற்றித் தந்தார். நான் பருகிக் கொண்டேயிருந்தபோது, "I make an interesting pilgrimage with your pilgrim soul'' (தங்கள் பயணாத்மாவுடன் இனிது யாத்திரை செல்கிறேன்) என்று, எனது நூலைக் காட்டினார். நான் "I am walking with your graceful style and thrilling story'' (தங்கள் அணிநடை ஆவேசக்கதையுடன் உலாவுகிறேன்) என்று அவர் நூலைக் காட்டினேன். உடனே அலன் மார்ஷல் தமது நூல் அடுக்குகளை அழகாகக் கட்டி அன்பளித்தார். நான் எனது நூல்களை ஒரு கவிதையுடன் அவருக்கு அளித்தேன். இருவரும் நான்கு நிமிடங்கள் தியானம் செய்தோம். அவர், "How peaceful is your presence'' (தங்கள் சமூகம் எவ்வளவு அமைதி நிரம்பியிருக்கிறது) என்றார். உடனே தமது நூலில் அடியில் வருமாறு எழுதி, ஒரு ரோஜா மலருடன் அளித்தார்.

For Kavi-yogi

Whose presence in my study has
transformed it into a place of
Peace and beauty.
—With love from Alan Marshall, 10th April '76

(கவியோகிக்கு அன்பளிப்பு. அவர் முன்னிலை எனது படிப்பகத்தை அழகும் அமைதியும் பொலியச் செய்தது-அன்புடன் (அலன் மார்ஷல் 10-4-76).

அவர் எழுதும்போது, அவர் உடலைக் கவனித்தேன். திடுக்கிட்டேன். அவருக்கு ஒரு கால் தொடை மட்டும் துண்டிக்கப்பட்டிருந்ததைக் கண்டேன். (அந்தோ)

அவர் ''என் கால் ஒரு கொடிய சம்பவத்தால் துண்டிக்கப்பட்டது. கால் போன பிறகு இருந்த படியே இருந்து என் கை சுறுசுறுப்பாக வேலை செய்கிறது. என் தலையே போனாலும், கலையை விடேன். என் உள்ளம் உலக நலத்திற்காகத் துடிக்கிறது. என் அன்பு முழுவதும் உலக மக்களெல்லாம் ஒன்றாக வாழ வேண்டும். நான் கண்ணாரக் காண வேண்டும். ஜாதி, மதம், நாடு, நிறம், உயர்வு, தாழ்வு, வறுமை, செழுமை, அடிமை, ஆட்சி என்பதன்றி, வடக்கு தெற்கு, கிழக்கு, மேற்கு என்ற எல்லைக் கோடன்றி உலகமெல்லாம் ஒன்றாக வாழவேண்டும். எல்லாரும் உழைத்துப் பிழைக்க வேண்டும்'' என்றார். அப்போதுதான் பாட்டு ஒன்று எழுந்து முழங்கியது. அதைத் தமிழில் சொல்லுகின்றேன்.

மனிதச் சமுதாயம் ஒன்றே—அதன்
மன்னவ னை மனச்சாட்சி ஒன்றே
இனிய உலகமும் ஒன்றே—உலகு
எங்கும் விளங்கும் இறைவனும் ஒன்றே!
எல்லாரும் இன்புற வாழீர்!

ஒரே கடவுள் ஒரே உலகம்
ஒரே ஆன்மநேயர் நாம்
ஒரே வானக்குடை நிழலில்
ஒரே குலமாய் வாழுவோம்!

Hail pure Almighty grace
Eternals Guiding Light
Give us strength and
To serve the day and Light
Let all be one in thee
Equal children of grace
And let human hearts see
One God: One better world
And one transformed
Cosmic race prosper all; Prosper all,
Conscious of the one in all.

இந்தப் பாட்டை அக்காள், பியானோவில் வாசித்தார். அலன் மார்ஷல் மிக்க மகிழ்ச்சி அடைந்தார். "Soul sings'' என்ற எனது ஆங்கிலப் பாடல்களைத் தந்தேன். உடனே அதிலிருந்து ஒரு பாடலை எல்லாரும் இனிது பாடினர். நாங்கள் ஒரு மணி நேரம் இலக்கியப் பேச்சு பேசினோம். பேச்சில் சாசர் முதல் கோர்கீ வரையில் எல்லாப் புலவரும் வந்தனர். அவருடைய நாவல் ஒன்றை நான் தமிழாக்க ஒப்புக் கொண்டேன். எனது தமிழ்க் கவிதைகளையும், கதைகளையும், அவர் ஆங்கிலத்தில் ஆக்கி, வெளி

யிட வேண்டினர். ஒப்புக்கொண்டேன். அன்று நாளிதழ் வந்தது. அதில் செவ்வாய்க் கோளத்தை வான்கலங்கள் ஆராய்வதாகச் செய்தி வந்தது. அலன் மார்ஷல் சிரித்தார். என்னைப் பார்த்தார். ''நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்'' எனக் கேட்டார். நான் ''மனிதன் தியானத்தினுல் உள்ளே தன்னை ஆராய வேண்டும். கோடி கோடியாகச் செலவிட்டு வான்கலம் ஊர்வதில் பயன் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. இருந்தாலும், விஞ்ஞானத்தின் வியன்பெரும் ஆற்றலை அறிகிறோம். கீழியற்கையில் புரளும் மனிதன் தெய்வ மண்டலத்தில் (சகஸ்ராரம்) ஏறி, தனது கடவுள் தன்மையை உணர வேண்டும். அப்போது எல்லாரும் ஆன்மநேயர். சாதி மத வேறுபாடெல்லாம், அரசியல் பிரிவினையெல்லாம் அறியாமையின் வேலைதான். மனிதன் தன்னை அறிந்து மனித சமுதாயத்தைத் தன்மயமாக அறிந்து, உலகை ஆண்டவன் கோயிலாக உணர்ந்து,விஞ்ஞான சக்தியை உலக வாழ்வின் வளமைக்கு இனிது பயன்படுத்தினுல் போர் வெறி போக்கற்றுப் போகும்'' என்று பேசி, எனது (Peace for All) (எல்லாருக்கும் அமைதி) என்ற பாட்டைப்பாடினேன். எல்லாரும் தாளம் போட்டு நுகர்ந்தனர். இந்தப் பாட்டை எல்லாரும் பாட வேண்டும் என்ருர் அலன் மார்ஷல். கூட இருந்தவர்களெல்லாம் ''நீங்கள் அமெரிக்க, ரஷ்ய வான்கல வீரர்களுடன், சந்திர மண்டலம் சென்று இந்தப் பாட்டைப் பாட வேண்டும். நாங்கள், இங்கே பூமியிலிருந்து கேட்க வேண்டும்'' என்ருர்கள். நான் அலன் மார்ஷலைப் பார்த்து, நீங்கள் ஆஸ்திரேலியாவிலிருந்தே இந்த உலகிற்காகக் கதை எழுதுகிறீர்கள்; சந்திர மண்டலத்துக்குப் போனுல் என்ன கதை எழுதுவீர்கள்? என்று கேட்டேன். ''நீர் இந்தியர்; சந்திர மண்டலத்திற்குச் சென்ருல் என்ன கதை எழுதுவீர்கள்? என்று கேட்டார். நான் பணஞ்செலவழிக்காமல் கோடி கோடியாகக் கொட்டாமல், என் மனமாகிய ஸ்புட்னிக்கில் ஏறி இதோ சந்திரமண்டலம் சேர்ந்துவிட்டேன். இனிக் கதையைக் கேளுங்கள் என்று தொடங்கினேன்.

## வெண்மதியில் தமிழ்ஸ்கி

கனவா! நனவா ஊகமா! உண்மையா மயங்காதீர். ''வான்கலம் அல்ல ஊன்கலம் அல்ல'' நான்-கலத்தில் ஏறி வெண்மதியில் குதித்து நடக்கத் துடித்தனர், அனுராமனும் அவன் மனைவி நிலாமதியும். இருவரும் எப்போதும் பாடும் பாட்டு இதுவே (தமிழ் மொழி பெயபெயர்ப்பு)

காதலுக்குத் தூதுசெல்வாய்வெண்மதி
கடல்பொங்கி ஆடவைப்பாய்-வெண்மதி
கடலை ஆட்டும் நடுவனே—வெண்மதி
வீதியிலே ஓடுகின்ற பிள்ளைகளின்
விளையாட்டிற் கலந்துகொள்வாய்-வெண்மதி
அப்பாலோ விண்கலத்தை நடத்திவந்த
ஆம்ஸ்ட்ராங்கை வரவேற்ருய்—வெண்மதி
இப்பால் நாங்கள் இருவருமே—உன்னிடம்
இனிதுற்று வாழச்செய்வாய்-வெண்மதி

Lead us both to walk on Thee
Like Apollo—Armstrong O Moony !

ஆம்ஸ்ட்ராங் மதிமண்டலத்திலே நடந்த நாள் முதல், அதே பேச்சு, அதே மூச்சு. ''மதிமண்டலத்தி நான்' என்ருெரு பாட்டும் பாடினுன் மதிப்பித்தன். நான் என்பதை நாம் என்று திருத்தினுள் நிலாமதி. ''We in the Moon, very soon'' (விரைவில் மதியில் நாங்கள்) என்ற காவியம் எழுதி அதில் ரஷ்ய விஞ்ஞானத்தைப் புகழ்ந்து கொண்டாடினர் இருவரும்! ஆதலால் இவர்களுக்கு ரஷ்யா பரிசளித்ததுடன் (ரூ. 10,000), இரண்டு மாதம் ரஷ்யாவில் யாத்திரை செய்ய வசதியும் செய்தது. இருவரும் அணு விஞ்ஞானக் கவிகள்.

விஞ்ஞானக்கவியே பாடுவோம்
அஞ்ஞானக் கவிகளைச் சாடுவோம்.

என்று பாடும் இவர்களை, மாஸ்கோ விஞ்ஞானிகளும் புலவர்களும் வரவேற்றுப் போற்றினர். அனுராமனும் நிலாமதியும் ஸ்புட்நிக் வகுப்பிலே சேர்ந்து பயின்றனர்.

மேலே அனுராமன், நிலாமதி இருவரும் ஸ்புட்நிக் நுட்பம் தேர்ந்து பரிசு பெற்றனர். இவர் படம் உலகெங்கும் செய்தித்தாள்களில் வந்தது. அமெரிக்காவும் இவர்களை வரவேற்றுப் போற்றியது. நோவோஸ்கிஇதழாசிரியர் பெனிக் இவர்களைக் கருத்துடன் போற்றினுர். போல்ஷாய்அரங்கத்தில் நடந்த விஞ்ஞான மன்றிலே இருவரும் கலந்து கொண்டு, ''New Life in the Moon''(மதியிலே புதுவாழ்வு) பற்றிப் பேசினர். மன்றம் மெச்சியது; பெயர் பரவியது. லூனு என்ற விண்ணுலாவீராங்கனையும் அவள் கணவன் ஷோகலோவும் நமது விண்புலவருடன் கூடி மூன்ருண்டுகள் ஆராய்ந்து, ஸ்புட்நிக்புலமைப் பட்டம் பெற்றனர். நால்வரும் உணவாராய்ச்சி நடத்தி சத்துணவு மாத்திரைகள் கண்டுபிடித்தனர். கோதுமை, சோயாபீன், சோளம் தக்காளி பீட்ரூட் காரட்டு, காலிஃப்ளவர் முந்திரிப் பருப்பு, வாதாமி பிஸ்தாப்பருப்பு, கனிச்சாறு: தேன் எல்லாம் கலந்து கூழாக்கி மின்னடுப்பிலே காய்ச்சி மாத்திரைப் பொறியிலே பாய்ச்சி உணவு மாத்திரைகள் செய்தனர். வாயில் எச்சில் ஊறவும், தாகம் தணிக்கவும் மாத்திரைகள் தயாரித்தனர். ஓமம், சீரகம், கற்பூரவல்லி, கருவேப்பிலை எல்லாம் சேர்த்து மூச்சுக் களிம்பு தயாரித்துக் கொண்டனர். எல்லாம் ஆயத்தமானதும்-சோவியத் அரசாங்கம் அவர்களை ஆசிகூறி விண்ணுடைபூட்டி, வீனசில் ஏற்றி எக்காளம் ஊதியது. வெற்றிப்பாண்டில் முழங்கியது. பட், படபட்! டும் டுகார்! ஸ்புட்ட்ட-இடிவெடிப்பு, புகைப்படலம்! வீனஸ் ஐயோனிக் மண்டலத்தைத் தாண்டி ஆகாயத்திலே பாய்ந்து பாய்ந்து மேலுந்தி விரைந்தது; மதியைச் சுற்றியது. அனுராமனும் நிலாமதியும் ஸ்பைடரில் இறங்கினர். அந்த இடத்தில் சொதசொதப்பிருந்தது. நூறு கிலோமீட்டர் சென்று பார்த்தனர். ஒரு குன்று இருந்தது. அதில் நீரூற்றுக் கண்டனர்.

அக்குன்றில் ஒரு குகையிருந்தது. அதில் இருவரும் குடியேறினர். உணவு மாத்திரைகள் ஆறு மாதம் போதும். ஹானுவும் ஷோகோலோவும் அவர்களைப் பார்த்துப் படம் பிடித்துக்கொண்டு நேராக மாஸ்கோ சென்று, உலகம் முழுதும் செய்தியனுப்பினர். ''வெண்மதியில் வீடுகண்ட தம்பதிகள் அனுராமனின் அற்புத வெற்றி' 'மதிமண்டலத்தில் குடியேறிய இந்தியர்' அங்கே மக்கள் இருக்கலாம் என்று விளக்கிய இருவர்— என்றெல்லாம் உலகெங்கும் செய்தி பறந்தது. அனுராமனை சோவியத் அறிஞர் தமிழ்ஸ்கி என்றும், நிலாமதியை குறள்ஸ்கி என்றும் அழைத்தனர். இருவரும் திருக்குறளின்பத்தைப் பரப்பினர். யோகசித்தியை வாழ்ந்தனர். ஐரோப்பிய அமெரிக்க விஞ்ஞானிகளெல்லாம் மதி மண்டலத்தில் ஆய்ந்து யுரேனியமும் டைடானியமும் கண்டு அணுகுண்டு செய்ய உலைமூட்டினர். இவரிடையே பே. பொபோ (பேராசை பொருமை போட்டிப் போர்) வலுத்து அமைதி குலைந்தது. தமிழ்ஸ்கி மட்டும் எப்படி அமைதியாக வாழ்கிறான் என்று சில அறிவாளர் அறிந்து அவன் பக்கம் சேர்ந்தனர்.

தமிழ்ஸ்கியும் குறள்ஸ்கியும் யோகவிஞ்ஞான, சமாஜம் (யோ. வி. சம்) நாட்டி வாழ்வு வளம் பெற விஞ்ஞானத்தையும், ஆத்மசக்தி பெற யோகத்தையும் பயனுக்கினர். இதனால் உடல் உயிர் மனம் உள்ளம் தூயராகி ஆன்மநேயராகி இன்புற்றனர். அவர் நல்வாழ்வு வாழ்ந்து நன் மக்களைப் பெற்று நல்லவுழைப்பும் பிழைப்பும், யோகமும் போகமுமாக வாழ்ந்தனர். அனைவருக்கும் அன்பிசைத்தனர். ஆடையுணவுக்கு வேண்டியமட்டும் பாடுபட்டனர். அன்பே உயிர்நிலை, அறமே இன்பம், வாய்மையே தூய்மை, தியானமே அமைதி, உழைப்பே பிழைப்பு, அருட்பணியே அமைதி என்ற கொள்கைகளை எங்கும் எழுதி வைத்தனர். ஆனால் சமயோகிகள் மனோபலத்துடன் தேக பலமும் பெருக்கினர். தீமையை வெல்லும் தூய்மைத் திறன் அவர்களிடம் இருந்தது. நெஞ்சில் உறுதி, நரம்பில் சக்தி, வாழ்வில் நேர்மையிருந்ததால், யாரும் அவர்களை எதிர்க்க முடியவில்லை. மதி மண்டலத்துடன் இந்த உலகின் விதிமண்டலமும் மாற யோகிஸம் பணிபுரிந்தது.

வெறும் விஞ்ஞானிகள் யுரேனிய உலையில் நாளைக் கொட்டி, அணுக்கருவிகளைச் செய்து குவித்து பேபொபோ வெறியர் ஆயினர். இவர்களை அமைதிநாடு. வோர் போர்ஸ்கிர் என்றழைத்தனர். ஒருநாள் பொருமை முற்றி போர்ஸ்கிர் குவித்த டைடானியக் கிடங்கில் டமாடமார்ஸ்கி ஒரு கோபால் வெடியை அடித்தான் டபடபதடதடடும்டும் டுமீல் டுமீல் என்று வெடித்து விஞ்ஞான வட்டம் முழுதும் பிணக்காடானது. அதில் தப்பிப் பிழைத்த மூன்ஸ்கி, ஞான்ஸ்கி, நான்ஸ்கி, சிங்கவ்சங்மங் முதலியோர் யோகிசமே நல்லதென்று தமிழ்ஸ்கியிடம் புகலடைந்தனர். அனைவரும் சாந்தகீதம் பாடி சமயோக விஞ்ஞானிகளாகி அன்பும் ஆற்றலும் ஆன்ம நேயமும் கொண்டு வாழ்ந்தனர். தமிழ்ஸ்கி இன்று சென்னை அடையாற்றிலே யோக விஞ்ஞான சமாஜம் நடத்தி வருகிறார்.

அன்பும் ஆன்ம நேயமும்
அறமும் பொருளும் அருளுடன்
இன்ப வாழ்வு நல்குமே
இதயசாந்தி மல்குமே
புதிய யோக போகத்தால்
பூரணம் பொலியுமே
மதிமயக்கு நலியுமே
மங்கலந்துலங்குமே
மனமொன்றாகி இனமொன்றாகி
மாந்தர் சாந்தராகியே
தினமும் தியானஜபதபத்தால்-யோக
சித்திபெற்று வாழுவோம்
ஓம் சுத்தசக்தி ஓம்
ஓம்சுத்தசக்தி ஓம்.

இச்சிறு கதையை மார்ஷலும் நண்பரும் மிகவும் ரசித்தனர். அவர் வேடிக்கையாக Alanski loves Tamilski dearly அலன்ஸ்கி தமிழ்ஸ்கியை அன்புடன் நேசிக்கிறார் என்றார். நண்பர் என்னை மற்றொரு மலை முனிவருக்கு அறிமுகப்படுத்தினர்.

# 'செறியும் பிறவிக்கு நல்லவர் செல்லன்மின்'

பேராசிரியர் திரு செ. வேங்கடராமச் செட்டியார், சிதம்பரம்

அறிவால் சிவனே என்று ஆன்றோர் போற்றும் சான்றாண்மை மிக்கவர் மணிவாசகப்பெருமான். ஞான நெறியை விளக்க வந்து ஞானியாகவே வாழ்ந்து காட்டிய மாண்புமிக்கவர் அவர். அவர் இயற்றிய திருவாசகம்போலப் படிப்பவர் நெஞ்சையும், வலிய என்பையும் உருக்கவல்ல திருப்பாடல்கள் இதுகாறும் யாண்டும் தோன்றவில்லை எனத் துணிந்து கூறலாம். பாண்டியனுடைய முதலமைச்சராய்த் தென்னவன் பிரமராயன் என்ற பட்டத்துடன் சிறப்புற ஆட்சி செலுத்திய அப்பெருமான் பாண்டியனுக்குக் குதிரை வாங்கச் சென்ற வழியில் திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் குருவாயிருந்து அடியார்க்கு ஞானம் நல்கிய இறைவனது திருக்கோலத்தைக் கண்டு, ஆட்பட்டுத் தம்மையும் தம் பதவியையும் மறந்து தம்பாலிருந்த பொருளைக் கொண்டு அங்குத் திருக்கோயில் கட்டியருளுகின்றார். அது கேட்ட பாண்டியன் அவரை வரவழைத்துக் கேட்டபோது, சிவபிரானின் திருக் குறிப்பறிந்து ஆவணி மூலத்தில் குதிரைகள் வரும் என வாக்களித்து விடுகின்றார். அந்நாள் வந்தும் குதிரைகள் வராமை கண்டு பாண்டியன் வெகுண்ட நிலையில், அடிகளார் அஞ்சி வருந்தியபோது, சிவபிரான் குதிரைச் சேவகனாய்க் குதிரைப் படைகளுடன் வந்து காட்சியளிக்கின்றார்.

மாணிக்கவாசகர் இந்நிகழ்ச்சியை:—

'அரியொடு பிரமற் களவறி யொண்ணான்

நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்

ஆண்டுகொண் டருள அழகுறு திருவடி

பாண்டியன் தனக்குப் பரிமா விற்று

ஈண்டு கனகம் இசையப் பெறாஅது

ஆண்டான் எங்கோன்'

எனக் கூறியருளுகின்றார். சிவபிரான் தனக்குச் செய்த அருள்களில் குதிரைச் சேவகனாக வந்து ஆட்கொண்ட அருளே மிக்க சிறப்புடையதாகலின், மணிவாசகர் அவ்வுருவத்தையே போற்றிப் புகழும் இயல்பினராயினர். இறைவன் தம்மை யாட்கொண்டபின் 'உற்றாரை யான் வேண்டேன், ஊர் வேண்டேன், பேர் வேண்டேன்' என வெறுத்துத் தென்னவன் பிரமராயன் என்ற பட்டத்தையும் அமைச்சர் பதவியையும் துறந்து, தொழுதகை தலை மேலேறத் துளும்பு கண்ணீருள் மூழ்கி அழுதடியடைந்த அன்பராகின்றார். அவ்வன்பினால் கசிந்து கசிந்து உள் உருகி உருகிப் பாடிய திருவாசகம் நம்மனோர் நெஞ்சத்தையும் பிற நாட்டிலிருந்து வந்த பிற மதத்தவர் நெஞ்சங்களையும் உருக்கி வருவதை யாரே அறியாதவர்? அத் திருவாசகத் திருப்பாடல்கள், மணிவாசகர் தம் சிறுமையையும், தம்மையாண்டு கொண்ட சிவபிரானின் பெருமையையும் புலப்படுத்துவனவும், தம்மை யாண்டு கொண்டருளுமாறு வேண்டுவதைப் புலப்படுத்துவனவும், தம்மை எளிதின் ஆண்டுகொண்டருளிய இறைவனை வணங்கி வழிபடுமாறு உலக மக்களை அழைத்துச் செவியறிவுறுப்பதைப் புலப்படுத்துவனவுமாகப் பெரும்பாலும் அமைந்துள்ளன என்னலாம். இந்த முத்திறப் பாசுரங்களுள், இறுதியில் குறிப்பிட்ட திருப்பாசுரங்கள் மணிவாசகப் பெருமான் 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் கருத்தால் பாடியருளினவை யாகும்.

பற்பல ஆண்டுகள் புனலையும் காற்றையுமே யுண்டியாகக் கொண்டு உடம்பு வற்றித் தாம் இருந்த விடத்துப் புற்றும் மரமும் தோன்றுமாறு தவஞ் செய்த முனிவர்களும் பெறமுடியாத உண்மை ஞானத்தை மிக எளிதாகச் சிவபிரானின் பெருங் கருணையால் பெற்றவர் மாணிக்கவாசகர் ஆதலின், உலக மக்களும் அவ்விறைவனை வழிபட்டு அந்த உண்மை ஞானத்தை எளிதாகப் பெறலாயிருக்க, அதற்கு முயலாது, வீணே காலம் கழிப்பதைக் கண்டு வருந்தியருளுகின்றார். அடியவர்க்கு எளியனாய்ச் சிவபிரான் அருள் ஞானத்தை நல்கக் காத்திருக்கும்போது அதனை விடுத்து உலக மக்கள் மிகச் சிறிய இவ்வுலக இன்பத்தையே விரும்பிக் காலமெல்லாம் உழல்கின்றவராய் இறுதியில் துன்பக் கடலில் ஆழ்ந்து அழிபவர்களாகவே வாழ்கின்றனர். இத்தகைய மக்களுக்கு இறைவனின் பெருங் கருணையை விளக்குவது எப்படி? தையலார் மையலிலே தாழ்ந்து வீழும் மக்களை உய்யுநெறி செலுத்துவது எப்படி என்ற சிந்தனையில் ஆழ்கின்றார்.

மக்கள் உள்ளம் இன்பத்தைத்தான் விரும்புகின்றது, இன்ப வெள்ளத்தில் நீந்திக்குளிக்கின்ற எண்ணம் யார்க்குத்தான் இல்லை? ஒவ்வொருவர்க்கும் உள்ளது. ஆயினும் அடைதற்குரிய நெறியில் செல்ல முயல்வது தானில்லை. முயற்சி யேதுமின்றி அப்பேரின்பம் எளிதாகக் கிடைக்குமாயின், எல்லோரும் அப்பேரின்பத்தைப் பெற முந்துவார்கள். அத்தகைய எளிய நிலையிலும் சிவபிரான் அருள் செய்கின்றான் என்பதை மக்களுக்கு விளக்கினால் பலர் இச்செந்நெறியில் சேர்ந்து செம்மை நலம் பெறுவார்கள்; என்ற முடிவிற்கு வருகின்றார். உலக மக்களைப் பார்த்துச் சொல்கின்றார்.—

'நீங்கள் எல்லோரும் இன்ப வெள்ளத்தில் நீந்திக் குளிக்கவேண்டும் என்ற நெஞ்சம் கொண்டு தான் இருக்கின்றீர்கள். உங்கள் நெஞ்சம் விரும்பியவாறு அப்பேரின்பத்தைப் பெற நல்ல வாய்ப்பு இப்போது வந்திருக்கின்றது. பாரில் உள்ளோர் இன்ப வெள்ளத்தை யுள்ளங்கொள்ளுமாறு குதிரை மேல் வந்த சிவபிரான், இப்போது ஒப்பற்ற இன்ப வெள்ளத்தின் உருவத்தைத் தாங்கிக் கொண்டு தொண்டரைப் பெறவேண்டும் என்னும் ஆர்வம்

கொண்டவராய் வருகின்றுன். பேரின்ப வெள்ளத்துள் விளங்கும் அவன் திருவடிகளை வந்து வணங்கிப் போற்றுங்கள்!' என்று ஆற்றல் மிக்க அன்பால் அழைக்கின்றதை

நீரின்ப வெள்ளத்துள் நீந்திக் குளிக்கின்ற
நெஞ்சங் கொண்டீர்
பாரின்ப வெள்ளங் கொளப்பரி மேற்
கொண்ட பாண்டியனார்
ஓரின்ப வெள்ளத் துருக்கொண்டு தொண்
டரை யுள்ளங் கொண்டார்
பேரின்ப வெள்ளத்துள் பெய்கழலே
சென்று பேணுமினே

(திருப்பாண்டிப் பதிகம்)

என்றதிருப்பாசுரத்தால் அறியலாம். இறைவன் இன்பம் மிக்க திருக்கோலத்தோடு வருகின்றபோது அவன் அழகில் ஈடுபாடு பெரிதுடையராய் அவன் திருவடிகளை வணங்கிய அளவில், அக்கருணை வள்ளல் தன்னை வணங்கிய அன்பர்களின் பிறவித் துன்பத்தைப் போக்கிப் பேரின்பமுத்தி தருவான்: என உடன்பாட்டு முகத்தான் மணிவாசகப் பெருமான் அன்பு கூர்ந்து சொல்லிய சொற்களைக் கேட்டுச் சிலரே அச்சிவபிரானை வணங்கி அவனருளுக்கு உரியராகின்றனர்.

மற்றவர்கள் எல்லாம் மாணிக்க வாசகரின் சொல், தம்மை நல்வழிப்படுத்துதற்குரிய சொல் என்றும் உணராமல், தத்தம் உலகியற் பணிகளையே செய்ய விரைகின்றுர்கள். உலகியற் பணிகள் யாவும் வைத்த நிதி, பெண்டிர் மக்கள், குலம், கல்வி எனும் பித்தினை வளர்ப்பதாய் மேலும் மேலும் இவ்வுலகில் பிறந்து பெருந்துயர் அடைதற்கு ஏதுவாதலை அவர்கள் எண்ணியும் பார்த்திலர். தாம் செய்யும் உலகியற் செயலே நற்செயலாகும் என்ற இறுமாப்புடையவராய், ஞானத்திற்கு நல்வழி காட்டும் மாணிக்கவாசகரையே பித்துக் கொண்டவர் என்று ஏசி மகிழ்கின்ற நிலையிலேயே நிற்கின்றனர். மக்கள் மனநிலையை மணிவாசகர் நன்கு அறிகின்றுர். பிறவித்துயரையே விரும்பி யேற்றுக் கொள்வார்போல் அப்பிறவிக்கேற்றவற்றையே செய்து மகிழ்கின்ற இவர்களை என் சொல்லித் திருத்துவது என்று பெரிதும் சிந்தித்துப் பார்க்கின்றுர்.

வேண்டாம் என்று மேலோர் சொல்வதை வேண்டும் என்று செய்தலிலும், அவர்கள் செய்ய வேண்டும் என்று சொல்வதைச் செய்யாமல் இருப்பதிலும், பெரும்பான்மையான மக்கள் ஆர்வமுடையவராக இருத்தலை, மணிவாசகப் பெருமான் தாம் அமைச்சராகப் பணியாற்றியபோது பன்முறை பார்த்திருக்கின்றுர். எனவே, உடன் பாட்டுச் சொல்லால் அவர்கட்கு உபதேசம் செய்வதைக் காட்டிலும், எதிர்மறை முகத்தால் சொன்னல் அது கேட்டு அம்மக்கள் இறைவனைத் தொழுவதில் ஆர்வங்காட்டுவர் என்று எண்ணங் கொண்டார்.

நோயாளி ஒருவர் தம் நோய் நீங்க வேண்டும் என்ற விருப்பம் உடையவராயின், அந்நோய் தீர்க்கும் நல்ல மருத்துவரை நாடிச் சென்று கண்டு தம் நோயைத் தீர்த்துக் கொள்வார். அந்நோயைத் தீர்க்கும் மருத்துவரை அடையாதது மட்டுமன்றி அந்நோய் வளர்வதற்குரிய வழியிலேயே அவர் ஒழுகுவராயின் அவரை என்னவென்று சொல்வது? நோய்க்கு நண்பர்—நோய்க்கு நல்லவர்—என்று தானே சொல்லவேண்டும். அந்த நோய்க்கு நல்லவரைப் பார்த்து அருளாளர் ஒருவர், 'நல்ல மருத்துவர் ஒருவர் வந்திருக்கின்றுர்; அவரைக் கண்டால் இந்நோய் நீங்கும்; இனிது வாழலாம்' என்று சொல்கின்றுர். அதைக் கேட்டு அந்நோயாளி உடனே அம்மருத்துவர்பால் செல்ல வேண்டும். அங்ஙனம் செல்லாது அந்நோய் பெருகுதற்குக் காரணமானவற்றையே செய்து கொண்டு துன்புறுவதைக் கண்டால் அவ்வருளாளர்க்கு எப்படியிருக்கும்? சிறிதும் சினம் கொள்ளாமல் இருக்க இயலுமா? சினம் வருகின்றது. சினங்கொண்டு கூறும் சொல்லும் அந்நோயாளியின் நோயை நீக்கும் கருத்தினதாகவே இருக்க வேண்டும் என்று, அவ்வருளாளர் கருதிச் சொல்கின்றுர்.

''நோய்க்கு நல்லவர்கள் அந்த நல்ல மருத்துவரை அடையாதீர்கள். அடைந்தால் நும்நோயை ஒழித்துவிடுவார்; பின்பு நோயைப் பிரிந்து நீங்கள் வருந்த வேண்டியிருக்கும்.'' என்று கூறுகின்றுர். உடனே அந்த நோயாளி அவர் சொல்லை நினைத்துப் பார்க்கின்றுர். நம்மை இவர் 'நோய்க்கு நண்பர்—நோய்க்கு நல்லவர்' என்றன்றே இகழ்கின்றுர். நாம் அப்படி நோய்க்கு நண்பராகவா இருக்கின்றேம்? இல்லையே, என்ற உணர்வு தோன்றுகின்றது. அம் மருத்துவரிடம் செல்லவேண்டாம் என்று சொல்ல இவர் யார்? யான் சென்று அம்மருத்துவரைக் காண்கின்றேன், என்று சினத்தோடு விரைந்து செல்கின்றுர். அம்மருத்துவரைக் காண்கின்றுர். அரிதில் காணப்பெற்ற அம் மருத்துவரால் தீரா நோய் தீர்கின்றது. மகிழ்ச்சியுறுகின்றுர் நோயாளி. அவ்வருளாளர் உடன்பாட்டு முகத்தால் சொல்லியபோது அம்மருத்துவர்பால் செல்லாத நோயாளி, அவர் எதிர்மறை முகத்தால் சொல்லியவுடன் சினவுணர்ச்சியோடு எழுந்து சென்று அம்மருத்துவரைப் பார்த்து நோய் நீங்கப்பெற்றதுபோல, இறைவனுடைய பெருங்கருணையை விரித்துரைத்து அக்கருணை வள்ளலைக் கண்டவுடனே பிறவிக் கடலைக் கடந்து பேரின்பம் அடையலாம் என்று மணிவாசகர் கூறக் கேட்டும் அவர் சொல் நெறியே சென்று இறைவனைக் கண்டு பயன் பெற விரும்பாது, பிறவி மேலும் மேலும் நோய்வரற்குக் காரணமானவற்றையே செய்து திரிகின்ற மக்களை இறைவனிடம் விரைந்து செலுத்திப் பிறவி தவிருமாறு, தூண்டு முகத்தால் தம் உபதேசத்தை மணிவாசகப் பெருமான் எதிர்மறை முகத்தால் சொல்லுகின்றுர்.

''மேலும் மேலும் தொடர்ந்துவரும் இயல்புடைய பிறவிக்கு நல்லவர்கள்—நண்பர்களாகவுள்ளவர்கள்-செல்லாதீர்கள். எக்காலத்தினும் இக்காலம் மிகக் கொடியது. பாண்டியனது நல்ல நாட்டுக்குத் தலைவனுகிய சிவபிரான் எழுந்தருளும் காலம் இது. அவன் ஞானமாகிய ஒண் கதிர்வாளை உறையில் நின்றும் உருவிக்கொண்டு ஆனந்தமாகிய குதிரையைச் செலுத்திக்கொண்டு வருகின்றுன். அவன் வரும்போது எதிர்ப்பட்டோரின் பிறப்பை இருநிலத்தே புரளுமாறு அந்த ஞான வாளால் எறிந்து விடுவான். எனவே, பிறவிக்கு நல்லவராக உள்ளவர்கள் இப்போது அவன் வரும் வழியில் செல்லாதீர்கள்! என்று நகைச்சுவை தோன்றக் குறிப்பு மொழியால் கூறுகின்றுர்.

இச் சொல்லைக் கேட்ட எவரும் பிறவிக்கு நண்பர் எனத் தம்மைச் சொல்லிக் கொள்ள விரும்பாரன்றே! 'பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்; பிறவாருறுவது பெரும்பேரின்பம்' என்பது உண்மையாதலை நினைந்து, அத்தகைய துன்பம் தரும் பிறவிக்குத் தம்மை நல்லவராக்கிக் கொள்ளாமல் பிறவிக்குப் பகைவராய்த் தம்மை யாக்கிக் கொண்டு அருள் உருவாகிய இறைவனை எதிர்ப்பட்டு அவன் ஞான வாளினல் தம் பிறவி இருநிலத்தில் புரளுமாறு எறியப்பட வேண்டும் என்ற ஆர்வமிக்கவராய் விரைந்து செல்வரன்றே! என்ற கருத்தால் மணிவாசகப் பெருமான் கூறியருளிய திருவாசகம் :—


செறியும் பிறவிக்கு நல்லவர் செல்லன்மின்
தென்னன் நன்னாட்டு
இறைவன் கிளர்கின்ற காலம் இக்காலம்
எக்காலத்துள்ளும்
அறிவொண் கதிர்வாள் உறைகழித்து
ஆனந்த மாக் கடவி
எறியும் பிறப்பை எதிர்ந்தார் புரள
இருநிலத்தே.

(திருப்பாண்டிப் பதிகம்)

என்பதாகும். 'எதிர்ந்தார் பிறப்பை இருநிலத்தே புரள எறியும்'என இயைத்துப் பொருள்கூற வேண்டும். பிறப்பை எறியும், புரள எறியும் எனத் தனித் தனி இயையும். மக்கள் மனநிலையையறிந்து இகழ்ச்சிக் குறிப்பும் நகைச்சுவையும் தோன்ற எதிர் மறை முகத்தால் கூறுவது மணிவாசகர்க்கு இயல்புதான் என்பதை 'சதுரை மறந்தறி மால் கொள்வர் சார்ந் தவர் சாற்றிச் சொன்னோம்'' எனவும் ''கழுக்கடை கைப்பிடித்துக் குதிரையின் மேல் வந்து கூடிடுமேல் குடி கேடு கண்டீர், மதுரையர் மன்னன் மறுபிறப் போட மறித்திடுமே'' எனவும் கூறியுள்ளதால் அறியலாம்.

சிலர், இப்பாசுரத்திற்கு இங்ஙனம் பொருள் கொள்ள அறியாது, 'நல்லவர், செறியும் பிறவிக்குச் செல்லன் மின்' என, மாற்றிப் பொருள் கூறியிடர்ப் படுவர். இவ்வாறு சொல்லை மாற்றிப் பொருள் கூறின், நல்லவர்களாக உள்ளவர்கள் பிறவிக்குச் சென்று கொண்டிருந்ததாகவும், அவரைத் தடுத்து மணிவாசகர் 'நல்லவர் பிறவிக்குச் செல்லன்மின்' என்று கூறியதாகவும் பொருள்படுவதோடு, பிறவிக் குச் செல்பவரை நல்லவர் என்று கூறிய குற்றமும் அவர்க்கு உளதாதல் அறியலாம். மேலும், மணி வாசகர் கருதிய இகழ்ச்சிக் குறிப்பும், நகைச்சுவை யும், மக்களைச் சிவனருளுக்கு விரைந்து செலுத்தும் சூழ்ச்சியும் புலப்படாமல், இத்திருவாசகத்தின் சிறப்பையே மறைக்கும் உரையாக, அவ்வுரை அமைந்திருத்தலை ஆழ்ந்து நோக்குவோர் அறிவர்.

எனவே, பிறவிக்கு நல்லவர் என்றது, பிற விக்கு ஏதுவானவற்றையே செய்து கொண்டு அதற்கு மாறுபட்ட ஞான நெறியை மறந்தவர்களையே என் பது தெளிவு. அத்தகையோர், சிவன் எழுந்தருளும் காலத்து எதிர்ப்பட்டுவிடுவராயின்,அவர்தம் கருத்து நிறைவேறாமல் அவன் ஞானவாளால் எறியுண்டு தம்பிறப்பு நீங்க வேண்டி வரும், ஆகவே 'செல்லன் மின்' என்று கூறிச் சிவபிரான், எளியவர்களையும், ஞானநெறியிற் செல்லாதவர்களையும் நோக்கித் தன் பார்வை மாத்திரத்தால் அவர்களுக்கு ஞானம் உண்டாகச் செய்து, பிறவியை யொழித்தருளுவான் என்ற சிறந்த கருத்தை இத்திருவாசகத்தின் மூலம் மணிவாசகப் பெருமான் நமக்கு விளக்கியுள்ளார், என்பதை யுளங்கொண்டு அவர் வழி நிற்போமாக!



திருவானைக்காவல் திருக்கோயிலில், திருநீற்றான் திருமதில் திருப்பணியை, நமது அறநிலைய ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், I.A.S. அவர்கள் துவக்கி வைத்தல் (8—9—76)

# தலவரலாற்றுக் குறிப்புகள்

## ( காவிரி வடகரைத் தலங்கள் )

### 1. திருஓமாம்புலியூர் :

**இருப்பிடம் :** சிதம்பரத்துக்குத் தென் மேற்கே 15 கல் தொலைவிலுள்ளது. மன்னார் குடிக்குத் தெற்கே 4 கல் ; குத்தாலம் நிலையத் திற்கு வடக்கே 11 கல்.

**தலவரலாறு :** இதனைப் 'பிரணவ வியாக்ர புரம்' என வட மொழியில் வழங்குவர். அம் பிகை தட்சிணா மூர்த்தியிடம் பிரணவ உப தேசம் பெற்ற தலம். இஃது ஓமம் ஆம் புலியூர் என்றும், ஓம் ஆம் புலியூர் என்றும் வழங்கும். புலிக்குப் பயந்து வில்வ மரத்தில் ஏறிக் கொண்ட ஒரு வேடன் இரவு முழுதும் வில்வ இலைகளைப் பறித்துப் போட்டுக் கொண்டிருக்க அவை மரத்தின் அடியில் இருந்த சிவலிங்கத் தின் மேல் விழ, இறைவன் மனம் இரங்கியும் மகிழ்ந்தும் காலையிற் காட்சி தந்து, முத்தி யளித்த தலம். இங்குள்ள கோயிலுக்கு வடதளி என்பது பெயர். ''ஓமாம் புலியூர் உடையவர் வடதளியதுவே'' என வரும் ஞான சம்பந்தர் பாடலால் இதனை யுணரலாம். இறைவன் துயரம் தீர்த்த நாதர். இறைவி பூங்கொடி நாயகி.

**கல்வெட்டு :** இங்கே 6 கல்வெட்டுக்கள் உள்ளன. மூன்றாம் குலோத்துங்கன் 1, கோப் பெருஞ் சிங்கன் 5. இவ்வூர் ''வடகரை விருதராச பயங்கர வள நாட்டு மேற்கா நாட்டுப் பிரமதேயம் ஓமாம் புலியூர் ஆகிய உலகளந்த சோழச் சதுர்வேதி மங்கலம்'' எனக் கல்வெட் டுக்களிற் குறிக்கப்பட்டுள்ளது. ''துயரம் தீர்த்த நாயனார்'' என இறைவனின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

### 2. திருக்கானாட்டு முள்ளூர் :

**இருப்பிடம் :** மன்னார்குடியில் இருந்து தெற்கே ஓமாம்புலியூருக்குச் செல்லும் வழியில் 3 கல் தொலைவில் உள்ளது.

தலவரலாறு : இதனைக் 'கானாட்டம் புலி யூர்' என வழங்குகின்றனர். இது பதஞ்சலி முனிவர் பூசித்துப் பேறு பெற்ற தலம். இக் கோயிலில் உள்ள சுவாமிக்குப் பதஞ்சலி நாதே சுவரர் என்றும், அம்பிகைக்குக் கானார் குழலி, கோல்வளைக்கையம்மை என்றும் பெயர். இங்கு அத்திமரமும் வெள்ளெருக்கஞ் செடியும் தல விருட்சங்களாக இருக்கின்றன. ''கொள்ளிடத் தின் கரைமேற் கானாட்டு முள்ளூரிற் கண்டு தொழுதேனே'' எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் இத்தலத்திற்கு ஒரு பதிகம் பாடியருளியிருக் கின்றனர்.

### 3. திருநாரையூர் :

**இருப்பிடம் :** சிதம்பரத்தில் இருந்து காட்டு மன்னார் குடிக்குப் போகும் பெருவழி யில், 10 கல் தொலைவில் உள்ளது.

**தலவரலாறு :** நாரை பூசித்துப்பேறுபெற் றதனால் இதற்கு இப்பெயர் அமைந்தது. திருத் தொண்டர் திருவந்தாதியைப் பாடிய நம்பி யாண்டார் நம்பிகள் அவதாரம் செய்த புனிதத் தலம். தில்லைப் பொன்னம்பலத்தின் மேற் பாலுள்ள ஓர் அறையில் இருந்த தேவாரத் திருமுறைகளை, நம்பி யாண்டார் நம்பிகள் வாயிலாக வெளிப்படுத்திய ''பொல்லாப் பிள்ளை யார்'' எழுந்தருளியிருக்கும் தலமும் இதுவே யாகும். பொல்லாப் பிள்ளையார் என்பதற்கு உளியாற் பொள்ளப்படாமல், தாமாகவே இயற்கையில் தோன்றிய (சுயம்புவான) பிள்ளை யார் என்பது பொருள். அப்பர், சம்பந்தர் பாடல், ஐந்து பதிகங்கள். அபயகுல சோழன் ஆகிய இராஜராஜசோழன், நம்பியாண்டார் நம்பிகளைத் திருமுறைகளை வகுக்கும்படி வேண் டிக்கொண்ட தலமாதலின், இங்கு அவ்விருவ ருடைய திருப்படிமங்களும் உள்ளன; மகா மண்டபத்தில் இருவரின் சிற்பங்களும் செதுக் கப்பட்டிருக்கின்றன.

**கல்வெட்டு :** இங்கு 4 கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. அவற்றில், 'திருநாரையூர்த் தனியூரான வீரநாராயணபுரம்' என்ற தொடர் உள்ளது. விக்கிரம சோழன் ஆண்டு ஒன்றுக்கு 540 கலம் நெல் தரக் கூடிய நிலதானம் செய் தான். பசு திருடிய ஒருவனைச் சபையார் விசா ரித்து, அவனிடமிருந்து பசுவும் கன்றுகளும் மீட்கப்பட்டன.

### 4. திருக்கடம்பூர் :

**இருப்பிடம் :** சிதம்பரம் வட்டம் காட்டு மன்னார் கோயிலுக்கு 3 கல் தொலைவில் உள் ளது.

**தலவரலாறு :** இங்கேயுள்ள கோயிலுக்குக் கரக்கோயில் என்று பெயர். ''நங் கடம்பனைப்

பெற்றவள் பங்கினன், தென் கடம்பைத் திருக் கரக் கோயிலான், தன் கடன் அடியேனையும் தாங்குதல், என் கடன் பணி செய்து கிடப் பதே'' என்னும் சிறந்த தேவாரப் பாடலுக் குரிய தலம் இதுவே யாகும். 'கரக்கோயில்' என்று பெயர் அமைந்ததற்குரிய காரணம் தெளிவாகத் தெரியவில்லை. இத் தலத்தை வணங்கிய இந்திரன் இதனை விண்ணுலகத்திற்குக் கொண்டு போக நினைத்துப் பாதாளம் வரையில் தோண்டிப் பார்த்தும், இஃது அதற்கு அப்பா லும் ஊடுருவிப் போனது கண்டு அஞ்சி, முன் போல அமைத்துப் பூசித்து அமிர்தம் உண்டா கும்படி வரம் பெற்றனன். அதனால் இதற்குக் கரக்கோயில் (கரக்கும் கோயில்) எனப் பெயர் வந்தது என்பர் சிலர். இறைவன் அமிர்த கடேசர். இறைவி சோதி மின்னம்மை. அப்பர், சம்பந்தர் பாடல், 3 பதிகங்கள். கோயிற் கருவறையின் அடிப்பகுதி, இரத வடிவிற் குதிரைகள் பூட்டிய நிலையில் உள்ளது ; இக் கடம்பூர்க்குக் கிழக்கே ஒரு கல் தொலைவில் கடம்பூர் இளங்கோயில் இருக்கின்றது. இது முற்றிலும் இடிந்து போய்க் கிடக்கின்றது.

## 5. திருக்கஞ்சனூர் :

**இருப்பிடம் :** தஞ்சை மாவட்டம் கும்ப கோணத்துக்கு அருகில் நரசிங்கன்பேட்டை நிலையத்தில் இருந்து சுமார் 2 கல் தொலைவில் இருக்கின்றது.

**தலச்சிறப்பு :** அக்கினியும் பிரமனும் வழி பட்டுப் பேறு பெற்றது. அரதத்த சிவாசாரி யார் தோன்றிச் சைவத்தின் பெருமையை நிலை நாட்டிய தலம். இறைவன் : அக்கினீசுவரர். இறைவி : கற்பக நாயகி. அக்கினித் தீர்த்தம் கோயிலுக்குக் கிழக்கில் உள்ளது.

**கல்வெட்டுக்கள் :** விக்கிரம சோழன், திரி புவனச் சக்கரவர்த்தி குலோத்துங்கச் சோழன் வீர ராசேந்திர சோழன், கிருஷ்ணதேவராயர். ஆகியோர் காலத்துக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இது மதுரைத் திருஞான சம்பந்தர் ஆதீனத்துக் குரு மகா சந்நிதானம் அவர்களின் அருளாட்சியில் சிறப்புற இருந்து வருகின்றது.

## 6. திருக்கோடிகா :

**இருப்பிடம் :** மாயூரம்-கும்பகோணம் இருப்புப் பாதையில், நரசிங்கன் பேட்டை நிலையத்துக்கு வடக்கே, ஒரு கல் தொலைவில் உள்ளது. இது 'திருக்கோடிகாவல்' எனவும் வழங்கும்.

**தலவரலாறு :** இங்கே திரிகோடி (மூன்று கோடி) முனிவர்கள் பூசித்து வழிபட்டதனால், இத் தலத்திற்குத் திருக்கோடிகா எனப்பெயர் அமைந்தது என்பர். இறைவன் கோடிகா நாதர். இறைவி வடிவாம்பாள். இங்குள்ள தீர்த்தம் சிருங்க தீர்த்தம் எனப்படும். இது கோயிலுக்கு வடபால் உள்ளது. இத்தலத் திற்குச் சம்பந்தர் பதிகம் ஒன்றும், அப்பர் பதிகம் 3-ம் ஆகப் பதிகங்கள் நான்கு உள்ளன.

**கல்வெட்டு :** இக்கோயிலில் பல்லவர்கள், சோழர்கள், பாண்டியர்கள், முத்தரையர்கள் ஆகியோரின் கல்வெட்டுக்கள் காணப்படுகின் றன. இக் கோயிலைக் கருங்கற்றளியாகச் செய் தவர் திருவிசைப்பாப் பதிகம் பாடிய கண்ட ராதித்த சோழ தேவர் என்பவரின் மனைவியார் ஆகிய செம்பியன் மாதேவியார் ஆவர். இவ் வம்மையார் இக்கோயிலைக் கட்டுவதற்கு முன் பாக, இங்கே இருந்த பழைய கல்வெட்டுக்களைப் படியெடுக்கச் செய்து பாதுகாத்து, அவைகளை யெல்லாம் தாம் கட்டிய கோயிலில் செதுக்கி வைக்கச் செய்தனர். இச் செயல், அவர்க்குத் திருப்பணி செய்தலில் எத்தகைய கருத்தும் பொறுப்பும் கடமையுணர்வும் இருந்தன என் பதை விளக்கும் சான்றாகும். இக்கோயில் திருச் சுற்று மாளிகை விக்கிரம சோழ தேவர் கட்டிய தாகும். சண்டேசுவரர் கோயில் 'தியாகசமுத் திரம்' என்னும் பட்டமுடைய சோழ அரசராற் கட்டப் பெற்றது. 'திருக்கோடிகா ஆகிய கண்ண மங்கலத்து' எனவரும் கல்வெட்டுத் தொடரினால், இதற்குக் கண்ணன் மங்கலம் எனவும் ஒரு பெயர் வழங்கி வந்தமை புலனா கின்றது. மணவூருடையார் வரந்தரும் கூத்தப் பெருமாள், ஆழி சிறியன், மல்லன் வேங்கடவன், நிருபதுங்க மகா ராஜர் தேவியார், ஆரூர் உடை யான் அருளாக்கி சேந்தன், பழையாற்று நந்தி கிராமத்துக் குமரன் கணபதி, உதையஞ் சடை யன். தில்லையம்பலவிழுப்பரையன், வரகுண மகா ராஜ பாண்டியன், துரைபுரிப் பிள்ளைப் பெரு மாள் மகனார் சடையர், ஆகிய பலர் இக்கோயி லுக்குப் பற்பல திருப்பணிகள் செய்து நிபந் தங்களும் அமைத்துள்ளனர்.

## 7. திருமங்கலக்குடி :

**இருப்பிடம் :** இது மாயூரம்-கும்பகோணம் இருப்புப் பாதையில், ஆடுதுறை நிலையத்துக்கு வடக்கே சுமார் 3 கல் தொலைவிலுள்ளது.

**தலவரலாறு :** இத்தலத்துக்கு அப்பர் பதிகம் ஒன்றும், சம்பந்தர் ஒன்றும் ஆக 2 பதிகங்கள் உள்ளன. இத்தலத்தில் வாழ்ந்த முனிவர் ஒருவர் சிவபூசைக்குரிய திருமஞ்சன நீரை, அமர்ந்த வண்ணமே தம் திருக்கைகளை ஆற்றளவும் நீட்டி, ஆற்று நீரை முகந்து அபி டேகம் புரிந்தார். இவ் வரலாற்றை ஞானசம் பந்தர் ''நீரின் மாமுனிவன் நெடுங் கைகொடு நீர்தனைப் பூரித்து ஆட்டி அர்ச்சிக்க இருந்த புராணனே' என அருளிச் செய்திருத்தல் கொண்டு உணரலாம். இறைவன் புராணேசு வரர். இறைவி மங்கள நாயகி. இத்தலத்தில் காளி சூரியன் திருமால் பிரமன் அகத்தியர் ஆகியவர்கள் வழிபட்டு அருள்பெற்றனர். ''மங்கலக் குடி ஈசனை மாகாளி, வெங்கதிர்ச் செல்வன், விண்ணொடு மண்ணும் நேர் சங்கு சக்கர தாரி, சதுர்முகன், அங்கு அகத்தியனும் அர்ச்சித்தார் அன்றே'' என வரும் அப்பர் சுவாமிகள் திருக்குறுந் தொகையால் உணர லாம்.

**கல்வெட்டு :** இங்குள்ள இராஜராஜ சோழன் கல்வெட்டு ஒன்று, கோயில் சொத்தைச்

சூறையாடிய சிலரை நீதிபதிகள் விசாரித்துத் தக்க நடவடிக்கைகள் எடுத்த செய்தியினை யுணர்த்து கின்றது. பெருமங்கலம் தொண்டைமான் என்பவன் இக் கோயிலுக்கு நிலதானங்கள் செய்தான். கிருஷ்ண தேவராயர் சகம் 1439ஆம் ஆண்டில் இக்கோயில் நிலங்களுக்கு வரி விலக்கு அளித்தார். 'சுங்கம் தவிர்த்தவன்' என்னும் முதற் குலோத்துங்க சோழன் சில வரிகளை விதித்து, அவற்றால் கிடைத்த வருவாயை இக்கோயிலுக்கு வழங்கினான். இவ்வரசரின் காலத்தில் நிலங்களின் அளவீடு (SURVEY) நிகழ்ந்தது என்றும் ஒரு கல்வெட்டு உணர்த்துகின்றது. தட்சிணாமூர்த்தி சந்நிதியில் நின்ற கோலத்தில் கைகுவித்துக் கடவுளை வணங்கும் முறையில் இருக்கும் உருவம் ''முல்லைக் குடையான் தியாகப் பெருமாள் ஆகிய வானவன் பல்லவரையன்'' என்பவருடையதாகும்.

## 8. திருப்பனந்தாள் :

**இருப்பிடம் :** இது மாயூரம்—கும்பகோணம் இருப்புப் பாதையில், ஆடுதுறை நிலையத்திலிருந்து வடக்கே சுமார் 6 கல் தொலைவில் உள்ளது.

**தலவரலாறும் சிறப்பும் :** பனை மரத்தைத் தல விருட்சம் எனக் கொண்டிருத்தலால், இதற்குத் திருப்பனந்தாள் எனப் பெயர் அமைந்தது. இங்குள்ள கோயிலின் பெயர் 'தாடகையீச்சரம்'. தாடகை என்னும் பக்தி மிக்க பெண் ஒருத்தியால் வழிபடப் பெற்றமையினால், கோயிலுக்கு இப்பெயர் வழங்குவது ஆயிற்று. 'திருப்பனந்தாள் தாடகை யீச்சரமே' எனத் திருஞானசம்பந்தர் தேவாரத் திருப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலிலும் வந்திருத்தல் காணலாம். தாடகை, மாலை சாத்துதற்கு இறைவன் வளைந்து கொடுத்து அருள் புரிந்தான். பின்னர்க் குங்கலியக் கலய நாயனார் பொருட்டு, வளைந்த திருவுருவம் நிமிர்ந்து நின்றான். இறைவன் செஞ்சடையப்பர். இறைவி பெரியநாயகி. இங்குள்ள கோயில் நமது திருத் தருமபுர ஆதீனத்தின் அருளாட்சியில் இருந்து வருகின்றது. இந்தத் தலத்தில் தான், ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் நிறுவிய காசிமடம் அமைந்து திகழ்ந்து வருகின்றது. அதன் தலைவராக முன்பு விளங்கியிருந்த ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் அறக் கட்டளைகளின் அருமை பெருமைகளைத் தமிழ்நாடு நன்கறியும்.

**கல்வெட்டுக்கள் :** இங்குள்ள 'தாடகையீச்சரம்' என்ற கோயிலைக் கட்டியவர் 'திருப்பனந்தாள் நக்கன் தரணி' என்பவர் என்று கல்வெட்டு அறிவிக்கின்றது. இவ்வாறே இங்கு உள்ள இறைவியின் கோயிலைக் கட்டுவித்தவர் ''வெண்கூருடையான் அன்பர்க்கரசு மருத மாணிக்கம் ஆன வில்லவன் ராசன்'' என்பதும் கல்வெட்டினால் அறியப்படுகின்றது. கோயிலின் இரண்டாம் திருச்சுற்றாலையில் உள்ள குங்கிலியக் கலய நாயனார் கோயில் ''தீயிலும் பிரியாதான் அழியாவிரதங் கொண்டவன் ஆன குங்கிலியக் கலயர்'' என்பவரால் கட்டப் பெற்றது. இங்குள்ள முதற் குலோத்துங்க சோழன் கல்வெட்டு ஒன்றினால், குங்கிலியக் கலய நாயனாருடைய மனைவியின் பெயர் நீலாயி அம்மை எனத் தெரிகின்றது.

## 9. திருஆப்பாடி :

**இருப்பிடம் :** கும்பகோணம் வட்டத்தில் திருப்பனந்தாள் என்னும் தலத்துக்குத் தென் மேற்கில் ஒரு கல் தொலைவில் உள்ளது. மண்ணியாற்றின் தென் கரை.

**தலவரலாறு :** திருநாவுக்கரசர் ''சண்டியார்க்கு அருள்கள் செய்த தலைவர் ஆப்பாடியாரே'' எனப் பாடியுள்ளபடி, இத் தலமே சண்டேசுவர நாயனார் சிவ பெருமானை வழிபட்டுப் பேறுபெற்ற தலம். இத் தலத்திற்கு அருகில் சேய்ஞலூர் உள்ளது. அது சண்டேசுர நாயனார் அவதரித்த தலம். சேய்ஞலூரில் வாழ்ந்த சண்டேசுரர் இத்தலத்தில் ஆனிரைகளை மேய்த்து, ஆத்தி மரத்தின் கீழ் மண்ணியாற்றின் மணலாற் சிவலிங்கம் அமைத்து ஆனிரைகளின் பாலைக் கறந்து அபிடேகம் செய்து வழிபட்டுச் சண்டேசுரப் பதம் பெற்றார். இறைவன், பாலுகந்த நாதர். இறைவி, பெரிய நாயகி. தலமரம் ஆத்தி. தீர்த்தம் மண்ணியாறு. அப்பர் சுவாமிகள் பதிகம் ஒன்று இத்தலத்திற்கு உண்டு.

**கல்வெட்டு :** இரண்டாம் இராசராசன், மூன்றாம் குலோத்துங்கன், சுந்தர பாண்டியன், கோப் பெருஞ்சிங்க தேவன், அரியப்ப உடையார், மல்லிகார்ச்சுன மகாதேவர் முதலியவர்களின் காலத்திற் செதுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் பல இங்கே யுள்ளன.

## 10. திருச்சேய்ஞலூர் :

**இருப்பிடம் :** இது கும்பகோணத்தில் இருந்து திருப்பனந்தாள் செல்லும் சாலையில் 9.5 கல் தொலைவில் இருக்கின்றது.

**தலவரலாறு :** இத்தலம் இக்காலத்திற் 'சேங்கனூர்' என வழங்குகின்றது. முருகப் பெருமான் திருக்கயிலையில் இருந்து சூர சம்மாரத்தின் பொருட்டு, வீர மகேந்திர புரிக்கு எழுந்தருளிய பொழுது, வழியில் இங்கு வந்து சிறிது நேரம் தங்கியிருந்து, சிவபிரானை வழிபட்டனர் என்பது கந்த புராண வரலாறு. சேய் என்னும் முருகன் வழிபட்ட நல்ல ஊர் ஆதலின் இதற்குச் (சேய் நல் ஊர்) சேய்ஞலூர் எனப் பெயர் ஏற்பட்டது. சண்டேசுர நாயனார் அவதாரத் தலம், ஆதலின் சம்பந்தர் சிவிகையினின்றும் இறங்கி நடந்து சென்று இத்தலத்து இறைவனை வழிபட்டனர் எனப் பெரிய புராணம் கூறுகின்றது. இறைவன் சத்தகிரீசுவரர். இறைவி சகி தேவியார். தீர்த்தம் மண்ணியாறு. சம்பந்தர் பதிகம் ஒன்று. 1932-இல் படியெடுக்கப்பட்ட ஒரே ஒரு கல்வெட்டு மட்டும் இங்கு உள்ளது. வைணவப் பேருரையாசிரியர் ஆகிய பெரிய வாச்சான் பிள்ளை அவதாரத்தலம்.

## 11. திருந்துதேவன்குடி :

**இருப்பிடம் :** இது திருவிடைமருதூர் நிலையத்திற்கு 5 கல் தொலைவில் உள்ளது. 'திருந்து

தேவன்குடி' என்னும் ஊர் இக்காலத்தில் இல்லை. வயல்களின் நடுவில் கோயில் மட்டுமே யுள்ளது. கோயிலைச் சுற்றி மூன்று பக்கமும் அகழிகள் இருக்கின்றன.

**தலவரலாறு :** இத் தலத்தில் இறைவனை நண்டு (கற்கடகம்) ஒன்று பூசித்துப் பேறு பெற்றது. ஆதலின் இதனை 'நண்டாங்கோயில்' என இக்காலத்து மக்கள் வழங்கி வருகின்றனர். சுவாமியின் திருமுடியில் நண்டின் உருவம் காணப்படுகின்றது. இறைவன் கற்கடேசுவரர். இறைவி அருமருந்து அம்மை. இங்கே இரண்டு அம்பாள் சந்நிதிகள் இருக்கின்றன.

## 12. திருவியலூர் :

**இருப்பிடம் :** இது திருவிடைமருதூர் நிலையத்தில் இருந்து வடமேற்கே, வேப்பத்தூர் வழியில் 4 கல் தொலைவில் உள்ளது. தஞ்சை மாவட்டத்தில், திருவியலூர் என்று வேறு இரண்டு ஊர்களும் உள்ளன. ஆதலின் இதனைப் 'பண்டாரவாடைத் திருவிசநல்லூர்' என மக்கள் வழங்கி வருகின்றனர்.

**தலவரலாறு :** இத் தலத்தில் சடாயு என்னும் கழுகரசன், இறைவனை வழிபட்டுப் பேறு பெற்றூர். இறைவன் யோகானந்த ஈசுவரர். இறைவி சாந்த நாயகி. புராதன ஈசுவரர், வில்வாரண்ய ஈசுவரர் எனவும் இறைவனுக்குப் பெயர் வழங்கும். இறைவிக்குச் சௌந்தர நாயகி எனவும் பெயருண்டு.

**கல்வெட்டு :** முதலாம் பராந்தகசோழன் (கி.பி. 907—947), இரண்டாம் பராந்தகன் முதலாம் ராஜராஜன் (கி.பி. 985—1014), இராஜேந்திர சோழன் (கி.பி. 1014—1044), மூன்றும் குலோத்துங்கன் (கி.பி. 1178—1218) வரகுண பாண்டியன் (கி.பி. 9862—894), கிருஷ்ண தேவ ராயர் ஆகியோரின் கல்வெட்டுக்கள் 94 கிடைத்துள்ளன.

## 13. திருக்கொட்டையூர் :

**இருப்பிடம் :** கும்பகோணத்திற்கு வடமேற்கே ஒரு கல் தொலைவில், காவிரியாற்றின் வடகரையில் அமைந்துள்ளது.

**தலவரலாறு :** இதற்கு வில்வாரண்யம், ஏரண்டபுரம் என்னும் வேறு பெயர்களும் உண்டு. ஆயினும் கொட்டையூர் என்னும் பெயரே தேவாரத்திலும் கல்வெட்டிலும் காணப்படுகின்றது. இங்கேயுள்ள கோயிலுக்குக் கோடீச்சரம் என்பது பெயர். பத்திரயோகி என்னும் முனிவர் ஒருவருக்கு, இறைவன் கோடித் திருவுருவங்கள் கொண்டு காட்சி யளித்து அருள் புரிந்தார். ஆதலின் இங்கே யுள்ள இறைவனுக்குக் கோடீச்சுரர் எனப் பெயர் அமைந்தது. இங்கே கோடி விநாயகர், கோடி அம்மையார், கோடி முருகர், கோடி சண்டேசுவரர் எனப் பிற மூர்த்திகளுக்கும் பெயர் வழங்கும். இறைவனின் சிவலிங்கத் திருமேனி பலாக்காய் போன்று முள் உள்ளதாய் இருக்கும். ஒவ்வொரு முள்ளும் ஒவ்வொரு சிவலிங்கம் ஆகும். இங்ஙனமே கோடி விநாயகர் திருவுருவிலும் பல விநாயக வடிவங்கள் காணப்படும். இங்கே செய்யும் புண்ணியமும் பாவமும், பிற தலங்களிற் செய்வதை விடக் கோடி மடங்கு மிகுதிப் பட்டுப் பெருகும் என்பர். கொட்டையூர், திருவலஞ்சுழி என்னும் இரண்டு தலங்களையும் இணைத்துத் திருநாவுக்கரசர் பாடியுள்ளார். இத்தலத்திற்கு அருணகிரிநாதர் அருளிய திருப்புகழும் உண்டு. சமீப காலத்தில் வாழ்ந்திருந்த கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர் என்பவர், இத்தலத்திற்கு ஒரு கோவையும் உலாவும் பாடியுள்ளார்.

**கல்வெட்டு :** இரண்டாம் இராசாதிராசன் (கி.பி. 1163-1178), மூன்றும் குலோத்துங்கன் (கி.பி. 1178-1216), ஆகியோர் காலத்துக் கல் வெட்டுக்கள், இக்கோயிலில் இருக்கின்றன. அம்மை கோயிலிலும் ஒரு கல்வெட்டு உண்டு.

## 14. திருஇன்னம்பர் :

**இருப்பிடம் :** இது கும்கோணத்தில் இருந்து சுவாமிமலைக்குச் செல்லும் பெருவழியில், புளியஞ்சேரி என்னும் ஊருக்கு வடக்கே, திருப்புறம்பயம் போகும் வழியில் ஒரு கல் தொலைவில் உள்ளது.

**தலவரலாறு :** திருஞானசம்பந்தர் பதிகம் ஒன்றும், திருநாவுக்கரசர் பதிகம் நான்கும் ஆக, ஐந்து பதிகங்கள் இத்தலத்திற்கு உண்டு. இறைவன்: தான்தோன்றியீசர், எழுத்தறிந்தநாதர். இறைவி: கொந்தார் பூங்குழல் அம்மை. ஐராவத தீர்த்தம். சூரியன் அகத்திய முனிவர் ஐராவதம் ஆகியவர்கள் வழிபட்டுப் பேறு பெற்ற தலம்.

**கல்வெட்டு :** இக்கோயிலில் 'இராசகேசரி வர்மன்' என்னும் பட்டமுடைய சோழ மன்னர் ஒருவரின் கல்வெட்டும், விஜயநகர வேந்தர் ஆகிய வீரகம்பண்ண உடையார் காலத்துக் கல் வெட்டு ஒன்றும் உள்ளன. வீரகம்பண்ண உடையார் கல்வெட்டினுல் இக்கோயில் துருக்கர்களின் படையெடுப்பால் 40 ஆண்டுகள் பூசையின்றிக் கிடந்த செய்தி அறியப்படுகின்றது.

## 15. திருப்புறம்பயம் :

**இருப்பிடம் :** இது கும்பகோணத்திற்கு வடமேற்கே 5.5 கல் தொலைவில் மண்ணியாற்றின் வட கரையில் இருக்கின்றது.

**தலவரலாறும் சிறப்பும் :** 'புறம்பயம்' என்னும் சொற்றொடர் 'பக்கத்தில் தண்ணீரை யுடையது' எனப் பொருள்படும். இதற்கு ஏற்பத் திருக்கோயிலின் மேற்குப் புறத்தில் மதிலை ஒட்டி நீர் நிலை இன்றும் இருக்கின்றது. ஒரு காலத்தில் பிரளயம் வந்த பொழுது, அஃது இறைவன் அருளால் ஊரின் உள்ளே போகாமல் தடைப்பட்டுப் புறத்தே நின்றமையால், புறம்பயம் என இத்தலத்திற்குப் பெயர் உண்டாயிற்று. இங்கே யுள்ள விநாயகர்க்குப் பிரளயங் காத்த விநாயகர் என்பது பெயர். இறைவன் புறம்பய நாதர். ஒரு வணிகப் பெண்ணின் நிமித்தம், இவ்வூர்ச் சிவபெருமான் மதுரைக்குச் சென்று சாட்சியாக விளங்கியமையால், சாட்சி

நாதர் எனவும் பெயர் வழங்கும். இறைவி கரும்பு அடு சொல்லி. இப்பெயர் சம்பந்தர் தேவாரத்தில் வந்துள்ளது. தீர்த்தம்: பிரம தீர்த்தம், சத்த சாகர தீர்த்தம் என்பன. தல மரம் புன்னை. கொள்ளிட நதியும், மண்ணி யாறும் இத்தலத்திற்கு அணித்தாக முறையே வடக்கிலும் கிழக்கிலும் ஓடுகின்றன. மணி வாசகர் ''புறம்பயம் அதனில் அறம்பல அருளி யும்'' என்றருளியபடி சிவபெருமான் இத்தலத் தில் சனகர் முதலிய நால்வர்களுக்கு அறநெறி யினை உபதேசித்தருளினர். ஞானசம்பந்தர் இதனை ''நால்வர்க்கு அறம்பயன் உரைத்தனை புறம்பயம் அமர்ந்தோய்'' எனக் குறிப்பிட்டுள் ளார். துரோணர் இங்கே இறைவனை வழிபட்டு அசுவத்தாமா என்ற புதல்வனைப் பெற்றார். விசுவாமித்திரர், சுக்ரீவன் ஆகியோரும் இங்கு வழிபாடு செய்தனர். அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவர் பதிகமும் இதற்குண்டு.

இக்கோயில், மதுரைத் திருஞான சம்பந்தர் ஆதீன குரு மகா சந்நிதானம் அவர்களின் அரு ளாட்சியில் இருந்து வருகின்றது.

**கல்வெட்டுக்கள் :** இங்கே 63 கல் வெட் டுக்கள் படியெடுக்கப் பெற்றுள்ளன. முதலாம் பராந்தகன், இரண்டாம் ஆதித்தன், இராச ராச சோழன், முதற்குலோத் துங்கன், விக்கிரம சோழன், மூன்றும் இராசராச சோழன், விருபாட் சிராயன் முதலியவர்களின் கல்வெட்டுக்கள் அவை. இக்கோயிலின் பெயர் ஆதித்தேச்சுரம் எனக் கல்வெட்டிற் குறிக்கப்படுகின்றது. இக் கோயிலை ஆதித்த சோழன் கட்டியதனை, இஃது உணர்த்துகின்றது. இங்கே தாமோதர ஆண் டார் கடியாபரணர்மடம் என ஒன்றும், தாமோதர விண்ணகரம் எனப்பெருமாள் கோயில் ஒன்றும் இருந்தமை கல்வெட்டாற் புலனாகின்றது. செம்பியன் மாதேவியார், வானவன் மூவேந்த வேளான், முடிகொண்ட சோழப் பல்லவரையன் முதலிய பற்பலர் இக் கோயிலுக்குப் பற்பல தானங்கள் செய்துள்ள னர்.

## 16. திருவிசயமங்கை :

**இருப்பிடம் :** இது கும்பகோணத்திற்கு வடமேற்கில் உள்ள திருவைகாவூர்க்கு வடக்கே கொள்ளிடப் பேராற்றின் வடகரையில் இருக் கின்றது.

**தலவரலாறு:** இது பஞ்சபாண்டவர்களுள் ஒருவனாகிய விசயன் (அர்ச்சுனன்) வழிபட்டுப் பேறுபெற்ற தலமாதலால் 'விசய மங்கை' எனப் பெயர் பெற்றது. இவ்வரலாற்றினைத் திருநாவுக்கரசர் ''பாண்டுவின் மகன் பார்த்தன் பணி செய்து வேண்டும் நல்வரங்கொள் விசய மங்கை' எனத் தம் திருக்குறுந்தொகைப் பாட லில் குறிப்பிடுதல் காணலாம். கோயிலின் பெயர் விசய மங்கை. ஊரின் பெயர் கோவந்த புத்தூர். ஒரு பசு (கோ) நாடோறும் இங்கு வந்து சிவலிங்கத் திருமேனியின்மீது தன் பாலைச் சொரிந்து வழிபட்டுப் பேறு பெற்ற காரணத்தி னால், இத்தலத்திற்குக் 'கோவந்த புத்தூர்' எனப் பெயர் அமைந்தது. திருஞானசம் பந்தர் ''கோதனம் வழிபடக் குலவும் நான் மறை வேதியர் தொழுதெழு விசய மங்கையே' எனவரும் பாடலால், இவ் வரலாற்றைக் குறிப் பிட்டுள்ளனர். 'கொள்ளிடக் கரைக் கோவந்த புத்தூரில் வெள்விடைக்கு அருள்செய் விசய மங்கை'' எனவரும் திருநாவுக்கரசர் பாடற் பகுதியும் கொண்டு உணர்ந்து இன்புறுதற்கு உரியது. இறைவன் விசயநாதர்; இறைவி; மங்கை நாயகி; அருச்சுன தீர்த்தம்.

**கல்வெட்டு:** இக்கோயிலில் மதுரை கொண்ட கோப்பரகேசரி வர்மன், பரகேசரி உத்தம சோழன் முதலாம் இராசராச சோழன், முத லாம் இராசேந்திர சோழன், முதற்குலோத் துங்க சோழன், மூன்றுங் குலோத்துங்க சோழன், இராசராச தேவன் ஆகியோர் கல்வெட்டுக்கள் உள்ளன. இக்கோயில் விமானத்தைக் கல்லாற் கட்டியவன் ''மும்முடிச் சோழ தேவர்பெருந் தரத்துக் குவளாலமுடையான், அம்பலவன் பழுவூர் நக்கனுன விக்கிரம சோழ மகாராஜன்'. கோயிலின் பூசைப் பொருள்களுக்காக ''அம்பல வன் பழுவூர் நக்கன்ஆன ராஜராஜப் பல்ல வரையன்'' ஏராளமான நிலங்களை வழங்கி யிருந்தான். இத்தலத்தில் திருத்தொண்டத் தொகையன் திருமடம் என ஒன்று இருந்தமை யும் கல்வெட்டினால் அறியப்படுகின்றது.

## 17. திருவைகாவூர் :

**இருப்பிடம் :** இது கொள்ளிடப் பேராற் றின் தென்கரையில் இருக்கின்றது. கும்ப கோணத்திற்கு வட மேற்கே 5.5 கல் தொலை வில் உள்ள திருப்புறம்பயம் என்னும் தலத்திற்கு மேற்கே 8 கல் தொலைவில் இந்தத் தலம் அமைந்துள்ளது.

**தலவரலாறு :** இது சிவராத்திரித் திருநாள் வழிபாட்டிற்கு மிகவும் சிறந்த தலம். வேடன் ஒருவன் புலிக்குப் பயந்து, வில்வமரத்தின் மீது ஏறி, தூக்கம் வந்து கீழே விழுந்து இறந்து விடா மல் இருத்தற் பொருட்டு, வில்வப் பத்திரங் களைப் பறித்துத் தன்னை அறியாமலே கீழே எறிந்து கொண்டிருக்க, அவைகள் கீழே எழுந் தருளியிருந்த சிவலிங்கத் திருவுருவின் மீது விழுந்ததனால், சிவராத்திரி நாளில் வில்வ இலை கொண்டு உறங்காமல் இருந்து சிவ பிரானைப் பூசித்து வழிபடும் புண்ணியம் பெற்று, வீடு பேறு எய்திய தலம். இதற்கு ஞானசம்பந்தர் பதிகம் ஒன்றுள்ளது. இறைவன் வில்வவனே சுவரர். இறைவி, வளைக்கை நாயகி. எமதீர்த்தம். தலமரம் கொன்றை.

**கல்வெட்டு :** சம்புவராய மன்னர்களில் சகல புவனச் சக்கரவர்த்தி இராசநாராயணச் சம்புவராயர் காலத்திற் பொறிக்கப் பெற்ற கல்வெட்டுக்கள் உள்ளன.

## 18. திருவடகுரங்காடுதுறை :

**இருப்பிடம் :** இது கும்பகோணத்தில் இருந்து திருவையாற்றுக்குப் போகும் பெரு வழியில் 15-ஆவது கல்லில் இருக்கின்றது. திருவையாற்றிலிருந்து சென்றால், கிழக்கே 6 கல் தொலைவில் உள்ளது.

**தலவரலாறு :** குரங்கினல் பூசிக்கப் பெற்றுக் காவிரியின் வடகரையில் இருப்பதனல், இது வடகுரங்காடு துறை என்னும் பெயர் பெற்றது. வாலி வழிபட்டுப் பேறு பெற்ற தலம். 'கோலமா மலரொடு தூபமும் சாந்தமும் கொண்டுபோற்றி வாலியார் வழிபடப் பொருந்தினர்'' என்று ஞானசம்பந்தர் பாடியிருத்தல் காணலாம். இறைவன், அழகுசடைமுடிநாதர். இறைவி அழகு சடை முடியம்மை.

**கல்வெட்டுக்கள்:** இக்கோயிலில் கோப்பர கேசரி வர்மன், முதலாம் இராசராச சோழன், முதலாம் இராஜேந்திர சோழன், மூன்ரும் குலோத்துங்க சோழன், விக்கிரம பாண்டிய தேவன் ஆகியோர் காலத்துப் பொறிக்கப் பெற்ற கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இக் கோயிலின் திருநடை மாளிகைத் திருப்பணி எழுபத்தொன்பது வளநாட்டுப் பெரிய நாட்டாரும், பதினெண் விஷயத்தாரும் வரி கொடுத்துக் கட்டிய தென்னும் செய்தி, கல் வெட்டினல் அறியப் பெறுகின்றது.

## 19. திருப்பழனம் :

**இருப்பிடம் :** இது திருவையாற்றிற்குக் கிழக்கே 2 கல்தொலேவில் உள்ளது.

**தலவரலாறு :** இது திருவையாற்று சப்த ஸ்தானத் தலங்களுள் ஒன்று. அப்பூதி அடிகள் அவதாரத் தலம் ஆகிய திங்களூர், இதற்கு அண்மையில் உள்ளது. அதனல் இங்கு அப்பர் சுவாமிகள் இறைவனேப் பாடி வழிபட்டபோது 'அஞ்சிப் போய்க் கலிமெலிய அழல் ஓம்பும் அப்பூதி' எனச் சிறப்பித்து அவரைக் குறிப்பிட்டருளினர். உயிர்நீத்த மூத்த திருநாவுக்கரசு உயிர்பெற்று எழும்படி, நாவுக்கரசர் 'ஒன்று கொலாம்' எனத் தொடங்கும் விடந் தீர்த்தபதிகம் பாடிய தலம் இது. இறைவன் ஆபத் சகாயர். இறைவி பெரிய நாயகி.

**கல்வெட்டுக்கள் :** முதற் பராந்தகன், முதலாம் இராஜராஜ சோழன், மூன்ரும் குலோத்துங்கன் ஆகிய அரசர்களின் கல்வெட்டுக்கள் 29 படியெடுக்கப்பட்டுள்ளன. இக் கல்வெட்டுக்களால் அவர்கள், இக்கோயிலுக்குச் செய்த பல வகைத் தானங்களேப் பற்றிய செய்திகள் புலனுகின்றன.

## 20. திருவையாறு :

**இருப்பிடம் :** தஞ்சாவூர்க்கு வடக்கே 7 கல் தொலேவில் கும்பகோணம் செல்லும் சாலேயில் உள்ளது.

**தலவரலாறு :** வடவாறு விண்ணுறு வெட்டாறு குடமுருட்டி காவிரி என்னும் ஐந்து ஆறுகளே யுடையது. ஆதலால், ஐயாறு எனப் பெயர் பெற்றது இத்தலம். இதனேப் பஞ்ச நதம் எனவும் வழங்குவர். இறைவன் ஐயாறப்பர், பஞ்ச நதீசுவரர், பிரணதார்த்திஹரர். இறைவி அறம்வளர்த்த நாயகி, தர்ம சம்வர்த்தினி, தருமாம்பாள். சமய குரவர்கள் நால்வரும் பாடியது. ''நந்தியருள் பெற்ற நன்னகர்'' என்று சேக்கிழார் சுவாமிகள் இத்தலத்தினேச் சிறப்பித்துள்ளார். கடலரசன் இங்கு வந்து ஐயாறப்பரைப் பூசித்துப் பேறு பெற்ருன். இந்திரன், வாலி, திருமகள் ஆகியார் இத்தலத்தில் பூசித்தனர். திருமகளுக்குக் கோயிலின் இரண்டாம் பிராகாரத்தில் தனிக் கோயில் உள்ளது. அப்பர் கயிலேக் காட்சி பெற்ற தலம். இயமனேத் தண்டித்து, ஓர் அந்தணச் சிறுவனேக் காத்தருளிய ஆட்கொண்டார் சந்நிதியும், சுந்தரர் இங்கு வந்த பொழுது காவிரியில் வெள்ளப் பெருக்கு மிகுதிப்பட்டிருக்க, அவர் 'ஐயாறு உடைய அடிகளோ!' என்று பதிகம் பாடிய அளவில், காவிரியை வழி விடுமாறு செய்து, தாம் இருப்பதனேக் குரல் கொடுத்துக் காட்டிய 'ஓலம் இட்ட விநாயகர்' சந்நிதியும் இங்கேயுள்ளன. காசிக்குச் சென்ற அருச்சகர் பொருட்டு, இறைவன் அவர் வடிவில் வந்து, தம்மைத் தாமே பூசித்துக் கொண்டு சிவபூசை செய்யும் செந்நெறியினே உலகுக்கு உணர்த்திய தலம் இது. இதனே ''ஐயாறதனிற் சைவன் ஆகியும்'' என மாணிவாசகர் குறிப்பிட்டிருத்தல் காணலாம். இதற்கு 18 தேவாரப் பதிகங்கள் உள்ளன. பங்குனித் திருவிழாவும், சித்திரைப் பெருந்திருவிழாவும் இங்கு மிக்க சிறப்புடையனவாகும். ஏழுர் விழா அல்லது சப்தஸ்தானத் திருவிழா சித்திரையில் நிகழும்.

இக்கோயில் திருத்தருமபுர ஆதீனத்துக் குருமகா சந்நிதானம் அவர்களின் அருளாட்சியில் இருந்து வருகின்றது.

**கல்வெட்டுக்கள் :** கிழக்குக் கோபுரம் விக்கிரம சோழன் கட்டியது. மேலக் கோபுரமும், முதற் பிராகாரமும், திருநடைமாளிகைப் பத்தியும், ஐந்தாம் பிராகாரத்தின் தெற்கு வாசலில் சூரிய புட்கரிணித் திருக்குளமும், மூன்ரும் பிராகாரத்தில் தெற்குக் கோபுரமும் ஆனேயப்ப பிள்ளே, அவர் தம்பி வைத்திய நாதபிள்ளே என்பவர்களால் கட்டப் பெற்றன. அச்சுதப்ப நாயக்கர் பூசப்படித்துறை மண்டபம் கட்டினர். இங்குள்ள தென்கயிலேக் கோயிலே முதலாம் இராஜேந்திரனின் (கி.பி. 1014-1042) மனேவியாகிய பஞ்சவன் மாதேவியும், உலக மாதேவீச்சரம் கோயிலே இராச ராச சோழன் (கி. பி. 985-1014) மனேவியாகிய உலகமாதேவியும் கட்டினர். இப்போதுள்ள அம்மன் கோயிலேத் தேவகோட்டை உ. ராம. சுப. சேவு. மெய்யப்பச் செட்டியார் அவர்கள் கட்டித் திருப்பணி செய்தனர்.

## 21. திருநெய்த்தானம் :

**இருப்பிடம் :** இந்தத் தலம் திருவையாற்றிற்கு மேற்கே ஒரு கல் தொலேவில் உள்ளது.

**தலவரலாறு :** திருவையாற்று ஏழூர் (சப்தஸ்தான க்ஷேத்திரம்) என்னும் தலங்களுள் இஃது ஏழாவது தலம் ஆகும். இங்கே கலேமகள் இறைவனே வழிபட்டுப் பேறு பெற்ருள். இறைவன், நெய்யாடியப்பர். இறைவி, பாலாம்பிகை. 'இளமங்கை யம்மை' எனத் தேவாரம் குறிப்பிடுகின்றது. தீர்த்தம் காவிரி. கிழக்குப் பார்த்த சந்நிதி. இத்தலம் இப்போது 'தில்லே ஸ்தானம்' என மருவி வழங்குகின்றது. வடமொழியில் 'கிருதஸ்தானம்' என்பர். 'நெய்யாடியப்பர்' என்னும் பெயருக்கு ஏற்ப, இங்கே இறைவனுக்குப் பசுநெய் அபிஷேகிப்பது வழக்கம்.

**கல்வெட்டுக்கள் :** இங்கே 51 கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டுள்ளன. கோயில் காரியத் தலைவன், காமக்கோட நல்லூர் ஆயன் என்றும், முதலாம் பராந்தக சோழனின் மாமியார் முள்ளூர் நங்கை என்றும், கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றன. செம்பியன் ஈக்காட்டு வேளானன பரிசை கிழான் மறவன் நக்கன், கூத்தன் அருள்மொழியான வானவன் பேரரையன், சாமரகேசரி, தெரிஞ்ச கைக்கோளர், விக்ரம சிங்க தெரிஞ்ச கைக்கோளர்: நங்கை கூத்தப் பெருமானர், வளவர்கோமான், பேரரையன், செம்பியன் தமிழ்வேளான், விக்கணன் மனைவி கடம்பமாதேவி, கண்ணங்குடி நாராயணன் ஆகிய பற்பலர் இக்கோயிலுக்குத் தானங்கள் செய்துள்ளனர்.

## 22. திருப்பெரும்புலியூர் :

**இருப்பிடம்:** இது திருவையாற்றுக்கு வடமேற்கே சுமார் 2 கல் தொலைவில் உள்ளது.

**தலவரலாறு :** இத்தலத்திற் புலிக்கால் முனிவர் இறைவனைப் பூசித்து அருள் பெற்றனர். ஆதலின் இப்பெயர் பெற்றது. 'புலியூர்' என்னும் பெயருடைய தலங்கள் பல தமிழ்நாட்டில் இருப்பதனல், வேறுபாடுஅறிதற்பொருட்டு இது பெரும்புலியூர் என வழங்கப் பெற்றது. பெரும் பற்றப் புலியூர் (சிதம்பரம்), எருக்கத்தம் புலியூர் (இராசேந்திர பட்டினம்), ஓமாம்புலியூர், பாதிரிப் புலியூர் எனப் பிற தலங்களும் வேறுபாடு தெரியும் வகையில் வழங்கப்படுதல் காணலாம். இறைவன் புலியூர் நாதர் (வியாக்ர புரீசுவரர்). இறைவி சௌந்தரிய நாயகி.

## 23. திருமழபாடி :

**இருப்பிடம்:** இது திருவையாற்றிற்கு வடமேற்கே சுமார் நான்கு கல் தொலைவில், காவிரியின் வடகரையில் உள்ளது.

**தலவரலாறு :** சேரர் கிளையினராகிய மழவர்கள் என்போர், பாடி (பாசறை) செய்து கொண்டு தங்கி வாழ்ந்து வந்தமையால், மழவர் பாடி எனப் பெயர் பெற்று, மழபாடி என மருவி வழங்கி வருகின்றது. இறைவனின் மழு ஆயுதம் நிருத்தம் செய்து ஆடிய தலம் ஆதலால் மழுவாடி ஆயிற்று எனவும் கூறுவர். இறைவன் வயிரத்தூண் நாதர். இறைவி அழகம்மை. பிரம தேவனின் உலகத்தில் இருந்த சிவலிங்கத்தைப் புருஷா மிருகம் இங்குக் கொண்டு வந்து எழுந்தருளுவித்தது. அதை மீளவும் கொண்டு போகப் பிரமதேவர், அதைப் பெரிதும் முயன்று பெயர்த்தெடுக்க முற்பட்டார். அதைப் பெயர்த்து எடுக்க முடியாமையால், 'இது வயிரத் தூணே' என்று கூறி வியந்து நின்றார். ஆதலின் இங்கு இறைவனுக்கு வயிரத் தூண்நாதர் எனப் பெயர் வழங்குவதாயிற்று. 'மழபாடி வயிரத் தூணே' என்று தேவாரப் பாடல்களிற் பயின்று வந்துள்ளது.

இத்தலத்தில் இந்திரன், திருமால் முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்றனர். திருநந்தி தேவர் திருவையாற்றில் இருந்து எழுந்தருளி, இங்கே சுயசை அம்மையாரைத் திருமணம் செய்து கொண்டார். இவ்விழா இங்கு ஒவ்வோர் ஆண்டும் பங்குனி உத்திரத் திருநாளிற் கொண்டாடப் பெறும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாலம் பொழிலில் வந்து தங்கியிருந்த பொழுது, 'மழபாடிக்கு வர மறந்தனையோ?' என இறைவன் அவர்தம் கனவில் தோன்றி வினவியருளினர். உடனே சுந்தரர் 'பொன்னர் மேனியனே' எனத் தொடங்கும் பதிகம் பாடி, இத்தலத்தை வழிபட்டனர். மூவர் பாடலும் பெற்றது.

**கல்வெட்டுக்கள் :** முதலாம் பராந்தகன், முதலாம் இராசராசன், இராசாதிராசன், விசயராசேந்திர சோழன், முதலாம் குலோத்துங்கன், விக்கிரமசோழன், மாறவர்மன் பராக்கிரம பாண்டியன், சுந்தர பாண்டிய தேவன், ஒய்சள வீரராமநாதன், வீரசோமீசுவர நாதன், விசய நகரப் பிரதாபராயர் காலத்துக் கல்வெட்டுக்கள் இக்கோயிலிற் காணப்படுகின்றன. இராசராசன் காலத்தில் இக்கோயில் கற்றளியாக்கப் பெற்றது. இதன் விமானத் திருப்பணியைச் செய்வித்தவர், நரசிம்மதேவகண்ட நாயக்கன். இக்கோயிலில் இறைவனின் 'பொன்னர் திருமேனி'யைச் செப்புத்தராவால் எழுந்தருளுவித்தவர், அணிமுரிநாடாழ்வான் (கி.பி. 1022). நந்தி தேவர் படிமம் எழுந்தருளுவித்தவர், செந்தாமரைக் கண்ணன் ஆன நந்திகேசுவர நம்பி, பிட்சாடனர் திருவுருவம், தீன சிந்தாமணி என்பவரின் தந்தையால் அமைக்கப் பட்டது. எதிரிலிச் சோழ மூவேந்த வேளார், இக்கோயில் மண்டபங்கள் சிலவற்றை விரிவு படுத்திக்கட்டினர்.

## 24. திருப்பழுவூர் :

**இருப்பிடம் :** திருவையாற்றில் இருந்து அரியலூருக்குப் போகும் வழியில், 10 கல் தொலைவில் உள்ளது.

**தலவரலாறு :** இது 'பழு' என்னும் ஆல மரத்தைத் தலவிருட்சமாக உடைமையால் 'பழுவூர்' எனப் பெயர் பெற்றது. இது மேலப் பழுவூர், கீழப் பழுவூர் என்னும் இரு பகுதிகளாக இருக்கின்றது. இவற்றுள் கீழப் பழுவூரே தேவாரம் பெற்ற தலம் ஆகும். பரசுராமர் தம் தாயைக் கொன்ற பாவமும் பழியும் நீங்கப் பூசித்த தலம். சம்பந்தர் பாடல். இறைவன் வடமூலநாதர். இறைவி அருந்தவநாயகி. சோழர்களின் உறவினராகிய சேரர் கிளையினரைப் பற்றிய கல்வெட்டுக்கள் மேலப் பழுவூரில் இருப்பதனல் அவர்கள் இங்கு வந்த காலத்தில் இக்கோயிலின் பூசனைக்காக மலையாள அந்தணர்களை உடன் கொண்டு வந்தனர். இதனை ''அந்தணர்கள் ஆன மலையாளர் அவரேத்தும் பந்தம் மலிகின்ற பழுவூர்.....'' என வரும் ஞானசம்பந்தர் பாடல் கொண்டு உணரலாம்.

**கல்வெட்டு :** இங்கே 23 கல்வெட்டுக்கள் உள்ளன. சோழ அரசர்கள் பலவகைத் தானங்களைச் செய்துள்ளனர். விஜய நகரத்தார் காலத்தில் மல்லிகார்ச்சுனராயன் சில நிலங்களுக்கு வரிவிலக்கு அளித்தார். மல்லரச தண்ட நாயகர், ஓர் ஊரைச் சர்வமானியம் ஆகக்

கொடுத்தார். இரவி மணியன் என்பான் இக்கோயிலுக்கு ஒரு மண்டபம் கட்டிக் கொடுத்துள்ளார்.

## 25. திருக்கானூர் :

**இருப்பிடம் :** இது தஞ்சைக்கு அருகில் உள்ள பூதலூர் நிலையத்தில் இருந்து வடக்கே 2 கல் தொலைவிலுள்ளது.

**தலவரலாறு :** உமாதேவியார் சிவயோகத்து எழுந்தருளியிருந்த போது இறைவன் செந்திவண்ணராகத் திருவுருக்காட்டிய தலம். இதனை அப்பர் சுவாமிகள் ''கானூரிற் பரனை பரஞ்சுடர்' எனக் குறிப்பிட்டுள்ளார்கள். இறைவன் செம்மேனிநாதர். இறைவி சிவயோக நாயகி.

**கல்வெட்டு :** இது கல்வெட்டிற் 'கரிகால சோழ சதுர்வேதிமங்கலத்துத் திருக்கானூர்' என்று குறிக்கப்படுகின்றது. இராசாதி ராசன் காலத்துக் கல்வெட்டு ஒன்றில், கரிகாற் சோழ ஈசுரமுடைய மகா தேவர் கோயில் என ஒன்று இருந்தமைபுலனாகின்றது. மாறவர்மன் குல சேகர தேவன் (கி.பி. 1268-1308) என்னும் பாண்டியன், இக்கோயிலில் சில நிபந்தங்கள் அமைத்திருக்கின்றான்.

## 26. திருஅன்பில் ஆலந்துறை :

**இருப்பிடம் :** இது கொள்ளிடக் கரையில் உள்ளது.

**தலவரலாறு :** 'அன்பில்' என்பது தலத்தின் பெயர். 'ஆலந்துறை' என்பது கோயிலின் பெயர். பிரமதேவர், வாகீச முனிவர் முதலியோர் பூசித்த தலம். சம்பந்தர் இத்தலத்துக்கு எழுந்தருளியபோது, கொள்ளிடம் நீர்ப் பெருக்காய் இருந்ததனால், இக்கரையில் இருந்தே பதிகம் பாடினார். அதனை இறைவன் ஆணையின் வண்ணம் விநாயகர் செவி சாய்த்துக் கேட்டனர் என்பது வரலாறு. இதற்கு ஏற்பத் தல விநாயகர் திருவுருவம் முடிவளைத்துச் செவி சாய்த்துக் கேட்கின்ற பாவனையில் இருக்கின்றது. இறைவன் சத்திய வாகீசர். இறைவி சௌந்தர நாயகி. தீர்த்தம் கொள்ளிட நதி.

**கல்வெட்டுக்கள் :** இத்தலத்தைப் பற்றியனவாக 13 உள்ளன. மாறவர்மன் குலசேகர பாண்டியன், மூன்றும் இராஜேந்திர சோழன், ஹொய்சள வீரராமநாததேவர் முதலியவர்கள் நிபந்தங்கள் பல அமைத்த செய்திகள் இவற்றால் அறியப்படுகின்றன.

## 27. திருமாந்துறை :

**இருப்பிடம் :** இது லால்குடி (திருத்தவத்துறை) நிலையத்திற்கு மேற்கில் மூன்று கல் தொலைவில் உள்ளது.

**தலவரலாறு :** இது மருதவானவரும் (மருத்துக்களும்), கண்ணுவ முனிவரும் பூசித்துப் பேறு பெற்ற தலம். 'மாந்துறை' என்னும் வைப்புத்தலம் ஒன்று, காவிரியின் தென்கரையில் இருப்பதனால், இது வடகரை மாந்துறை என வழங்கப் பெறும். இதனை 'ஆம்பிரவனம்' எனவட மொழியாளர் வழங்குவர். இறைவன் மாந்துறைநாதர். இறைவி அழகம்மை.

**கல்வெட்டுக்கள் :** இத் தலத்துக் கோயிலில் முதலாம் இரா ராச சோழனின் 15, 16-ஆம் ஆண்டுக் கல்வெட்டுக்கள் இரண்டு, படியெடுக்கப் பெற்றுள்ளன. முதற்கல்வெட்டு வறுமையிற் குடிபெயர்ந்த மக்களை வரி நீக்கிக் குடியேற வசதி செய்தமை பற்றியும், இரண்டாம் கல்வெட்டு கோயிலுக்கு நந்தவனம் அமைப்பதற்காகக் கொடுத்த நிலத்தின் வரியைத் தள்ளுபடி செய்தமை பற்றியும் கூறுகின்றது.

## 28. திருப்பாற்றுறை :

**இருப்பிடம் :** இது திருவானைக்காவில் இருந்துகிழக்கே ஐந்து கல் தொலைவில் உள்ளது.

**தலவரலாறு :** மார்க்கண்டேய முனிவர் இங்குப் போந்தபோது சிவபூசைக்குப் பால் இல்லாமையால் வருந்தினார். சிவபெருமான் அருளால் பால் பெருகிக் கிடைத்துச் சிவபூசை செய்ய அவருக்குப் பயன்பட்டது. ஆதலின் இத்தலம் பாற்றுறை எனப் பெயர் பெற்றது. இறைவன் திருமூலநாதர். இறைவி மோகநாயகி, மேகலாம்பிகை.

**கல்வெட்டுக்கள்:** இங்கே 16 கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டுள்ளன. அவற்றால் திருநாவுக்கரசர் திருமடம், ஆண்டார் எம்பிரானார் மடம், திருஞான சம்பந்தர் மடம், நாற்பத்தெண்ணாயிரவர் மடம், காக்கும் நாயகன் மடம் எனப் பல மடங்கள், இங்கு இருந்து வந்தமை புலனாகின்றது.

## 29. திருஆனைக்கா :

**இருப்பிடம் :** ஸ்ரீரங்கம் நிலையத்திற்குக் கிழக்கே அரை கல் தொலைவில் உள்ளது. திருச்சிராப்பள்ளிக்கு அருகில் இருப்பது.

**தலவரலாறு:** யானை பூசித்துப்பேறு பெற்ற தலமாதலின், திருவானைக்கா என வழங்குவதாயிற்று. இது பஞ்சபூதத் தலங்களுள், அப்பு ஸ்தலம். கருவறையில் சிவலிங்கத்தைச் சுற்றி எப்போதும் நீர் ஊறிக் கொண்டே யிருத்தல் காணலாம். ஆதலின் இறைவனுக்கு இங்கே நீர்த்திரள் நாதர் என்பது பெயர். ''செழுநீர்த் திரளைச் சென்று ஆடினேனே'' என்பது திருத்தாண்டகம். 'ஜம்பு' எனப்படும் வெண்ணாவல் மரத்தின் கீழ் இறைவன் எழுந்தருளி யிருப்பதனால் ஜம்புகேசுவரர் என்றும் சுவாமிக்குப் பெயர். அம்பிகை அகிலாண்ட நாயகி.

இக்கோயில் ஐந்து பிராகாரங்கள் கொண்டது. ஆயிரங்கால் மண்டபம் உண்டு. நான்காவது மதில் 'திருநீறிட்டான் திருமதில்' என வழங்கும். இறைவனே ஒரு சித்தராகத் தோன்றித் திருநீற்றைக் கூலியாகக் கொடுத்துக் கட்டுவித்த

காரணத்தால், இம்மதிலுக்கு இப்பெயர் அமைந்தது. இறைவி இங்குத் தவஞ்செய்து ஞானுபதேசம் பெற்ருள். ஆதலின் இது ஞானத்தலம் எனப்படும். இங்கு நாடோறும் அம்பிகையே இறைவனைப் பூசிப்பதனைக் காட்டும் முறையில், அருச்சகர் பெண்வேடம் தாங்கிப் பூசை புரிதல் காணலாம். முற்பிறப்பில் சிலந்தியாக இருந்து சிவபிரானை வழிபட்ட புண்ணியத்தால் சோழர் குலத்தில் மன்னனுகத் தோன்றிய கோச்செங்கட் சோழன், இக்கோயிலைக் கட்டுவித்தனர் என்பது வரலாறு. உறையூர்ச் சோழன் காவிரி யாற்றில் தவறவிட்ட மணியாரம் திருமஞ்சனக் குடத்தில் புக, அதனை அவ்வழியே அவ்வரசன் விரும்பியபடி தனக்கு ஆரமாக ஏற்றுக்கொண்டு அருள் புரிந்ததனுல், இறைவனுக்கு ''ஆரம் நீரோடு ஏந்தினுன்' எனவும் ஒருபெயர் உண்டு. ''ஆரம் நீரோடு ஏந்தினுன் ஆனைக்காவு சேர்மினே'' என்பது சம்பந்தர் தேவாரம்.

**கல்வெட்டுக்கள்:** இக்கோயிலில் 154 கல்வெட்டுக்கள் படியெடுக்கப் பெற்றுள்ளன. நீலகண்ட நாயக்கர், அம்மன் கோயிலின் முன்பு உள்ள ஸ்ரீபசுபதீசுவரம் உடையாரை எழுந்தருளுவித்தார். சதாசிவ வாஜபேய யாஜி தீட்சிதர், உற்சவ மண்டபம் கட்டினுர். மேலக் கோபுரம் ஆதித்ய தேவன் மகனுன சந்தபேந்திரன் (கி.பி. 1435) கட்டியது. மும்முடி திம்மரசர், வலம்புரி விநாயகரையும், முருகனையும் எழுந்தருளுவித்தார். ஹொய்சள வீரசோமீசுவரன் கிழக்கு எழுநிலைக்கோபுரம் அமைத்தான். அவனே தன் பாட்டன் பாட்டி நினைவாக வாலாலஈசுவரம், பதுமலீசுவரம் எடுப்பித்தான். தோப்பு ஒன்றுக்குச் 'சிலந்தியைச் சோழன் ஆக்கினுன்' என்றும், பட்டன் ஒருவனுக்கு 'என் ஆனைக்கன்று' என்றும் பெயர் இருந்ததைக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. விஜயரங்க சொக்கநாத நாயகர், அவர்களின் நாடகசாலை ஆசிரியர் வைத்தியப்ப ஐயா, ஜம்பு தீர்த்த மண்டபத்திற்குப் படித்துறைகள் அமைத்தார்.

## 30. திருப்பைஞ்ஞீலி :

**இருப்பிடம்:** இது விழுப்புரம்-திருச்சிராப்பள்ளி இருப்புப் பாதையில் பிட்சாண்டார் கோயில் நிலையத்தில் இறங்கி, நொச்சியம் வழியாகச் செல்லுதற்கு உரியது. மண்ணச்சநல்லூருக்கு மேற்கே 1.5 கல்.

**தலவரலாறு:** பசுமையான வாழை (பைஞ்ஞீலி) யினைத் தலமரமாக உடைமையால், பைஞ்ஞீலி என இத்தலத்திற்குப் பெயர் அமைந்தது. திருநாவுக்கரசர் பொருட்டு இறைவன் பொதிசோறு கொணர்ந்து கொடுத்தருளிய தலம். அத்தடாகமும் தோட்டமும் இத்தலத்திற்குத் தெற்கே ஒரு கல் தொலைவில் உள்ளது. பைஞ்ஞீலி என்பது நீலிச்செடியையும் குறிக்கும் ஆதலின் நீலிவனம் என்றும் இத்தலத்திற்குப் பெயர் உண்டு. இத்தலத்தில் நவக்கிரகங்கள், விக்கிரகங்களுக்குப் பதிலாகத் தீபங்களால் வழிபடப் படுகின்றன. இயமனுக்குத் தனிச் சந்நிதி. இறைவன் திரு நீலகண்டர். இறைவி நீள்நெடுங்கண்ணி (விசாலாட்சி).

**கல்வெட்டுக்கள் :** முதலாம் இராசேந்திர சோழன், முதலாம் இராசாதிராசன், இராசராச தேவன், திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் ஆகியோர் கல்வெட்டுக்கள் இங்கேயுள்ளன. நளவெண்பாப் பாடிய புகழேந்திப் புலவரை ஆதரித்த சந்திரன் சுவர்க்சுவர்க்கியின் நாடு, மள்ளுவ நாடு அன்று, வள்ளுவநாடு என்பது, இங்கேயுள்ள கோனேரின்மை கொண்டான் கல்வெட்டு ஒன்றினுல், அறியப்படுகின்றது.

## 31. திருப்பாச்சில் ஆச்சிராமம் :

**இருப்பிடம்:** திருச்சி-விழுப்புரம் குறுக்குப் பாதையில் உத்தமர் கோயில் நிலையத்தில் இருந்து நான்கு கல் தொலைவில் உள்ளது.

**தலவரலாறு:** பாச்சில் கூற்றத்து ஆச்சிராமம் ஆதலின், பாச்சில் ஆச்சிராமம் என வழங்கப் படுகின்றது. கொல்லி மழவன் புதல்விக்கு இருந்த முயலகன் என்னும் நோயைத் திருஞானசம்பந்தர் நீக்கியருளிய தலம். எனவே இங்குள்ள நடராஜர் திருவுருவிலும் முயலகன் உருவம் இல்லை. திருவடியின் கீழ் அதற்குப் பதிலாக ஒரு பெரும் பாம்பின் உருவமே யுள்ளது. சுந்தரர் 'இவரலது இல்லையோ பிரானுர்' என இகழ்ந்து பேசிப் பொருள் மிகப் பெற்ற தலம். பார்வதி இலக்குமி அகத்தியர் முதலினேர் வழிபட்ட மாண்புடையது. இறைவன் மாற்றறிவரதர், சமீவனேசுவரர். இறைவி பாலசௌந்தரி. தீர்த்தம் அன்னமாம் பொய்கை, சிலம்பு நதி. தலமரம் வன்னி.

**கல்வெட்டு :** ஹொய்சள மன்னன் வீர சோமேசுவரன் காலத்துக் கல்வெட்டு ஒன்று, இக் கோயிலுக்குப் பதினுயிரம் கலம் அரிசி கிடைத்து வந்த செய்தியை அறிவிக்கின்றது.

## 32. திருஈங்கோய்மலை : 158616

**இருப்பிடம் :** திருச்சி-ஈரோடு இருப்புப் பாதையிலுள்ள குளித்தலை நிலையத்தில் இறங்கி, வடக்கே அகண்ட காவிரியாற்றைக் கடந்தால் இத்தலத்தை அடையலாம்.

**தலவரலாறு:** அகத்தியர் ஈயின் வடிவம் கொண்டு வழிபட்டுப் பேறு பெற்ற தலம். ஆதலின் ஈங்கோய்மலை எனப் பெயர் பெற்றது. திருவிங்க நாதமலை என மருவி வழங்குகின்றது. கோயில் ஒரு சிறிய குன்றின் மேல் அமைந்துள்ளது. காவிரியின் தென்கரையில் உள்ள கடம்பந்துறையைக் காலையிலும், திருவாட்போக்கியை நண்பகலிலும், ஈங்கோய் மலையை மாலையிலும், ஒரே நாளில் தரிசித்தால் மிக்கும் சிறப்பும் பயனும் விளையும். ''காலைக் கடம்பர், மத்தியானச் சொக்கர், மாலைத் திருவிங்கநாதர்'' என்பது பழமொழி. இறைவன் மரகதாசலர். இறைவி மரகதவல்லி. அமிர்த தீர்த்தம். பதினேராம் திருமுறையில் உள்ள 'திருஈங்கோய் மலை எழுபது' என்னும் நூல், நக்கீரராற் பாடப் பெற்ற சிறந்த நூல் ஆகும்.

**கல்வெட்டு:** இக்கோயிலில் ஆளுடைய பிள்ளையார், திருநாவுக்கரசு தேவர், ஆலாலசுந்தரப் பெருமான், நக்கீரதேவர் ஆகியோர்க்குத் திருப்படி மாற்றுக்கும் வியஞ்சனத்துக்கும், வடகரை இராஜராஜ வளநாட்டு மலை ஸ்ரீஜயங்கொண்ட சோழச் சதுர்வேதி மங்கலத்துப் பெருங்குடி மகாசபையார், நிலம் விற்றுக் கொடுத்தனர்.

—ஆசிரியர்.

# திருச்சிற்றம்பலக் கோவையார்

## முன்னுரை :

திருவாசகம், திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் இருபெரு நூல்களும், மாணிக்கவாசகப் பெருமானால் அருளிச் செய்யப் பெற்றனவாகும். இவ்விரண்டும், அமிழ்தினும் இனிய நமது தமிழ் மொழிக்கண் உள்ள அரும்பெறல் நூல்களுள், முதன்மைச் சிறப்பிடம் பெறுதற்குரியனவாய்ப் பெரும்புகழ் வாய்ந்து திகழ்வனவாகும்.

திருவாசகம், மாணிக்க வாசகரது, அயரா அன்பின் திறனை விளக்குகின்றது. திருச்சிற்றம் பலக்கோவையார், அவர்தம் அரிய பெரிய புலமை நலத்தின் பெற்றிமையினைத் திறம்படப் புலப்படுத்து கின்றது.

சிவபெருமானின் அருள் நலங்களைப் புகழ்ந்து பாடிப் போற்றுகின்றது, திருவாசகம். நமது அருமைச் செந்தமிழ் மொழியின் சீரிய அகப் பொருள் இலக்கணங்களை அழகுறத் தெளித்துணர்த் தித் தேற்றுகின்றது, திருச்சிற்றம்பலக் கோவை யார். திருவாசகம் சிவநெறித் திருநூல்: திருச் சிற்றம்பலக் கோவையார் செந்தமிழ்மொழிப் பெரு நூல்.

திருவாசகம், தெவிட்டாத தேனையனைய சிறப் பினதெனின், திருச்சிற்றம்பலக் கோவையார் அத் தேனிடை ஊறிய தெய்வநலம் சிறந்த செந்தமிழ் அமிழ்தம் போல்வதாகும்.

மாணிக்கவாசகர், தமது திருவாசகச் செழும் பாடல்களில், ''பூண்ட ஐம்புலனிற் புலப்படா இன் பம் புணர்ந்து மெய்யுணர்விற் பொங்கும்'' சிவானு பவ உணர்ச்சித் திறங்களை வெளியிட்டருளினர்.

## திருச்சிற்றம்பலக் கோவையார் :

இங்ஙனம், தாம் ஒருவர் மட்டுமே தம் தனி நிலையில் நுகர்ந்துணர்ந்த ஐம்பொறியளவிற் புலப் படாச் செம்பொருள் அருளனுபவ இன்ப உணர்ச்சி களை, அவை இயல்பாகத் தாமே தம் உள்ளத்தில் பொங்கி எழுந்து வழிந்தவாறு, திருவாசகமாகத் திருவாய் மலர்ந்தருளிய மாணிக்கவாசகர், அச் சிவானுபவ அருளின்ப நல உணர்வுகளை ஏனைய மக்களாயினர்க் கெல்லாமும் எடுத்துரைத்து உணர்த்தி, அவர் தம்மையும் அப்பேரின்ப நலம் தலைப்படுமாறு செய்வித்தற் பொருட்டு,

> ''பெற்ற பெருவளம் பெருஅர்க்கு அறிவுறீஇச்
> சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கம்''

போலப், பல்லாற்றானும் ''மனத்தின் எண்ணி மாசறத் தெரிந்து கொண்டு இனத்திற் சேர்த்தி உணர்த்தல் வேண்டும்'' என்ற முறையில், ''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்னும் பெருங்கருணையினால், 'பேதையைக் காதல் காட்டிக் கைவிடுக்க' என்னும் நுட்பம் அறிந்து, கடுத்தின்னு தானைக் கட்டி பூசிக் கடுத் தீற்றுமாறு போல (கசப்பு மருந்தை, மேலே இனிப்புப்பூசி உண்பித்தல் போல), நாம் அறியப் பெருத உயரிய கடவுளின்ப நலத்தினை, நாம் அறிந்த எளிய காதலின்பச் செய்தியின்கண் வைத்துப் பிணைத்து விளக்கிப் பாடும் விழுமிய பெருந் தெய்விக நூலே, திருச்சிற்றம்பலக் கோவை யார் ஆகும். இதனாலேயே,

> ''ஐந்திணை உறுப்பின் நாற்பொருள் பயக்கும்
> காமம் சான்ற ஞானப் பனுவல்''

என்று குமரகுருபர சுவாமிகள், இந்நூலின் சிறப் பினை இனிதெடுத்துப் போற்றிப் பாராட்டிப் புகழ்ந் துள்ளார்.

## கிளவிகளும் துறைகளும் :

இந்நூல், தில்லைத் திருச்சிற்றம்பலத்தில் விளங்கும் நடராசப் பெருமானையே, காதலன் (காதலி) ஆகக் கொண்டு, மாணிக்கவாசகர் தம்மைக் காதலி (காதலன்) நிலையில் வைத்து, உள்ளுறை பொருள் ( Allegorical Siginificance ) அமையும் படி, மாணிக்க வாசகரால் மிகமிக வியக்கத்தக்க சொற்பொருட் சுவை நலங்களுடன் அற்புதமாகப் பாடப்பெற்றுள்ளது. இது 25 பிரிவுகள் கொண்டது. இவற்றைக் 'கிளவிகள்' என அகப்பொருள் இலக் கண நூல்கள் கூறும். இவற்றுள் முதலாக அமைந்து திகழ்வது, இயற்கைப் புணர்ச்சி என்பதாகும். இதனைத் 'தெய்வப்புணர்ச்சி' என்றும் கூறுவர். அதாவது, ஓர் ஒப்புயர்வற்ற தலைமகனும் தலைமக ளும், ஓர் அழகிய பொழிலின்கண் ஊழ்வினை வயத் தால் எதிர்ப்பட்டுத் தம்முள் ஒத்த அன்பினராய்ச் சந்தித்துத் தம்முள் தாமே கூடி மகிழும் கூட்டம்.

## உலகியல் அருளியற் பொருள்கள் :

இவ்வியற்கைப் புணர்ச்சி, 18 துறைகளை யுடையதாகும். அவையாவன முறையே காட்சி-ஐயம்-தெளிதல்-நயப்பு--உட்கோள் - தெய்வத்தை மகிழ்தல்-புணர்ச்சி துணிதல்-கலவியுரைத்தல்-இருவ யின் ஒத்தல்-கிளவி வேட்டல்-நலம்புனைந்துரைத்தல்-பிரிவுணர்த்தல்-பருவரல் அறிதல்-அருட்குணம் உரைத்தல்-இடமணித்துக் கூறி வற்புறுத்தல்-ஆடி டத்துய்த்தல்-அருமை யறிதல்-பாங்கியை அறிதல் என்பனவாகும். இப்பதினெட்டுத் துறைகளிலும் அமைந்துள்ள பதினெட்டு (18)ச் செய்யுள்களும், உலகியற் பொருளும் அருளியற் பொருளும் ஒருங்கே அமைந்து, சிறந்து விளங்குகின்றன. இவ் வுண்மை,

''தில்லை மூதூர்ப் பொதுவினில் தோன்றி
எல்லையில் ஆனந்த நடம்புரி கின்ற
பரம காரணன் திருவருள் அதனுல்,
திருவாத ஊர்மகிழ் செழுமறை முனிவர்
ஐம்பொறி கைஇகந்து அறிவாய் அறியாச்
செம்புலச் செல்வர் ஆயினர்; ஆதலின்
அறிவன்நூற் பொருளும் உலகநூல் வழக்கும் என
இருபொருளும் நுதலி எடுத்துக் கொண்டனர்''

எனவரும் பேராசிரியர் உரைப்பாயிரச் செய்யுளால் விளங்கும். இவ்வாறு அருளியற் பொருளும், உலகியற் பொருளும் ஆகிய இரண்டும், திருச்சிற்றம்பலக் கோவையாரின்கண் ஒருங்கே விரவி நிற்பினும், அருளியற் பொருளை முற்றுக ஆராய்ந்துணர்ந்து எடுத்து விளக்குதல், நம்மனேர்க்கு இயலும் எளியதொரு செயல் அன்று. இதனையும் பேராசிரியர் தாமே,

''ஆங்கவ் விரண்டனுள்
ஆகமநூல் வழியின் நுதலிய ஞான
யோகநுண் பொருளினை உணர்த்துதல் அரிது;
உலகநூல் வழியின் நுதலிய பொருள்எனும்
அலகில் தீம்பாற் பரவைக் கண்எம்
புலன்எனும் கொள்கலன் முகந்த வகைசிறிது
உலையா மரபின் உரைக்கற் பாற்று''

எனக் கிளந்தெடுத்து ஒளியாமல் உரைத்திருத்தல் கொண்டு தெளியலாம். எனவே, 'இயற்கைப் புணர்ச்சி' என்னும் முதற் கிளவியில், பதினெட்டுத் துறைகளாக அமைந்துள்ள செய்யுள்களின் திரண்ட பொதுவான கருத்துக்கள் மட்டும், இங்குச் சுருக்கமாகத் தொகுத்துத் தரப்படுகின்றன.

## இயற்கைப் புணர்ச்சி :

(1) தலைவன் தலைவியை ஒருபொழிலின்கண் காண்கின்ருன்: ''இவளது அழகிய முகம் தாமரை மலர் போல விளங்குகின்றது. கண்கள் நீலப்பூக்கள் போன்றுள்ளன. மூக்கு குமிழம்பூப் போன்று எழில் சிறந்து திகழ்கின்றது. கொங்கைகள் கோங்கின் அரும்புகளை ஒத்திருக்கின்றன. கைகள் காந்தள் மலர்களைப் போலக் காட்சி அளிக்கின்றன. இங்ஙனம் இவளது பல்வேறு உறுப்புக்களும் பலவேறு மலர்களைப் போன்று விளங்குதலால், எழில் சிறந்து ஒளிரும் இவளது வடிவம், பலதிற மலர்களால் அழகுற நன்கினிது தொடுக்கப் பெற்ற, நறுமணம் மிக்க தெய்வநலம் சிறந்த மாலை ஒன்றனைப் போல வயங்குகின்றது. மெல்லிய கொடியினைப் போல ஒல்கி அசைந்து, அன்னம்போல அழகிய நடை வாய்ந்த இப்பெண்ணினல்லாள், இப்பொழில்வயின் நிற்கும் தோற்றம், அழகிற் சிறந்த காமதேவன் உலகினைத் தன் வயப்படுத்தி அடிமையாக்கிப் பெருமிதத்துடன் எடுத்த வெற்றிக் கொடியைப் போல ஒளிர்கின்றது'' என்று, ஒருதலைவியினைக் கண்ணுற்று, அவளது பேரழகில் ஈடுபட்டு மகிழ்ந்த தலைவன், 'இஃது என்ன வியப்போ!' என்று எண்ணி மெய்ம் மறந்து விம்மிதமுற்று நிற்கின்ருன்.

(2) ''மடமயிலோ என்று சொல்லும்படி இப்பொழிலகத்தே நிற்கும் இப்பெண், தன்னைக் கண்டார் உள்ளமும் உயிரும் கொள்ளை கொள்ளுதலால், இயமனுல் தூதாக அனுப்பப் பெற்றவளோ? மக்களை ஈர்த்து வசஞ்செய்து மயக்குதற்கு மன்மதனுக்குத் துணையாக இருப்பவளோ? அல்லது தில்லை நகர்க்கண் வாழும் ஒருமாதோ ? தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளோ? வானுலகில் வதியும் தேவமகளோ? புனலிடை உறையும் நீரர மகளோ? அன்றி நாகருலகைச் சேர்ந்த மகளோ? இவள் இருப்பிடம் யாது? என அறிந்து கொள்ளுதற்குச் சிறிதும் இயலவில்லையே!'' எனப் பலவாறு எண்ணித் தலைவன் ஐயுறுகின்ருன்.

(3) ''இவளது கண்கள் இமைக்கின்றன. கால்கள் நிலத்திற் படிகின்றன. மலர்கள் வாடுகின்றன. ஆதலின், அழகிய பெரிய முலைகளைச் சுமந்து தேய்கின்ற இடையினையும், பணைபோலும் தோளினையும், சிறிய நுதலினையும் உடைய இவள், தெய்வமகள் அல்லள். ஒரு மானுடப் பெண்ணே யாவள்'' எனத் தெளிகின்ருன்.

4. ''நெஞ்சமே! நீ இவளுக்கு இடையில்லை என்று காரணமின்றிச் சொல்லுவது என்னை? அகலா நின்ற அல்குலாகிய உயர்ந்த இடம், அதோ தெரிகின்றது. அதற்கு மேலே, அதோ அங்குத் தெரிபவை, கொங்கைகள்! இங்ஙனம் தம் பெருமையான் விளங்கித் தோன்றும் அல்குலும் முலையும் இருத்தலால், அவற்றின் நடுவே நுணுகித் தோன்ருது நிற்கும் இடையும் உளதாதல் வேண்டும்!' எனத் துணிந்து, அவள்பாற் சென்று சேரத் தலைவன் நயப்புறுகின்ருன்.

(5) ''நுடக்கத்தால் மின்னல், மெலிவாற் பாம்பு போன்ற இடையினையும், பெரிய தோள்களையும் உடைய இவளது வேல் போன்றகண்கள், இப்புறமும் அப்புறமுமாகத் திரும்பித் திரும்பிப் பிறழுந்தோறும் பிறழுந்தோறும் பொது நோக்கத்தாற் பிணியும், உள்ளக் கருத்தை வெளியிடும் நாணேடு கூடிய சிறப்பு நோக்கத்தால், பிணி தீர்க்கும் மருந்துமாக விளங்குகின்றன! ஆதலின், யான் இவள்பால் அன்புடையனுதல் போல, இவளும் என் மாட்டு அன்பு கொண்டுள்ளாள் போலும்!' என்று தலைவன் தனக்குள் எண்ணுகின்ருன்.

(6) ''கிழக்குத் திசைக் கடலிலே நின்று இட்ட கழியானது, மேற்குத் திசைக் கடலில் இடப்பெற்ற பெரிய நுகத்தினது துளையின்கட் சென்று பொருந்திச் சேர்ந்து கொண்ட வியத்தகு செய்தி போல, கெண்டைமீன் போலும் கண்களை யுடைய இவ்வழகிற் சிறந்த பெண்ணைத் தோழியர் கூட்டத்தினின்றும் நீக்கித் தனியே கொணர்ந்து, என்னைத் தலைக்கூடுமாறு செய்தருளிய, நல்வினையின் விளைவாம் ஊழாகிய தெய்வத்தையன்றி, வேறு பிற தெய்வத்தை யான் வியக்கவும் மாட்டேன், நயக்கவும் மாட்டேன்'' எனத் தெய்வத் திருவருளை நினைந்து வியந்து மகிழ்கின்ருன்.

(7) '' மனமே! இவ்வுயர்ந்த பொழிலினிடத்து ஒரு பொழுதும் பிரியாது உடன் சூழ்தலையுடைய தோழியர் கூட்டத்தை, இவளினின்று பிரித்து நீக்குதற்குக் காரணமாய் நின்ற ஊழ்த் தெய்வத்தின் துணையினுல், நமக்கு இவளோடு கந்தருவர் மணமானது எதிர்பாரா நிலையில் எளிதாகக் கிடைத்துள்ளது. இனி, நீ இவளோடு கூட்டத்துக்கு உடன்படுவாயாக!'' எனத் தலைவன் புணர்ச்சி துணிகின்ருன்.

(8) ''நல்வினைத் தெய்வம் இவளைக் களவின்கண் கூட்ட, அமுதமும் அதன்கண் கரந்து நின்ற சுவையும் என்ன, என் நெஞ்சம் இவள் கண்ணே ஒடுங்க, யான் என்பதோர் தன்மை காணுது ஒழிய, இருவர் உள்ளங்களும் ஒருவரே ஆமாறு கரப்ப, ஒருவேமாகிய ஏகாந்தத்தின்கண் பிறந்த புணர்ச்சிப் பேரின்ப வெள்ளம் யாவரான் அறியப்படும்? சுவையுடைய பொருட்கும் சுவைக்கும் வேறுபாடில்லாத

வாறு போல, எனக்கும் இவட்கும் வேறுபாடுஇல்லே. இவள் அமுதம், யான் அதன் சுவை. எனவே, எமக்குள் வேறுபாடில்லே. ஆயினும், புணர்ச்சியின் வரும் இன்பம் துய்த்தற் பொருட்டாக, இன்று யான் என்றும், இவள் என்றும் வேறுபாட்டோடு கூடிய அழகை, இதனை அனுபவிக்கின்ற யானே அறியினல்லது யார் அறிவார்?'' எனத் தலைவன் புணர்ச்சியின்பத்தியல்பைப் புகழ்கின்முன்.

(9) ''தில்லையிற் சிற்றம்பலத்தின்கண் உள்ளவனுகிய ஒப்பற்ற பெருமானின் குணமாகிய ஆனந்தம் வெளிப்பட்டாற்போல, கொவ்வைக் கனியை ஒத்த சிறந்தவாயையுடைய இக்கொடியிடையின் தோளேக் கூடினல், கூடுந்தோறும் பெரிதாகிய இன்பம், புணராத முன்பு போலப் புணர்ந்த பின்னும் புதிதாய், மணம் பொருந்திய சுருண்ட குழலையுடைய இவளது அன்பினைப்போல வளரா நிற்கின்றது'' எனத் தலைமகளை மகிழ்ந்து கூறுகின்முன்.

(10) ''இவளுடைய கொங்கைகள், தில்லையம்பலம் போலப் பெருவளத்தை யுடையன. அகன்ற பெரிய கண்கள், வாள்போல் உள்ளன. நெற்றி, எட்டாம் பிறைச் சந்திரனைப் போன்ற இயல்பைப் பெற்றுள்ளது. இடை மின்னலை ஒத்திருக்கின்றது. இவற்றின் தன்மை இஃதாயின், கிளிபோலும் இவளது வாயின் மொழியை இனிக் கேட்க வேண்டுகின்றது என்? இப்பெற்றிக்குத் தக்கபடி மிகவும் இனிதாகவே இருக்கும் அன்றோ?'' என்று தலைவன் தலைமகள் மாட்டு ஒரு சொற் கேட்டு இன்புற விரும்புகின்முன்.

(11) தலைமகன் தன்மாட்டுக் கிளவி வேட்டு வருந்துதலைக் கண்ட தலைமகள், புன்முறுவல் பூத்து நிற்கின்முள். அப்புன்முறுவல் கண்டு மகிழ்ந்து, தலைமகன் தலைமகள் சொல்லாடாமையாற்கொண்ட வருத்தம் நீங்குகின்முன். நீங்கி, ''வண்டுகளே! நுங்களுடைய அகன்ற மருத நிலத்தில், சிறிய இடையை யுடைய இவளது, இனிதாகிய கொவ்வைக் கனியை ஒக்கும் அழகிய வாயைப் போல, மணம் வீசுகின்ற ஆம்பற் பூக்கள் உளவோ? கூறுமின்கள்!' எனத் தலைவியின் நலம்புனைந்துரைக்கின்முன்.

(12) தனது புன்முறுவல் குறித்துத் தலைமகன் நலம் புனைந்துரைக்கக் கேட்ட தலைமகள் 'எம்பெருமான் முன்நின்று வாய் திறந்து பெரியதோர் ஏதும் செய்தேன்' என நாணி வருந்திநின்முள். அது கண்டு 'இவள் வருந்துவது யான் தன்னைப் பிரிந்து விடுவேன் என்று எண்ணிப் போலும்' எனத் தலைமகன் கருதுகின்முன்: ''ஒருவனல் தவஞ்செய்து பெறுதற்குரிய சிந்தாமணியும், தெளிந்த கடலின் அமிர்தமும், இறைவனருளால் வருந்தி முயல வேண்டாமல், தாமே வந்து எளிதாகக் கிடைத்தால், அவை அவனல் விரும்பப்படுதல் அல்லது இகழப்படுமோ? மடமான் விழி மயிலே! அந்தாமரை அன்னமே! உயிரினும் சிறந்த நின்னை, இருதலைப் புள்ளின் ஓருயிரேனுகிய யான் அகன்று ஆற்றியிருப்பேனே? நின்னை யான் பிரிந்து விடுவேன் என்று கருதி மனமயக்கமுற்று, நீ என்னை வாட்டமுறும்படி செய்வது எற்றுக்கு?'' எனத் தலைவிக்குத் தன் பிரிவின்மையைப் பரிவுடன் புகலுகின்முன்.

(13) தலைவனற் பிரிவின்மை கூறக் கேட்ட தலைமகள் 'பிரிவு என்பதும் ஒன்றுண்டு போலும்' என உட்கொண்டு, முன்பு எய்திய துன்பினும் பின்பு பெருந்துன்பம் எய்தினள். அதுகண்ட தலைமகன், ''திருச்சிற்றம்பலம் அனைய இவள் வருந்துவது, நாம் ஒருவரை ஒருவர் பிரிந்தால் பின்னர்க் கூடுதல் அரிதென்று நினைந்தோ? அல்லது நாம் நம் தோழியர் கூட்டத்தைப் பிரிந்து நெடும்பொழுது இங்கு இவனுடன் இவ்வாறு இருந்தால், நம்குடிக்குப் பழி நேர்ந்து விடுமே என்று நினைந்தோ? எது குறித்து என்று அறிகின்றிலேன்!'' எனத் தலைவியின் வருத்தத்திற்குக் காரணம் அறிய முயலுகின்முன்.

(14) ''வடிவார்ந்த திருமகளே! உளப்பாடும் முயற்சியும் இன்றி ஊழ்த் தெய்வத்தால் பொருத்தப் பெற்ற நமது அழகிய மணத்தை, யாவர் சிதைத்தற்கு இயலும்? பூக்கள் பிணைத்து அணியப் பெற்ற குழலி! நீ வாடிப் புலம்புவது என்? நம் கூட்டம் குடிப்பழியாகும் எனவும், தோழி அறிந்தால் தீங்கு விளையும் எனவும் கவலற்க! நாம் இருவரும் ஒருவரை ஒருவர் எதிர்ப்பட்டுக்கூடி மருவுதற்குக் காரணமாயது, தெய்வத் திருவருளே! அத்திருவருள் நம்மைக் காப்பாற்றும். இதுபோது நாம் பிரியலுறுகின்றேமாயினும், அது நம்மை மீண்டும் கூடுமாறு செய்யும்!'' எனத் திருவருளியல்பு கூறித் தேற்றுகின்முன்.

(15) ''குன்றவாணர் இளங்கொடியே! வருத்தம் எய்தற்க! எம் ஊரின்கண் உள்ள பெரிய மலை போலும் மாளிகைகளின் நுண்ணிதாகிய சுண்ண வெண் சாந்தின் ஒளி பாய்ந்து, நும் ஊரின்கண் உள்ள கரிய குன்றுனது, வெள்ளைநிறச் சட்டையிட்டுக் கொண்டது போலத் தோன்றும். அத்துணை அணிமையுடையது, நும் ஊர்க்கு எம் ஊர்! ஆதலின், நாம் இதுபோது பிரிந்தாலும், பின்னர் அடுத்தடுத்துக் கூடி மகிழலாம்'' என இடமணித்துக் கூறி, நமக்குள் பிரிவு நேரும் என வருந்தற்க எனத் தலைவியைத் தலைவன் தேற்றுகின்முன்.

(16) ''கால் நிமிர்ந்த பெரிய சிலை (புருவங்) களும், சிவந்த கொவ்வைக் கனி (போன்ற இதழ்) களும், வெண்முத்து (போன்ற பற்) களும், ஒரு திங்களின் (முகத்தின்) கண்ணே பொருந்தி நிற்ப, வண்டுகள் தங்கும் கொடியைப் போன்று விளங்கும் பெண்ணே! யான் கூறியவற்றைத் தெளிவாயாக. நின் தோழியர் கூட்டத்தைச் சென்று சேர்ந்து முற்பட்டு நீ விளையாடுக. நின் தோழியர் கூட்டம் கண்டு கொள்ளாத வகையில், இம்மலைச் சாரற் பொதும்பரில் ஒளித்து, இன்னும் சின்னேரத்துக்குள் யான் பின்னும் இவ்விடத்தே வந்து தோன்றுவேன்!'' எனத் தலைவியை ஆடிடத்து உய்க்கின்முன்.

(17) ''பூங்கொத்துக்களை யணிந்த குழலையுடைய இப்பெண்ணின் சிறப்பு, இத்துணைப் பெரிய சிறந்த தோழியர் கூட்டமும் பணிந்து வணங்கும் இயல்பிற்முயின், தில்லைச் சூழ் பொழிலின்கண் இவள் புகுந்ததும், யான் இவளைப் புணர்ந்ததும், மாயமோ? கனவோ? இரண்டுமன்றி வேறென்றோ? இன்னதென்று அறிகிலேன். இனி இவள் நம்மால் எய்துதற்கு அரியளே யாவள்!'' எனத் தலைவியின் அருமை யறிகின்முன்.

(18) ''தில்லைச் சிற்றம்பலத்தின்கண் இடைவிடாது ஆடுகின்ற கூத்தப் பெருமானின் அருளால் வரும் ஆனந்தம் என்று துணியத் தக்க இப்பணிமொழியாளுக்கு, இத்தோழியே ஏனைய எல்லாத் தோழியருள்ளும் மிகவும் சிறந்த உயிர்த் தோழி போலும்! காதளவும் நீண்ட படை போலும் தலைவியின்கண்கள், இத்தோழியின் மாட்டேயே பெரிதும் சென்று பயிலா நிற்கின்றன. அஃது 'என்னேடு இவளுக்கு உயிரும் ஒன்று. மனமும் ஒன்று. தாய் தந்தையராற் செய்யப்படும் சிறப்புகளும் ஒன்று' என்று சொல்லுவது போல் உளது. இத்தலைவியை யான் அடைவதற்கு, இதுவும் எனக்கு ஒரு துணையாகும்'' என உட்கொண்டு, தலைவன் தலைவியின் காதற் றேழியை அறிந்து கொள்கின்முன்.

**(தொடரும்)** **—ஆசிரியர்.**

# பிரமேயசாரம்

**முன்னுரை :**

இராமானுஜரால் திருத்தி ஆட்கொள்ளப் பெற்ற அருளாளப் பெருமாள் எம்பெருமானர், இயற்றியருளிய நூல்களுள், ஞானசாரம்போலப் பிரமேயசாரம் என்பதும் ஒன்று. இதன்கண், சகலசாத்திரசாரமான, திருமந்திரத்தில் விளக்கப் படுகின்ற பிரமேயங்கள் எல்லாம் (அறியத்தக்க சிறந்த பொருள்கள் எல்லாம்) தொகுத்துச் சுருக்க மாகவும் சுவையாகவும் அழகுற அறிவுறுத்தப்படு கின்றன. இந்நூல் வடிவால் சிறியதாயினும், பொருளின் உயர்வால் மிக்க அருமையும் பெருமை யும் வாய்ந்ததாகும். இதன் முதற்பாட்டில், திரு வெட்டெழுத்து மகாமந்திரத்தின் சுருக்கமாகிய, பிரணவத்தின் சாரமான பொருள்கள் விளக்கப்படு கின்றன.

## (1) மீட்சியிலா நாட்டிருப்பார் :

பிரணவமானது, அகரம்-உகரம்-மகரம் என் னும் மூன்று கூறுகளையுடையது. இவற்றில் அகர மானது, எல்லா உலகங்களின் தோற்றத்திற்கும் காரணனாய், எல்லாவற்றையும் எல்லோரையும் காப்பவனாய் உள்ள, எம்பெருமானைக் குறிக்கின்றது. மகரமானது இருபத்தைந்தாம் எழுத்தாய், அறி வின் கூறாய் விளங்குவதனால், அறிபவன் (அவிஞ் ஞாதா) ஆகிய ஆன்மாவைச் சுட்டுகின்றது. உகர மானது திருமகளையும், அவளையொத்த அருள்நலம் உடைய ஆசாரியர்களையும் அறிவிக்கின்றது. இங் ஙனம் அகர உகரமகரங்கள் குறிக்கும் பொருள் களைத் தொகுத்துப் பின்வரும் பாடல் பெரிதும் அழகுற விளக்குகின்றது.

அவ்வா னவருக்கு, மவ்வா னவர்எல்லாம்
உவ்வா னவர்அடிமை என்றுரைத்தார்:-இவ்வாறு
கேட்டிருப்பார்க்கு ஆள்என்று கண்டிருப்பார்,
மீட்சியிலா
நாட்டிருப்பார் என்றிருப்பன் நான்.

அகரத்தின் பொருளான இறைவனுக்கு, மக ரத்தின் பொருளான உயிர்த்திரள்கள் எல்லாம் அடிமைகள் என்று, உகரத்தின் பொருளான பெரிய பிராட்டியாரைப்போன்ற அருளாளர்களான ஆசாரி யர்கள் அருளிச் செய்வர். இவ்வாறு உபதேசமுகத் தாலே கேட்டு, அப்பொருளிலேயே ஊன்றியிருக்கும் உணர்வுடையவர்களுக்கு, அடிமைப்பட்டவர் களாகத் தம்மை உணர்ந்து தெளிந்திருப்பவர்கள், மீளுதல் இல்லாத வைகுந்தமாகிய திருநாட்டிலே சென்று வீற்றிருப்பார்கள் என்று நான் உறுதியாக இருக்கின்றேன். பகவானுக்கு அடிமையாவதோடு, கூட, பாகவதர்களுக்கும் அடிமைபூண்டு ஒழுகும் திறத்தைத் தெரிந்து கொள்வார் யாவரோ அவர்கள்தாம், திருநாடு எய்தும் பேறு பெறுவர் என்பது, இப்பாடலால் இனிது உணர்த்தப்படு கின்றது.

[அஆனவருக்கு-அகரத்தின் பொருளாகிய இறை னுக்கு. மஆனவரெல்லாம்-மகரத்தின் பொருளாகிய உயிர்த்திரள்கள் எல்லாம். உஆனவர் உரைத்தார்-உகரப்பொருளாகிய திருமகளோடு ஒத்த அருளா ளர்களாகிய ஆசாரியர்கள் கூறுவர். இவ்வாறு கேட்டு இருப்பார்க்கு-இத்தகைய உபதேசத்தைக் கேட்டு அதன் பொருளில் ஊன்றி இருப்பவர்களுக்கு. ஆள் என்று கண்டுஇருப்பார்-அடிமைப்பட்டவர் களாகத் தம்மைத் தெளிவுறக்கண்டு அவ்வழியைக் கடைப்பிடித்திருப்பவர்கள்.] (1)

## (2) பேணுமை காணும் பிழை :

ஆன்மாக்கள் பலவகைப்பட்டிருந்தாலும், அவ் வான்மாக்களுக்குள்ளது தொண்டக்குலம் ஒன்றே யாம். இவர்களுக்கு வினைப்பயன் காரணமாக இறைவன் அளித்தருளிய தேகமும், இயற்கையான தொன்றேயாம். ஆயினும், இவர்கள் அனுபவிக்கும் பயன்கள் வெவ்வேறுபட்டனவாகும். புகழ் இலா பம் பூசை முதலிய பலன்களில் ஒருவகையான பலனையும் எதிர்பாராமல், கடைக்கணித்தருளத் திருவுள்ளம் உடைய ஆசாரியர்களின் திருவடிகளை விரும்பிப் பணியாததொன்றே, ஆன்மாக்கள் அடை யும் பலவகைத் துயரங்களுக்கும் மூலகாரணமான பிழையாகும். ஆசாரியர்களின் திருவடிகளை விரும்பி வழிபடும் பண்புடையவர்களுக்கு, வினைகளால் விளை யும் துன்பங்கள் எதுவும் இல்லை.

குலம்ஒன்று, உயிர்பல, தங் குற்றத்தால் இட்ட
கலம்ஒன்று, காரியமும் வேறும்,-பலம்ஒன்று
காணுமை காணும் கருத்தார், திருத்தாள்கள்
பேணுமை காணும் பிழை

[குலம்-தொண்டக்குலம். தம்குற்றத்தால்இட்ட கலம்-தம்முடைய தீவினையின் பயனாக இறைவன் அளித்த உடலாகிய பாத்திரம். காரியம்-அனுபவிக் கும் பயன்கள். வேறுஆம்-வெவ்வேறுபட்டன வாகும். பலம்-புகழ் பொருள் பூசை முதலிய பயன்கள். காணுமை-எதிர்பாராமை. காணும் கருத்தார்-கடைக்கண்ணால் நோக்கி அருள்புரியும் திருவுள்ளம்உடைய ஆசாரியர்கள். பேணுமை-விரும்பிப்பணியாமை. பிழை-பெருங்கேடுகளுக்கு மூலமான குற்றம்.]

## (3) குலம்கொண்டு காரியம்என் கூறீர்:

ஆன்மாக்களுக்கெல்லாம் தொண்டக்குலம் என்பது, அவர்களால் ஒழிக்க ஒழியாததாக இருந்து வருகின்றது. ஆயினும், அது அவர் களுக்குப் பயன்படாமலே கழிந்தொழிகின்றது. அதற்குக் காரணம், எது மேலான பயனாகிய பரதத் துவமோ அதனைக் கைவிட்டு, வேறு பொருள்களைப் பயன் என்று மயங்கி மருள் கொண்டு ஆன்மாக்கள் அலைவதே யாகும். ஆதலின் வேறு பயன்கள் உண்டு என்று நம்பி, அவைகளை அடைய வீணே அலை வதைக் கைவிட்டு, இறைவனையே நாம் எய்துதற்

குரிய மேலான பயனைத் தெளிந்து, அவனையே பற்றி வழிபட்டுக் கொண்டிருப்பவர்கள், எல்லா நலங்களையும் பெறுவார்கள்.

உலகில் மக்கள் பலர் தம்மைத் தொண்டக் குலத்தைச் சேர்ந்தவராக உணராமல், உலகியலில் உடற்பிறப்பையொட்டி வகுக்கப்பெற்றுள்ள பல வகைச் சாதி குலம் என்னும் சுழிபட்டுத் தடுமாறுகின்றனர். அவரவர்க்குத் தத்தம் பயனைத் தந்தே விடும் வினைகள் உள்ளன. ஆதலின், உலகியலை யொட்டிய சாதி குலவேறுபாடுகளால் ஒரு பயனும் இல்லை. திரிவிக்கிரமனாய் எல்லா உலகங்களையும் உள்ளடக்கிக்கொண்ட இரண்டு திருவடிகளை யுடைய திருமால், உலகளந்த அந்தக் காலத்திலேயே, தன்னையொழித்த எல்லா உயிர்களையும் தனக்கு அடிமை கொண்டருளினன் என்பதனை உணர்ந்து, தம்மை அவனது தொண்டக்குலத்தைச் சேர்ந்தவராகத் தெளிந்து, அவனை அன்பினால் வழிபடுபவர்களே, தீவினைகளினின்று விடுபட்டு எல்லா இன்பங்களையும் அடைவார்கள்.

பலங்கொண்டு மீளாத பாவம் உளதாகில்
குலங்கொண்டு காரியம்என்? கூறீர்—தலங்கொண்ட
தாளிணையான் அன்றே தனைஒழிந்த யாவரையும்
ஆளுடையான் அன்றே அவன்.

[பலம்கொண்டு மீளாத பாவம்-பலனை அனுபவிக்கச் செய்தல்லது நீங்காத தீவினைகள். 'பலன்' என்னும் சொல் 'பலம்' என வந்தது. தலம் கொண்ட-எல்லா உலகங்களையும் தாவி அளந்த.]

## (4) காணும்வகையுண்டோ?

இறைவனுடைய திருவடியை, கர்மயோகம் ஞானயோகம் முதலியனவற்றால் நாம் காணமுடியாது. இறைவனுடைய திருவடிகள் தாமே, தம்மை நமக்குக் காட்டிக் கொடுத்தால் மட்டுமே, நாம் அவற்றைக் காண்டல் இயலும். உலகில் உபாயமும் உபேயமும் வெவ்வேறாகவே இருக்கும். இரண்டும் ஒன்றாதல் உலகில் யாண்டும் இல்லை. அதுமட்டுமல்ல. உபேயம்(பலன்) கிடைத்த அளவில் உபாயம் (பலனை அடைவதற்குரிய வழி) விடத்தக்கதாக இருக்கும். ஆனால் இறைவன் திறத்தில் அம்முறைமை இல்லை. இறைவனின் திருவடிகளே உபேயம். அவைகளே உபாயமும் ஆகும். இறைவனை அடைவதற்குப் பிரபத்தி உபாயம் என்றாலும், பிரபத்தியின் பயனாக உள்ள எம்பெருமானே உண்மையில் உபாயம் ஆவான். இறைவனின் திருவடிகளை, அத்திருவடிகளே நமக்குக் காட்டினால்தான், அவற்றை நாம் காணும் வகையுண்டு. மற்று நாம் செய்யும் கருமத்தாலும் ஞானத்தாலும் காணும் வகையில்லை.

மந்தரமலையாகிய ஒரு மத்தினால் திருப்பாற் கடலைக் கடைந்தவனாயும், அதன்கண் சேது அணை அமைத்தவனாயும், முதலில் நீர் என்னும் தத்துவத்தைப் படைத்தவனாகவும், அந்த நீரிலே திருக்கண் வளர்ந்தருள்பவன் ஆகவும் உள்ள திருமாலின் திருவடிகளை, அந்தத் திருமாலின் திருவடிகளே நமக்கு காட்டித்தந்தால் அல்லாமல், நாம் நம்முடைய கருமயோகம் ஞானயோகம் முதலியவற்றால் காண்பது இயலாது.

கருமத்தால் ஞானத்தால் காணும் வகையுண்டோ?
தருமத்தால் அன்றிஇறை தாள்கள்-ஒருமத்தால்
முந்நீர் கடைந்தான் அடைத்தான் முதல்படைத்தான்
அந்நீர் அமர்ந்தான் அடி.

[காணும்வகையுண்டோ?'' என்றவினாவிற்கு இல்லை என்பது கருத்து. தருமத்தால் என்றது ஒரு சொல்லன்று; தரும் அத்தால் என்று இரு சொல்லாகப் பிரிக்க. முந்நீர்-கடல்; ஆற்றுநீர் ஊற்றுநீர் மழைநீர் என்னும் மூன்றையும் தன்பாற் கொண்டது.]

## (5) இத்தலையால் ஏதும் இல்லை:

உலகில் ஓர் ஊரை அடைவதற்குப் பலவழிகள் இருப்பது உண்டு. ஆனால் இறைவனை அடைவதற்கு இங்ஙனம் இல்லை. பகவத் பிராப்திக்குப் பிரபத்தி என்னும் வழி ஒன்றுதான் உண்டு. இவ்வுண்மையைச் சாத்திரங்கள் அனைத்தும் தெளிவாகச் சாற்றுகின்றன. இவ்வுண்மையைத் தெளிந்து நாம் பிறவழிகளில் முயலாமல், பிரபத்தி நெறி ஒன்றிலேயே ஊன்றி ஒழுகுதல் வேண்டும். அப்போதுதான் நாம் நம்முடைய சுயமுயற்சியில் ஈடுபடுகின்ற இழிநிலை விலகும். நம்மால் நமக்கு நாமே விளைவித்துக் கொள்ளவல்ல நன்மை எதுவும் இல்லை. நமக்கு எல்லா நன்மைகளும் இறைவனாலேயே உண்டாகும் என்று, நம்பித் துணிந்திருப்பதுதான் நம்முடைய கடமையாகும். இத்தகைய உணர்வும் தெளிவும் நமக்கு வாய்ப்பது எளிதன்று. அதுவும் நமக்கு, இறைவனின் திருவருளினாலேயே கிடைத்தல் வேண்டும்.

பேற்றை அடைவதற்குரிய வழியானது வேறொன்றும் இல்லை. சித்தோபாயம் ஆகிய இறைவன்தான், நம்முடையபேற்றுக்குச் சாதனம் என்று நூல்களெல்லாம் கூறினால், அதற்கு இசைந்தும்; மற்றைய வழிகளையெல்லாம் அறவே ஒழித்துச் சித்தோபாயம் எனப்படும் இறைவனின் வழியிலேயே சேர்ந்து ஒழுகுக என்று நூல்கள் கட்டளையிட்டால் அதற்கு இசைந்தும்; நாமே நம்முயற்சியில் இறங்காமல், இப்பக்கமாகிய நம்மால் விளையக்கூடியது எதுவும் இல்லையென்று தெளிந்து, செயலற்றுச் சும்மா இருப்பதுதான், அப்பக்கமாகிய இறைவனால் நமக்கு வாய்த்த திருவருளாகும்.

வழியாவ தொன்றென்றால் மற்றவையும் முற்றும்
ஒழியாஅது ஒன்றுஎன்றால் ஓம்என்று-இழியாதே
இத்தலையால் ஏதும் இலஎன் றிருந்ததுதான்
அத்தலையால் வந்த அருள்

[வழி-சாதனம். ஓம்என்றல்-ஆம் என்று சம்மதித்தல். அது-சித்தோபாயம், கடவுள். ஒன்று-சேர். இத்தலை-உயிர்களின் பக்கம். அத்தலை-இறைவனின் பக்கம்.]

## (6) கொள்ளக் குறை ஏதும் இல்லான்:

நம் இயல்பையும், இறைவனின் இயல்பையும் குறித்து, நாம் உள்ளபடி சிந்தித்து உணர்ந்தால், நாம் அடையவேண்டிய பேற்றுக்குச் சாதனமாக, நம் பக்கல் ஏதேனும் ஒன்று உண்டு என்று சொல்வதற்கு வழியில்லை. ஆயினும் ''அரங்கா அடியேற்கு இரங்காயே'' என்று சொல்லி வேண்டிக்கொள்வதாவது, நாம் செய்யலாமே? அதுகூடவா நம்மிடம் இல்லாமற்போகும்? என்று, சிலருக்கு ஐயம் எழுதல் கூடும். இறைவன் நம்மைக் காக்குங்கால், நம்பக்கலில் அவன் எதனையும் பெற வேண்டிய விருப்பம் இல்லாதவன். நாம் அவனுக்குக் கொடுப்பதற்கோ, அவன் நம்மிடமிருந்து பெறுவதற்கோ உரியது யாதொன்றுமில்லை. ஆதலின் ''அரங்கா அடியேற்கு இரங்காயே' என்றாற்போல, நாம் விண்ணப்பித்துக் கொள்வதும்கூட வேண்டுவதில்லை. நாம் கூறாமலே அவன் அனைத்தையும் அறிவான். நாம் நம் ஆற்றாமையினால் இங்ஙனமெல்லாம் கூறிப்புலம்புகின்றோ

மேயன்றி, அவன் இவற்றையெல்லாம் இன்றியமை யாமல் விரும்பி நிற்கின்றான் என்பது கருத்தன்று. நம்முடைய செயல் முயற்சிகளால் ஆவது ஒன்றும் இல்லை என்றுணர்ந்து, எந்த நன்மையும் இறைவனாலேயே நமக்கு விளையும் என்று தெளிந்து, துணிந்து, பிரபத்தி செய்வதே நம் கடமையாகும்.

உள்ள படியுணரில் ஒன்றுநமக் குண்டென்று
விள்ள விரகிலதாய் விட்டதே-கொள்ளக்
குறைஏதும் இல்லாற்குக் கூறுவதென்? சொல்லீர்.
இறைஏதும் இல்லாத யாம்.

[விள்ள-சொல்ல. விரகு-வழி. கொள்ளக் குறையேதும் இல்லான்-நம்மிடத்திலிருந்து ஏதேனும் பெற்றுக் கொள்வதற்குத் தன்பால் குறைவு எதுவும் இல்லாதவன், கடவுள். ஏதும்-எதுவும். இறையும்-சிறிதும்.]

## (7) இருவருக்கும் இல்லை :

இறைவன்பால் நம்மிடம் ஒன்று பெற்றுக் கொள்ள வேண்டும்படியான குறை எதுவும் இல்லை. அங்ஙனமே இறைவனுக்கு வழங்கத்தக்க பொருள் எதுவும் உயிர்களாகிய நம்பக்கலில் இல்லை. இந்த உண்மையை, அபௌருஷேயம் ஆகிய வேதங்களால் நாம் உணரப் பெறுகின்றோம். உயிர்களும் இறைவனுமாகிய இருவருக்குமே, இங்ஙனம் ஓர் இல்லாமை உண்டு என்பதனை உணர்ந்து, அதனால் இறைவனை வென்றிருப்பவர் ஒருவரும் இல்லை. அத்தகைய வெற்றி எளிதாக ஒருவருக்கு வாய்க்கக் கடவதன்று.

இல்லை இருவர்க்கும் என்றிறையை வென்றிருப்பார்
இல்லை; அஃதொருவர்க்கு எட்டுமதோ?—இல்லை
குறையுடைமை தான் என்று, கூறினர் இல்லா
மறையுடைய மார்க்கத்தே காண்

நம்மிடம் ஒன்றை எதிர்பார்த்திருக்கும் குறைபாடு இறைவனுக்கு இல்லை. அவனுக்கு வழங்கத்தக்க எந்த ஒரு பொருளும் நம்மிடம் இல்லை. ஆதலால் அவன் அருளால், அவனிடத்திலேயே நாம் எல்லா நலங்களையும் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். இறைவனைப் பணிந்து தொழுதால், நமக்கு எல்லாப் பொருள்களும் எளிதில் கிடைக்கும் என்பது கருத்து. வேதமானது எவராலும் கூறப்பெறுமல், இயல்பாகத் தானே தோன்றிய அபௌருஷேயம் ஆதலால் ''கூறினர் இல்லார்மறை'' என்றார். வேதநெறி, மறையுடைய மார்க்கம் எனப்பட்டது. 'இறைவனுக்கும் ஒன்று இல்லை' என்றது. பழிப்பதுபோலப் புகழ்தல். நம்மிடமிருந்து பெறத்தக்க பொருள் எதுவும் இறைவனுக்கு இல்லை என்றது, அவனாலேயே நாம் எல்லாப் பொருள்களையும், நலங்களையும் பெறுதல் வேண்டும் என்னும் உண்மையை வற்புறுத்தியது.

## (8) உச்சியான் உச்சியான் :

பொருளைப் பெறுதலும், அதனை இழத்தலும், இன்பம் துய்த்தலும், துன்பம் உழத்தலும், நோய்களை அடைதலும், உடல் மெலிதலும் ஆகிய இவைகளெல்லாம், அவரவர் முன்பு செய்த வினைகளுக்கு ஏற்ப வந்துசேரும். ஆதலால், இன்பம் வந்தபோது மகிழ்தலையும், துன்பம் நேர்ந்தபொழுது தளர்தலையும் விட்டொழியுங்கள். எதனாலும் ஒரு பயனை விரும்பாத ஒருவன், எத்தகைய பயனையும் கருதாமல் (நிஷ்காமியமாக) இறைவனைத் துதித்தால், எழில்மிக்க பரமபதமாகிய வைகுந்தத்தின் உச்சியிலுள்ள எம்பெருமான், பயன் கருதாமல் அன்புடன் பணிகின்ற நிஷ்காமிய பக்தனின் தலை உச்சியில் வந்து சேர்ந்து, அருள் புரிவான்.

வித்தம் இழவு இன்பம் துன்பம்நோய் வீகாலம்
தத்தம் அவையே தலையளிக்கும்;—அத்தைவிடீர்!
இச்சியான் இச்சியாது ஏத்த, எழில்வானத்து
உச்சியான், உச்சியான் ஆம்

பலவகைச் செல்வங்களைப் பெறுதலாகிய பேறு, வித்தம் எனப்பட்டது. அவற்றையெல்லாம் அழியவிடுதல், இழவு எனப்பெற்றது. வீழ்காலம்-உடம்பு விழுந்து இறப்பு நேரும்காலம். 'வீழ்காலம்' என்பது 'வீகாலம்' என வந்தது. தத்தம் அவை-தாம்தாம் செய்த வினைகளாகிய பாவ புண்ணியங்கள். தாம் தாம் செய்த வினைப்பயன்களை, அவரவர் தவறாமல் அடைந்தே தீருவர் ஆதலால், ''தத்தம் அவையே தலையளிக்கும்'' என்றார். மகிழ்ச்சி அடைவதனால் மிகப் பெறுவதும், தளர்ச்சி உறுவதனால் குறையப் பெறுவதும் இல்லையாதலின் ''அத்தைவிடீர்'' என்றார். இச்சியான்-எப்பயனையும் விரும்பாத பக்தன். ''உச்சியான் (பரமபதத்தின் உச்சியிலுள்ள திருமால்), உச்சியான்ஆம். (பக்தனின் தலை உச்சியின் மேல் எழுந்தருளுவான்)'' என்றது, ஒருவகைச் சொல் நயம்.

## (9) நிரயமும் வானும் :

ஆசாரியர்கள் நமக்குச் செய்தருளும் நலங்களுக்கு ஓர் அளவில்லை. நாம் உய்தி பெறுவதற்காக ஆசாரியர்கள் தம் திருவடிகளைத் தஞ்சமாகக்காட்டிக் கொடுத்து அருள்புரிகின்றனர். இத்தகைய ஆசாரியரை, நாம் நம்முடைய இறைவனின் திவ்விய மங்களத் திருவுருவம் என்றே தெளிந்து கொண்டு, வணங்கி வழிபாடு செய்து வருதல் வேண்டும். அங்ஙனம் வழிபாடு செய்யாத பித்தர்களாக மாறி, ஆசாரியர்களை நிந்தனை செய்பவர்களுக்கு, ஒரு நாளும் கரையேற முடியாத, உலகியல் வாழ்க்கைப் படுகுழியாகிய நரகமே கிடைக்கும். அங்ஙனமின்றி ஆசாரியர்களை நெறிமுறை தவறாது அன்புடன் வணங்கி வழிபடும் நல்லவர்களுக்கு, என்றும் மீட்சியில்லாத வைகுண்டமாகிய பேரின்பத் திருநாடு எளிதாகக் கிடைக்கும்.

தத்தம் இறையின் வடிவென்று, தாள்இணையை
வைத்த அவரை வணங்கிஇராப்-பித்தராய்
நிந்திப்பார்க்கு உண்டு, ஏறா நீள்நிரயம்; நீதியால்
வந்திப்பார்க்கு உண்டு, இழியா வான்.

ஆசாரியரை வந்திப்பவருக்கு வானுலக இன்பமும், நிந்திப்பவர்களுக்கு நரகத் துன்பமும் வாய்க்கும் என்பது இச்செய்யுளால் உணர்த்தப் பெறுகின்றது. ''தாள் இணையைவைத்த அவர்'' என்றது, ஆசாரியரைக் குறிக்கும். ''தம்திருவடியை நம் தலைமேல் வைத்து அருள் புரிந்தவர்'' என்றும்; இறைவனின் திருவடிகளை நம் தலையின் மேலும் வைப்பித்தவர் என்றும்; இருவகையில் இத்தொடருக்குப் பொருள் கொள்ளலாம். இவற்றிற்கு முறையே ''மருளாம் இருள்ஓட மத்தகத்துத் தன் தாள் அருளாலே வைத்தவர்'' என்பதும், ''இராமாநுசன் பரன்பாதமும் என் சென்னித் தரிக்க வைத்தான்'' என்பதும், மேற்கோள்கள் ஆகும். 'தம் திருவடிகளை நமக்குத் தஞ்சமாகக் காட்டிக் கொடுத்து வைத்தவர்' என்று கொள்வதும் பொருத்தமாகும்.


**(10) உணர்த்துவார் இல்லாநாள் ஒன்றல்ல.**

இறைவனையும், உயிர்களையும், இவ்விருவருக்கும் உண்டான தலைவன் அடியவன் என்னும் உறவு முறைத் தொடர்பையும், முறையே நமக்கு உள்ள படி தெரிவிக்கின்ற மறைமொழியான திருமந்திரத்தை, நமக்கு உபதேசித்து அருள்பவன் ஆசாரியனே ஆவன். அத்தகைய சிறந்த ஆசாரியன் கிடைக்கப் பெறாமல், கழிந்தொழிந்தகாலமெல்லாம் நமக்குப் பயனில்லாத வீண் காலமே ஆகும். திருமந்திரப் பொருளை உபதேசித்தருளும் ஆசாரியன் கிடைத்தருள்கின்ற காலமே, நமக்குப் பயன்மிக்க நல்ல சிறந்த உய்திக்காலமாகும்.

இறையும் உயிரும் இருவர்க்கும் உள்ள
முறையும் முறையே மொழியும்—மறையை
உணர்த்துவார் இல்லாநாள் ஒன்றல்ல; ஆன
உணர்த்துவார் உண்டான போது.

இச்செய்யுள் ஆசாரியன் நமக்குச் செய்யும் நன்மைகளை உணர்த்தி, அத்தகைய ஆசாரியனை அடைய வேண்டுவதன் இன்றியமையாமையை, இனிது வற்புறுத்தி அறிவுறுத்துகின்றது. இறை-எம்பெருமானின் இயல்பு. உயிர்-உயிர்களின் இயல்பு. இருவருக்கும் உள்ளமுறை-இறைவனுக்கும் உயிர்களுக்குமுள்ள தொடர்பு. மொழியும்-விளக்குகின்ற. மறை-திருவெட்டெழுத்து மந்திரம். உணர்த்துவார்-உபதேசிக்கும் ஆசாரியர். ஆசாரியன் கிடைக்காமல் கழிந்த நாளெல்லாம், ஒரு பயனும் அற்ற வீண் நாளாகவே முடிதலின், ''உணர்த்துவார் இல்லாநாள் ஒன்று அல்ல'' என்றார். ஆசாரியனால் உபதேசம் கிடைக்கப் பெறும் நாள் முதல், நமக்கு எல்லா நலங்களும் விளைதலின், ''உணர்த்துவார் உண்டானபோது ஆன'' என்றார். போது-காலம். 'ஆயின' எனற்பாலது 'ஆன' என வந்தது. நன்மைகள் பலவாக விளைதல் பற்றியும், அது ஐயமற்றுத் திண்ணமாய்த் தெளியப்படுதல் பற்றியும் 'ஆயின' எனப் பன்மையாகவும், இறந்த காலமாகவும் அருளிச் செய்தார். ஆசாரியன் அருளால் எல்லா நலங்களும், தாமே விளையும் என்பது கருத்து.

(பிரமேயசாரம் முற்றிற்று) —ஆசிரியர்.



'அருள்மொழியரசு' திருமுருக. கிருபானந்தவாரியார் சுவாமிகள் அவர்களால் எழுதப்பெற்று, வானதி பதிப்பகத்தினரால் அச்சிடப்பெற்ற ''பிள்ளையார் பெருமை'' என்னும் நூல், கவிஞர் கண்ணதாசன் அவர்களால், திருமயிலைக் கபாலீசுவரர் கோயிலில் வெளியிடப்பெற்றபோது, அவ்விழாவுக்குத் தலைமை தாங்கி, நம் அறநிலைய ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், I.A.S., அவர்கள் உரை நிகழ்த்துதல் (13—10—76)

# தமிழிலக்கியங்களில் சூரிய வழிபாடு

திரு. ச. ஹரிஹரன், M.A.,

பண்டைத் தமிழிலக்கிய நூல்களில் பெருமளவில் துதிக்கப்படுகிருர் சூரிய பகவான். உலகின் பல்வேறு நாட்டுக் கவிஞர்கள் தங்கள் தங்கள் மொழிகளில் சூரியனின் பெருமையையும் சந்திரனின் தண்மையையும் பல்லாற்ருனும் புகழ்ந்துள்ளனர். சிறப்பாகப் பண்டைய, தற்காலத் தமிழிலக்கியங்கள், சூரியனை வியப்புறத்தக்க அளவிற்குப் போற்றியுள்ளன என்ருல் அது மிகையாகாது. தொன்மையான தமிழிலக்கிய நூலாகக் கருதப்படும் தொல்காப்பியத்தில் பின்வரும் வரிகள் சூரிய வழிபாட்டைக் குறிக்கின்றன.

காலம் உலகம் உயிரே உடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்
ஞாயிறு திங்கள் சொல்என வரூஉம்
ஆயீ ரைந்தொடு பிறவும் அன்ன
ஆவயின் வரூஉம் கிளவி எல்லாம்
பால்பிரிந் திசையா உயர்திணை மேன.

(தொல்காப்பியம்-சொல்லதிகாரம்—57)

தொல்காப்பியம் சொல்லதிகாரத்தில் 'வினை' 'பால்வரை தெய்வம்' 'பூதம்' போன்ற பெயர்ச் சொற்களைக் குறிக்கும் சூத்திரம் 'ஞாயிறு' 'திங்கள்' ஆகிய சொற்களையும் குறிக்கிறது. இவ்வதிகாரத்திற்கு உரையெழுதிய உரையாசிரியர் சேனவரையர் 'வினை' என்பது தர்மதேவதையைக் குறிப்பதாகவும், 'சொல்' என்பது கல்வியறிவுக்கு அதிதேவதையான வாணியைக் குறிப்பதாகவும், கூறுகிருர். எனவே ஞாயிறு எனப்படுவதும் வழிபடப்படும் இறைவனுகக் கொள்ளலாம். இவ்விலக்கண விதிகள் சூரிய வழிபாட்டை இந்துக்களின் அறுவகைச் சமய வழிபாட்டில் ஒன்ருகத் தெளிவாகக் கூருவிடினும், தொல்காப்பியம் 'ஞாயிறு' பற்றிக் குறிப்பதால் தமிழர்கள் பண்டு தொட்டுச் சூரியனை வழிபட்டு வந்தார்கள் என்று கருத இடமுண்டு.

சூடாமணி நிகண்டில் சூரியனைக் குறிக்கும் 'பனிப்பகை' (பனியை அழிப்பவன்), 'தினகரன்' (நாளை உண்டாக்குபவன்) போன்ற நாற்பத்தொன்பது சொற்கள் மூன்று செய்யுட்களில் இடம் பெறுகின்றன. இச்செய்யுட்கள் சூரியனின் பல்வகைப் பெயர்களைத் தொடராகக் குறிப்பதால் சூடாமணி நிகண்டு ஆசிரியர் இவற்ருல் சூரிய வழிபாட்டை உறுதி செய்கிருர்.

பரிதி பாற்கர ஞதித்தன் பனிப்பகை சுடர் பதங்கன்
இருள்வலி சவிதாச் சூரன் எல்லு மார்த்தாண்ட
னென்றூழ்
அருண னுதவனே மித்திர ஞயிரஞ் சோதியுள்ளோன்
தரணி செங்கதிரோன் சண்டன் தபனனே ஒளியே
சான்ருேன்

அனலியே அரியே பானு அலரியே அண்டயோனி
கனலியே விகர்த்தனன் வெங்கதிரவன் பகலோன்
வெய்யோன்

தினகரன் பகலே சோதி திவாகரனரிய மாவே
இனனுடன் உதயன் ஞாயிறெல்லையே கிரணமாலி
விரவும் ஏழ்பரியோன் வேந்தன் விரிச்சிகன் விரோச
னன் பேர்
இரவி விண்மணி யருக்கனேழேழும் சூரியன் பேர்
பரிதி பின்வட்டம் தானே விசயமாம் பரிதி வீசும்
கிரணமே கரமுமற்றைக் கிளர்ந்த தீவிரமுமாகும்

[சூடாமணி நிகண்டு 55, 56, 57]

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்ருன நற்றிணையின் முதற்செய்யுளான கடவுள் வாழ்த்துப்பாவில் பாரதம் பாடிய பெருந்தேவனுர் சூரியனை, காக்கும் கடவுளாம் திருமாலின் இரு கண்களில் ஒன்ருக வர்ணித்துள்ளார்.

''மாநிலம் சேவடி ஆகத் தூநீர்
வளைநரல்பௌவம் உடுக்கை ஆக,
விசும்பு மெய்ஆகத் திசை கைஆகப்
பசுங்கதிர் மதியமொடு சுடர்கண்ணுக
இயன்ற எல்லாம் பயின்று அகத்து அடக்கிய
வேத முதல்வன் என்ப
தீதற விளங்கிய திகிரியோனே'' [நற்றிணை-]

இதன் கருத்து: சுழலும் ஆழியைத் தாங்கிய திருமாலுக்கு நிலமகள் காலாகத் திகழ்கிருள். பரந்து விரிந்த கடல் ஆடையாகத் திகழ்கிறது. விண்ணுலகே உடலாகவும், திசைகள் கரங்களாகவும், திங்களும், ஞாயிறும் இரு கண்களாகவும், கொண்ட இறைவன் (திருமால்), அனைத்தையும் தன்னுள் அடக்கி வேத முதல்வனுகத் திகழ்கிருர்.

எட்டுத்தொகையில் அடங்கும் மற்ருெரு நூலான புறநானூற்றில், நான்காவது செய்யுள் தேரில் பவனி வரும் மன்னனை உதய சூரியனுக்கு ஒப்பாகக் கூறுகிறது. இதனை இயற்றிய கவிஞர் உதய சூரியனின் எழிலில் லயித்திருக்க வேண்டும் என்றே தோன்றுகிறது.

நீயே அலங்குளைப் பரீஇ இவுளிப்
பொலந்தேர் மிசைப் பொலிவு தோன்றி
மாக்கடல் நிவந்தெழுதரும்
செஞ்ஞாயிற்றுக் கவினை மாதோ

[புறநானூறு 4]

பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்ருன திருமுருகாற்றுப்படை சூரியனைக் குறிக்கும் பின்வரும் வர்ணனையுடன் துவங்குகிறது.

''உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
ஓஅற இமைக்கும் சேண் விளங்கு அவிரொளி''

[திருமுருகாற்றுப்படை —3]

இதன் கருத்து : 'எல்லோராலும் போற்றிப் புகழப்படும் சூரியன் கடலினின்று வெளிப்பட்டுத் தன்னுடைய ஒளிமிக்க கிரணங்களால் உலகை உய்விப்பதற்காக நேர்வழியில் பயணம் துவக்குகிருன்'—என்பதே

இவ்வரிகளுக்கு உரைஎழுதிய நச்சினுர்க்கினியர் 'பலர், புகழ் ஞாயிறு' என்னும் தொடரை அனைத்துச் 'சமயத்தாரும் வழிபடும் சூரியன்' என்று பொருள்படுத்துகிருர். இந்து சமயத்தின் பல்வேறு

பிரிவினரும் சூரியனை வழிபட்டனர் என்பது இதனால் தெளிவாகிறது.

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரம், மங்கல வாழ்த்துப் பாடலில் சூரியனைப் பின் வருமாறு போற்றுகிறது.

'ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோற் பொற்கோட்டு
மேருவலம் திரிதலான்'
[சிலப்பதிகாரம்-மங்கல வாழ்த்து]

இதன்பொருள்: 'காவிரிக்கரை மன்னனின் ஆணையைப் போல, மேருமலையை வலம் வரும் சூரியனே உனக்கு எங்கள் வணக்கங்கள்'.

சிலப்பதிகாரக்காப்பிய ஆசிரியர் இளங்கோ அடிகள் மேருவையும் சூரியனையும் மட்டுமன்றி, காவிரி நதியையும், மேகங்களையும், மேருவையும் வணங்குகிறார். காவிரி நாடன் ஆகிய சோழ மன்னனின் ஆணைச்சக்கரம் எவ்வாறு பொறுப்புடன் நிறைவேற்றப் படுகின்றதோ, அதுபோன்று மேருமலைமீது தோன்றி உலகம் சுற்றும் சூரியனின் கடமை உணர்வையும் இச்செய்யுள் விவரிக்கிறது.


தற்காலத் தமிழிலக்கிய உலகில் தனக்கெனத் தனித்தன்மை பெற்று விளங்கியவர் தேசியக்கவிஞர் சுப்பிரமணிய பாரதியார். புகழ்பெற்ற தன்னுடைய 'பாஞ்சாலி சபதம்' கவிதை நாடகத்தில் பாரதியார் சம்ஸ்கிருத மொழியில் உள்ள காயத்ரி மந்திரத்தைத் தெள்ளு தமிழில் உருவாக்கி அதனையே சூரிய வணக்கமாகக் கொள்கிறார்.

தன்னுடைய புதிய ஆத்திச் சூடியில் 'ஞா' என்ற எழுத்திற்கு 'ஞாயிறு போற்று' என்று கூறியுள்ளார் பாரதியார். மேலும் 'ஞாயிறு' என்னும் தலைப்பில் வசன கவிதை ஒன்றைப் புனைந்துள்ளார். இதில் சூரியனை வீரத்திற்கு அதிபதியாகக் கூறுகிறார்.

சூரியனைச் சக்தி வெள்ளத்தில் ஒரு குமிழாகவும், சக்திப் பொய்கையில் ஒரு மலராகவும் பாரதியார் வர்ணிக்கிறார்.

வேதங்களிலும், உபநிடதங்களிலும் தேர்ந்த அறிஞராகத் திகழ்ந்ததால் 'சூரிய நமஸ்காரம்' என்ற தலைப்பில் நிரம்ப எழுதியுள்ளார்.

சூரிய வழிபாட்டைக் குறிக்கும் வகையில் 'சௌர மதம்' பற்றித் தமிழிலக்கியங்கள் குறிக்காது போயினும், சூரிய வழிபாட்டு மரபு பண்டு திகழ்ந்தது என்பதை அறிய முடிகிறது. சிலப்பதிகாரத்தில் மதுரையை எரிப்பதற்கு முன் கண்ணகி, நீதி வேண்டிச் சூரியனை நோக்கி முறையிடுவதாக அறிகிறோம். தமிழிலக்கியங்கள் சூரியனை இயற்கையின் முதன்மைச் சக்தியாகப் போற்றுகின்றன. 'காலம் உலகம்' என்று துவங்கும் தொல்காப்பிய வரிகள், சூரியனைச் சிறப்பாக வழிபடும் 'சௌர மதம்' துவங்கியதைக் குறிப்பதாகக் கொள்ளலாம். தர்மதேவதை, பால்வரை தெய்வம் ஆகியோர் வரிசையில் சூரியனும் கடவுளாக வணங்கப்படுகிறார். சிலப்பதிகாரமும், திருமுருகாற்றுப்படையும், இது பற்றிச் சான்று பகர்கின்றன. கடவுளர் வரிசையில் சூரியனையும் இடம் பெறச் செய்கிறது நிகண்டு. இவையனைத்தும் தமிழகத்தில் சூரிய வழிபாட்டு மரபினைத் தெளிவாக்குகின்றன. **



திருவானைக்கா அருள்மிகு அகிலாண்டேசுவரி ஜம்புகேசுவரர் திருக்கோயிலில், திருநீற்றான் திருமதிலின் திருப்பணித் துவக்க விழாவின்போது, திருப்பணிக்குழுவின் பொருளாளரும், டி.எஸ்.டி பஸ் அதிபரும் ஆகிய திரு. எம். இராமசாமி செட்டியார் அவர்கள் ரூ. (பத்தாயிரம்) 10,000/-க்குள்ள காசோலையைத் திருப்பணி நன்கொடையாக, நம் அறநிலைய ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், I.A.S, அவர்களிடம் வழங்குதல் (8—9—76).

# காமாட்சியம்மையின் கருணை நலம்

**முன்னுரை :**

உலக உயிர்களுக்கெல்லாம் அன்னையாகிய இறைவி, வெவ்வேறு தலங்களில் வெவ்வேறு வகையான பெயரும் வடிவமும் தாங்கி விளங்குகின்றாள். அம்முறையில் கல்வியிற் கரையில்லாத காஞ்சிமாநகரில், காமாட்சியம்மை என விளங்கி இறைவி அருள் புரிந்து வருகின்றாள். காமாட்சியம்மையின் கருணை கடலினும் பெரிது. அவள் தன் அடியவர்க்குச் செய்து போதரும் கருணை நலத்திற்கு ஓர் எல்லையே இல்லை. தன் கருணையின் மிகுதியால், காமாட்சியம்மை தன் அடியவர்களுக்கு அவர்கள் விரும்புவனவற்றையெல்லாம் ஏராளமாக வாரி வாரி வழங்குகின்றாள். அதனால் காமாட்சியம்மைக்குக் காமகோடி எனவும் ஒரு பெயர் வழங்கும்.

**காமகோடி :**

காமாட்சியம்மைக்குக் ''காமகோடி'' என்னும் சிறப்புப் பெயர் வழங்குதல் குறித்து, அரிய நுண்ணிய பலவகைப் பொருள் விளக்கங்களைச் சிவஞான சுவாமிகள் செய்தருள்கின்றார். அப்பொருள் விளக்கங்கள் வருமாறு :

1. காமம் என்பது விருப்பம். வழிபடும் அடியவர்கள் விரும்பும் நலங்களையும், செய்யும் தவத்தின் பயன்களையும், கோடிமடங்காகப் பெருக்கி அளிக்கும் சிறப்பினால், காமாட்சியம்மைக்குக் காமகோடி எனப் பெயர் அமைந்தது.

2. காமம் என்னும் சொல் விருப்பம் எனப் பொருள் தந்து, பின்னர் அனைவராலும் விரும்பப் பெறுகின்ற செல்வத்தையும் குறிக்கும். தன்னை வழிபடும் அடியவர்களுக்குக் கோடிக் கணக்கான செல்வங்களை வழங்குவதனால், காமாட்சியம்மைக்குக் காமகோடி எனப் பெயர் ஏற்பட்டது.

3. காமம் என்னும் சொல், மனைவி மக்கள் பொன் அணி இருக்கை புகழ் முதலிய பலவகை நலங்களையும் குறிக்கும். தன்னை வழிபடும் அடியவர்களுக்கு, இத்தகைய பற்பல நலங்களையும் கோடிக்கணக்கில் பெருகுமாறு செய்து அருள் புரிதலால், காமாட்சியம்மைக்குக் காமகோடி எனப் பெயர் உண்டாயிற்று.

4. மக்கள் உயிர்க்கு உறுதி பயக்கும் பொருள்கள் நான்கு. அவற்றைப் ''புருஷார்த்தங்கள்'' என்பர். அவையாவன : தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்பன. இவற்றுள் காமத்தை அடுத்துக் கோடியில் உள்ள மோட்சத்தினை, பக்தர்களுக்கு எளிதாகவும் இனிதாகவும் விரைந்து வழங்குவதனால், காமாட்சியம்மைக்குக் காமகோடி எனப் பெயர் வந்தது.

5. ககரம் ஆகிய பிரமனையும், அகரம் ஆகிய திருமாலையும், மகரம் ஆகிய உருத்திரனையும், யுகந்தோறும் கோடி முறை தன் கண்களிலிருந்து படைத்து வெளிப்படுத்துவதனால், காமாட்சியம்மைக்குக் காமகோடி எனப் பெயர் வழங்குகின்றது.

6. கா என்னும் ஓர் எழுத்துச் சொல் கலைமகளையும், மா என்னும் ஓர் எழுத்துச் சொல் திருமகளையும் குறிக்கும். இவ்விருவரால் முறையே விளையும் கல்வியும் செல்வமும் ஆகிய நலங்களையெல்லாம், தனது கண்ணின் கோடியால் (கடைக்கண் பார்வையினால்), பக்தர்களுக்கு மிகுதியாக அளித்தருள்வதனால், காமாட்சியம்மைக்குக் காமகோடி என்ற பெயர் அமைந்தது.

**சிவஞான சுவாமிகள் :**

இங்ஙனம் கருணையிற் சிறந்த காமாட்சியம்மைக்கு ஏற்பட்ட, காமகோடி என்னும் காரணப் பெயரின் சிறப்பை வியந்து, அதற்கு ஏற்ற இனிய எதுகைத் தொடர்களை அமைத்து, அழகிய துதிச் செய்யுள் ஒன்றை, மாதவச் சிவஞான சுவாமிகள் பாடி மகிழ்கின்றார். காமகோடி என்பது, செய்யுளில் காமக்கோட்டி எனவும் வழங்கும்.

''கருக்காமக் கோட்டிமிர வினையனைத்தும்
ஒருங்கெய்திக் கலகம் செய்யும்
தருக்காமக் கோட்டியெலாம் அறஎறிந்தாம்;
இனிஎன்றும் தகைசால் அன்பு
சுருக்காமக் கோட்டினைச்சே யரைகரம்கொண்
டார்க்குமுலைச் சுவடு நல்கும்
திருக்காமக் கோட்டியம்மை சேவடிப்போ
தெப்போதும் சிந்திப் போமால்!''

**பாடலின் பொருள் :**

''பிறவியைத் தரும் அவாவாகிய தீமையை விளைவிக்கின்ற, இருள்மலம் காரணமாக வரும் கொடிய பாவங்கள் எல்லாம், ஒருங்கு வந்து அடைந்து, நம்மிடத்திற் குழப்பம் விளைவிக்கும் செருக்கு உடையனவாகும். அப்பாவக் கூட்டங் களையெல்லாம், யாம் அறவே அழித்து எறிந்து விட்டோம். அதனல் இனி யாம் எப்போதும் தகுதி நிறைந்த நல்ல அன்பினைச் சுருக்காமல் மிகுதியாகப் பெருக்குவோம். சங்கு மணியினைச் சிவந்த அரையிலும், தலையோட்டினைக் கையி லும் தரித்துள்ள திருவேகம்பநாதருக்குத் தனது தனது முலைத்தழும்பும் வளைத்தழும்பும் ஏற் படும்படி செய்தருளிய, திருக்காமக்கோட்டி என்னும் காமாட்சியம்மையின் திருவடி மலர் களை, யாம் எப்போதும் சிந்தித்து வணங்கு வோம்'' என்பது, இந்த அரிய இனிய பாடலின் சிறந்த பொருள் ஆகும்.

''கருக்காமக் கோள்திமிர வினையனைத்தும்
ஒருங்கெய்திக் கலகம் செய்யும்
தருக்குஆம்; அக்கோட்டிஎலாம் அறஎறிந்தாம்:
இனி என்றும் தகைசால் அன்பு
சுருக்காம்: அக்கு ஓட்டினைச் சேய்அரைகரம்
கொண்டார்க்கு முலைச்சுவடு நல்கும்
திருக்காமக் கோட்டியம்மை சேவடிப்போது
எப்போதும் சிந்திப் போமால்''

[கரு-பிறவி. காமம்-அவா. கோள்-கொள்ளச்செய் வது. தருக்கு-செருக்கு, அகந்தை. அக்கோட்டி- அந்தக்கூட்டங்கள். எறிந்தாம்-அழித்து ஒழித்து விட்டோம். அற-முழுவதும். சுருக்காம்-சுருக்க மாட்டோம், பெருக்குவோம். அக்கு-சங்குமணி. ஓடு-பிரமகபாலம். சேய்அரை-சிவந்த இடுப்பு. கரம்-கை. சேவடிப் போது-திருவடி மலர்கள்.]

என்று இப்பாடலைச் சொற்பிரிவு செய்து, பொருள் கொண்டு மகிழ்தல் வேண்டும். சொற் சுவையும், பொருட்சுவையும் நிறைந்து திகழும் இவ்வினிய பாடலைப்பாடிப் பயின்று, காமாட்சி யம்மையின் கருணை நலனைப் பெற்று, நாம் களித்து உய்வோமாக.

—ஆசிரியர்



**அருள்மிகு விநாயகப் பெருமான்**

# அருணகிரிநாதரும் திருவானைக்காவும்

**முன்னுரை :**

செந்தமிழ்த் தெய்வம் எனத் திகழும் திரு முருகனின் திருவருள் நலங்களைச் சிறப்பித்து வியந்து, திருப்புகழ் என்னும் இனிய சந்தநலஞ் சான்ற தெய்விகப் பாடல்களை அருளிச் செய்த அருணகிரிநாதர், தேவாரத் திருப்பாடல் பெற்ற எல்லாச் சிவதலங்களுக்கும் சென்று தரிசித்து மகிழ்ந்து, புகழ்ந்து பாடிய தலங்கள் பலவற்றுள் திருவானைக்காவும் ஒன்றாகும்.

திருவானைக்கா என்னும் சிறந்த தலத்தைக் குறித்து அருணகிரிநாதர் பதின்மூன்று (13) திருப்புகழ்ப் பாடல்களை அருளிச் செய்துள்ளார். அப்பாடல்களில் திருவானைக்காவைப் பற்றிய பல அரிய குறிப்புக்கள் அவரால் வெளியிடப் பெற்றுள்ளன.

**ஆனைக்கா :**

திருவானைக்கா காவிரியாறு பாயும் சோழ நாட்டில் உள்ளது. அது பெரு வெள்ளமாக அலைகள் மோதப் பரந்து ஓடி வருகின்றது. அங்கு எங்கணும் மணம் நிறைந்த சோலைகள் சூழ்ந் துள்ளன. காவிரியாறு பாய்வதனால் வளம் மிகுந்து, அங்கு மனிதர்கள் மட்டுமேயன்றி எல்லா உயிர்த் திரள்களுமே இன்புற்றுத் தழைத்து வாழ்கின்றன.

''மனித்த ராதி சோணாடு
தழைக்க மேவு காவேரி
மகப்ர வாக பானீயம் அலைமோதும்
மணத்த சோலைசூழ் காவை
அனைத்து லோகம் ஆள்வாரும்
மதித்த சாமியே தேவர் பெருமாளே''

திருவானைக்காவில் செந்தமிழ் வல்ல பாணர்களாகிய யாழ்ப்பாணர்கள் தமது யாழினை மீட்டி இனிய சங்கீதம் பாடிக்கொண் டிருக்கின்றனர். மயில் போன்ற சாயலையுடைய அழகிய பெண்கள் ஆடியும் பாடியும் இறைவனை வழிபடுவர் என்னும் குறிப்பு, ''செந்தமிழ் பாணப் பாவலர் சங்கித யாழைப் பாடிய தென் திருவானைக்காவுறை பெருமாளே'' என்றும்; ''ஆசைத்தோகைமார்கள் இசையுடன் ஆடிப்பாடி நாடிவரு திருஆனைக்காவில் மேவி அருளிய பெருமாளே'' என்றும் வரும் திருப் புகழ் வரிகளால் பெறப்படுகின்றது.

யானைக்குக் கஜம்—கயம்—கரி என்னும் பெயர்கள் இலக்கியங்களில் வழங்கும். அதனால் திருவானைக்காவை அருணகிரிநாதர் ''துங்க கஜாரண்யம்'' என்றும், ''கயப்பதி'' என்றும், ''கரிவனம்'' என்றும், வெவ்வேறு வகைகளில் செவ்விதின் வழங்கியருளியிருக்கின்றார். இதனால் அவர்தம் சொல்லாற்றல் திறனும், இத்தலத்தில் அவர்க்கிருந்த எல்லையற்ற ஈடுபாடும் புலனா கின்றன.

முன்னொரு காலத்தில் இங்கிருந்த சோலை யில் ஆனை ஒன்று, இறைவனை அன்புடன் வழி பட்டு உய்ந்தது. அதனால் இத்தலத்திற்கு ஆனைக்கா என்னும் பெயர் ஏற்பட்டது. இக் குறிப்பை ''அழகிய திருவானைக்கா உறைபெரு மாளே'' என்றும், ''ஆனைக்காவில் மேவியரு ளிய பெருமாளே'', 'ஆனைக்காவிற் பெருமாளே' என்றும் பலவகைகளில் அருணகிரிநாதர் அழ குறக் குறிப்பிட்டருள்கின்றார்.

**காவை :**

ஆனைக்கா என்னும் சொல்லே சுருக்கமாகக் குறுகி நின்று காவை என மருவி வழங்கும். ஆதலின் ''மணத்த சோலைக் காவை அனைத்து லோகம் ஆள்வாரும் மதித்த சாமியே தேவர் பெருமாளே'' என்றும், ''சூரர்புர சூறைக்கார! சுரர் காவற்கார! இள ஏனற் புனம் மேவும் தோகைதிருவேளைக்கார! தமிழ் வேதச் சோதி வளர் காவைப் பெருமாளே'' என்றும் வரும் திருப்புகழ்ப் பகுதிகள், நாம் பெரிதும் சிந்தித்து இன்புறுதற்குரியன. திருவானைக்காவிற்கு உரிய புனித மரம், சம்பு என்னும் வெண்ணாவல் மரமாகும். அதனால் வெண்ணாவல் என்னும் பெயரையும், அருணகிரிநாதர் தமது பாடல் களில் ''ஏழிசைத் தமிழிற் பயனுற்ற வெண் ணாவல் உற்று அடியில் பயில் உத்தமஈசன், முக்கண் நிருத்தன் அளித்தருள் பெருமாளே'' என்றும், ''வெண்ணாவல் அரசுமனை, வஞ்சி தந்தருள் பெருமாளே'' என்றும், குறிப்பிட் டருள்கின்றார்.

**சிலந்தி:**

திருவானைக்காவில் யானை மட்டுமேயன்றி, சிலந்தியும் வழிபட்டு அருள் பெற்றது. இக் குறிப்பு அருணகிரிநாதருக்கு முற்பட்ட தேவா ரப்பாடல்களில் கூறப்பெற்றுள்ளது. அதனைத் தழுவிச் சிலந்தி வழிபட்ட திறத்தினையும், அருண கிரிநாதர் தமது திருப்புகழ் ஒன்றில் பின்வரு மாறு குறிப்பிட்டருள்கின்றார்.

''திரைக்கா விரிக்கே கரைக்கான் அகத்தே
சிவத்தியானம் உற்றொர் சிலந்தி நூல்செய்
திருக்கா வணத்தே இருப்பார் அருட்கூர்
திருச்சாலகச்சோதி தம்பிரானே''

திரைகள் வீசும் காவிரியின் கரையில் இருந்த கானகமான சோலையின்கண், சிவத்தியானம் நிறைந்திருந்த ஒரு சிலந்தியானது, தனது நூலி னால் அமைத்த அழகிய திருக்காவணம் ஆகிய திருநிழற்பந்தரின்கீழ், சிவபெருமான் எழுந் தருளியிருப்பது, இதன்கண் குறிக்கப்பெற் றிருத்தல் காணலாம்.

**திருச்சாலகம்:**

திருவானைக்காவில் உள்ள திருக்கோயிலில் இறைவன் எழுந்தருளியிருக்கும் சந்நிதிக்கு முன்னே பக்தர்கள் இறைவனைத் தரிசனம் செய்

வதற்காக ஒன்பது துவாரம் கொண்ட பலகணி அமைக்கப்பெற்றிருத்தலை அன்பர்கள் அனைவரும் கண்டிருப்பர். இந்தப் பலகணிக்குச் சாலகம் என்றும் ஒரு பெயர் உண்டு. சாலகம் என்னும் சொல், சிலந்தி வலையையும், பலகணியையும் குறிக்கும். இச்சாலகத்தின் வழியாக அன்பர்களுக்கு இறைவன் இன்றும் சோதி வடிவாய்த் தரிசனம் தந்து வருகின்றான். இச்சாலகத்தின் வழியாக இறைவனைத் தரிசிக்கும் பக்தர்கள், நவ தீர்த்தங்களிலும் மூழ்கி நீராடிய பலனைப் பெறுவர் என்பது ஐதிகம். அக்குறிப்பும் விளங்க அருணகிரிநாதர் ''சிலந்திநூல்செய் திருக்காவணத்தேயிருப்பார் அருள்கூர் திருச் சாலகச் சோதி தம்பிரானே'' என்று அருளிச் செய்திருத்தல், யாவரும் அறிந்து இன்புறலாம்.

**சம்புநாதர் :**

திருவானைக்காவிலுள்ள இறைவனுக்கு சம்புநாதர் (சம்புகேசுவரர்) என்று பெயர். அவரைப் பிரமனும், இந்திரனும், மற்றுமுள்ள தேவர்களும், எங்களது பெருமான் என்று தாள் பணிந்து வணங்குகின்றனர். தன்னை வணங்கும் அன்பர்கள் அனைவருக்கும் சம்புகேசுவரர் அருள் சுரந்து வருகின்றார்.

''கமலனும் ஆகண்ட லாதி அண்டரும்
எமது பிரான்என்று தாள் வணங்கிய
கரிவனம் வாழ் சம்புநாதர்
தந்தருள் பெருமாளே''

**அகிலாண்ட நாயகி :**

திருவானைக்காவிலுள்ள அம்பிகையின் பெயர் அகிலாண்ட நாயகி என்பதாகும். அகில அண்டங்களிலும் பரவி நிறைந்து வியாபித்து, அவற்றையெல்லாம் காத்து அருள்புரியும் நாயகியாக அம்பிகை அங்கு விளங்கி வருகின்றாள். அதனால் அவளுக்கு அகிலாண்ட நாயகி என்பது பெயராயிற்று. ''கரிவனம் உறை அகிலாண்டநாயகி அருள்பாலா'' என்றும், ''நாதவடிவி, அகிலம் பரந்தவள், ஆலின் உதரம் உள பைங்கரும்பு, வெண்ணுவலரசு மனே, வஞ்சி தந்தருள் பெருமாளே'' என்றும் வரும் வரிகளில், அம்பிகையைப் பற்றிய குறிப்புக்கள் வந்திருத்தல் காணலாம்.

**அரி அரி கோவிந்த கேசவா**

திருவானைக்கா, திருவரங்கம் என்னும் வைணவத் திவ்விய தேசத்திற்கு அருகில் இருப்பது. திருவரங்கத்தில் எழுந்தருளி விளங்கும் திருமாலுக்கு ஸ்ரீரங்கராஜன் என்பது பெயர். அங்கே நான்கு வேதங்களிலும், ஆறு அங்கங்களிலும் வல்லவர்களாய், வேள்விகளைச் செய்து கொண்டிருக்கின்ற அந்தணர்கள் வாழ்கிறார்கள். அத்தகைய அந்தணர்கள் 'ஹரிஹரிகோவிந்த கேசவா' என்று, பலகாலும் கூறித் துதித்துப் பெருமாளை வணங்கி மகிழ்கின்றனர். அத்தகைய சீரங்கராசன் ஆகிய திருமாலின், அன்பிற்குரிய மருமகனாக முருகன் விளங்குகின்றான்.

கருதிய ஆறங்க வேள்வி அந்தணர்
அரிகரி கோவிந்த கேசவ என்றிரு
கழல்தொழு சிரங்க ராசன் நண்புறும் மருகோனே!
கமலனும் ஆகண்ட லாதி அண்டரும்
எமது பிரான்என்று தாள் வணங்கிய
கரிவனம் வாழ்சம்பு நாதர் தந்தருள் பெருமாளே!

திருவரங்கம் பெரியகோயில், அருணகிரிநாதர் காலத்தில் மிகவும் சிறந்து விளங்கியது என்பதனை, இத்திருப்புகழ்ப் பகுதி விளக்கும்.

**திருநீற்றால் திருமதில்**

திருவானைக் காவல் திருக்கோயிலுக்கு மிக்க பெரும் சிறப்பைத் தருவன பலவற்றுள், சம்பு தீர்த்தமும், சுந்தர பாண்டியன் கட்டிய திரு மதிலும், இறைவனே ஒரு சித்தராக வந்து திருநீற்றைக் கூலியாகக் கொடுத்துக் கட்டுவித்த திருநீறிட்டான் திருமதிலும், குறிப்பிடத்தக்க பெருமையுடையனவாகும்.

''துங்க கஜாராணியத்தில் உத்தம
சம்பு தடாகம் அடுத்த தட்சிண
சுந்தர மாறன் மதிட்புறத்துறை பெருமாளே (1)

''ஆழித்தேர் மறுகிற்பயில் மெய்த்திரு
நீறிட்டான் மதிள் சுற்றிய பொற்றிரு
ஆனைக் காவினில் அப்பர் ப்ரியப்படு
பெருமாளே'' (2)

எனவரும் திருப்புகழ் வரிகளில், இவற்றையும், இற்றைக்கு அறுநூறு (600) ஆண்டுகளுக்கு முன்னரேயே குறிப்பிட்டருளிச் செய்திருக்கும் திறம், மிக்க வியப்பினை அளிப்பதாகும். இத்தலத்தைக் குறித்து அருணகிரிநாதர் பாடியுள்ள திருப்புகழ்கள் பதின்மூன்றும், மிக்க சிறப்புடையனவாகப் பொன்னினும் மணியினும் போற்றத் தக்கனவாகும். எனினும், இங்கு ஒரு திருப் பாடலை மட்டும் குறிப்பிடுதல் அமையும்.

நாடித் தேடித் தொழுவார்பால்
நான்நத் தாகத் திரிவேனோ?
மாடக் கூடற் பதிஞான
வாழ்வைச் சேரத் தருவாயே!
பாடற் காதற் புரிவோனே!
பாலைத் தேன்ஒத் தருள்வோனே!
ஆடற் றோகைக் கினியோனே!
ஆனைக் காவிற் பெருமாளே

''விரும்பித் தேடித் தொழுகின்ற அடியவர்களிடத்தே நான் விருப்பம் உள்ளவனாகத் திரிய மாட்டேனோ! பாடலில் விருப்பம் கொண்டு மகிழ்பவனே! பாலும் தேனும் போன்று இனிய அருளைப் புரிபவனே! நடனமாடும் மயிலை ஊர்தியாகக் கொண்டு இன்பம் பயப்பவனே! ஆனைக் காவில் உறைகின்ற முருகப் பெருமானே! மாடக்கூடங்கள் நிறைந்த கூடல் என்னும் மதுரை மாநகரத்தைக் குறிப்பதான துவாத சாந்தம் என்னும் நிலையிற் கூடுகின்ற ஞான வாழ்வினை அடையும்படி எனக்கு அருள் புரிக.''

அம்பிகையே இறைவனைப் பூசித்துத் தவம் புரிந்து ஞானம் பெற்ற தலமாதலின், இங்கு அருணகிரிநாதர் தாமும் ஞானம் பெற விரும்பிப் ''பதிஞான வாழ்வைச்சேரத் தருவாயே'' என்று வேண்டிக் கொண்டார் போலும்! மதுரையில் உள்ள மீனாட்சியம்மையே திருவானைக்காவில் அகிலாண்டநாயகியாக இருந்து அருள்புரிந்து வருதலின், அவ்வுண்மையைக் குறித்தற்கும் மதுரையைப் பற்றி இத்தலத்தில் குறிப்பிட்டு ''மாடக்கூடற்பதிஞான வாழ்வைச் சேரத் தருவாயே'' என அருளிச் செய்திருத்தல் கூடும் எனத் தோன்றுகின்றது.

**முடிவுரை :**

ஆனைக்காவில் உறை அண்ணலாகிய சம்பு கேசுவரரையும், அவனோடு உடனுறை அகிலாண்ட நாயகியையும், மிகவும் அன்புடன் துதித்து வழிபட்டு, அருணகிரிநாதர் வேண்டிப்பெற்ற ஞானவாழ்வை நாமும் பெற்று உய்ய முயலுவோமாக.

—ஆசிரியர்

ஓம்

# அருள்மிகு சபாநாயகர் (நடராஜர்) கோயில் திருப்பணிக் குழு, சிதம்பரம்

## ஒரு வேண்டுகோள்

நமது பாரத தேசத்தில், சிறப்பாக நம் தமிழ் நாட்டில் பல ஆயிரம் வருடங்களுக்கு மேலாகப் புகழ்பெற்று விளங்கும் தலங்களுள் தலையாகத் திகழ்வது சிதம்பரம் என வழங்கும் தில்லைப்பதியேயாகும். உலகமே பெரிதும் வியந்து போற்றும் சிறந்த கலை வடிவமாகத் திகழும் அருள்மிகு நடராஜப் பெருமான், ''கோயில்'' என வழங்கும் இத்தலத்தில் எழுந்தருளி, மன்னுயிர்களுக்கு அருள்பாலிக்கின்றார். ஆண்டு தோறும் ஆனியிலும், மார்கழியிலுமாக இரு தடவை நடைபெறும் பெருவிழாக்களில் லட்சக்கணக்கான மக்கள் இறைவனைத் தரிசிக்கின்றனர்.

மிகப்பழமையும், பெருமையும், புனிதமும் வாய்ந்த இக்கோயிலுக்கு முற்காலத்தில் மூவேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டியர்களும், பல்லவர்களும், விஜயநகர-நாயக்க அரசர்களும், நகரத்தார்களும், இவ்வூர்ப் பிரமுகர்களும், பிறரும் திருப்பணிகள் பல புரிந்து பதிபுண்ணியப் புகழடைந்துள்ளனர். வானளாவிய கோபுரங்கள், அதனுள் உருவாக்கப்பட்டிருக்கும் வேலைப்பாடமைந்த சிற்ப வடிவங்கள், மற்றும் உள்ளுறையும் மூர்த்திகளின் கோபுரங்கள், திருமாளிகைப்பத்தி முதலியவைகள் இக்கோயிலிற் பழுதுற்றிருக்கின்றன. வெளிப்பிராகாரமும் தளவரிசை செய்யப்படவேண்டும். யாத்திரிகர்கள் தங்கும் சௌகரியத்தை முன்னிட்டுச் சில மண்டபங்களும் நிறுவப்பட வேண்டியுள்ளன. 5,200 அடி நீளம் கொண்ட கோயிலின் மதிற் சுவர்களும் சிதைவுற்றுள்ளன. பொதுவாக இக்கோயில், பழம் பெருமையையும், சிறப்பையும் அடைய வேண்டியதற்கு அவசியமான பணிகளைச் செய்யவேண்டியிருக்கின்றது. போதுமான மின் விளக்குகளும் அமைக்கவேண்டியுள்ளது.

மேலே குறிப்பிட்ட திருப்பணி வேலைகளையெல்லாம் குறைவில்லாமல் செய்து கோயிலின் புனிதத் தன்மை, இணையற்ற அழகு பழமை இவைகளைக் காக்கத் திருப்திகரமான முறையில் புதுப்பிப்பதற்கு ஒரு பெருந் திட்டத்தைப் பொது தீட்சிதர்களின் மகாசபையின் தீர்மானப்படி ( Master Plan ) ரூ. 45 லட்சத்திற்குத் தமிழ்நாடு அறநிலையப் பாதுகாப்புத் துறையினர் தயாரித்துள்ளனர். இந்தக் கோயிலுக்குச் சொத்து ஒன்றும் இல்லை. தினந்தோறும் நடைபெறும் பூசைகள், தர்ம சிந்தனையுள்ளவர்களின் உதவியினால் நடைபெற்று வருகின்றன. ஆகவே அன்பர்கள் யாவரும் கோயிலின் திருப்பணிக்குத் தாராளமாக நன்கொடை அளித்து இறைவன் அருளைப் பெறுமாறு விரும்புகிறோம். இக் கோயிலுக்குச் செலுத்தப்படும் நன்கொடைக்கு வருமான வரியிலிருந்து இந்திய அரசாங்கத்தாரால் விலக்களிக்கப்பட்டிருக்கிறது.

**நன்கொடைகளைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம்.**

திரு. G. வாகீசம் பிள்ளை,
செயலாளர்,
அருள்மிகு சபாநாயகர் (நடராஜர்) கோயில்
திருப்பணிக் கமிட்டி,
99, கனகசபை நகர், சிதம்பரம்-608001

திரு. R. பாலசுப்பிரமணிய செட்டியார்,
பொருளாளர்,
அருள்மிகு சபாநாயகர் (நடராஜர்) கோயில்
திருப்பணிக் கமிட்டி,
நடராஜா ஜுவல்லரி மார்ட்,, கடைத்தெரு,
சிதம்பரம்-608001


# அருள்மிகு சபாநாயகர் (நடராஜர்) கோயில், சிதம்பரம்

**இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் அவர்களால்**

**அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள்**

| | | | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|
| 1. | கிழக்குக் கோபுரம் | ... | 2,60,000 |
| 2. | மேற்குக் கோபுரம் | ... | 2,65,000 |
| 3. | தெற்குக் கோபுரம் | ... | 2,90,000 |
| 4. | வடக்குக் கோபுரம் | ... | 2,65,000 |
| 5. | திருமதில் திருப்பணி | ... | 7,16,000 |
| 6. | உள் திருமதில் திருப்பணி | ... | 1,17,000 |
| 7. | அம்மன் கோயில் திருப்பணி | ... | 65,000 |
| 8. | முக்குறுணி விநாயகர் கோயில் | ... | 40,000 |
| 9. | திருமாளிகைப்பத்தி மண்டபம் | ... | 1,47,000 |
| 10. | இரும்புக் கம்பி போட | ... | 45,000 |
| 11. | சிவகங்கை மண்டபங்கள் | ... | 32,000 |
| 12. | சுற்றுப் பிராகாரம் தரைக்கு | ... | 25,000 |
| 13. | ஆயிரக்கால் மண்டபம் | ... | 57,000 |
| 14. | நூற்றுக்கால் மண்டபம் | ... | 9,000 |
| 15. | மேல்தளம் | ... | 2,53,000 |

| | | | |
|---|---|---|---|
| 16. | தேர் மண்டபம் | ... | 8,000 |
| 17. | கிழக்கு, வடக்கு மணிமண்டபம் | ... | 1,60,000 |
| 18. | கொடிமரம் | ... | 3,000 |
| 19. | வடிகாலுக்கு | ... | 5,000 |
| 20. | எலக்ட்ரிக் லைட்போட | ... | 1,00,000 |
| 21. | கஜலட்சுமி மண்டபம் | ... | 3,30,000 |
| 22. | தேர் பழுது பார்க்க | ... | 5,000 |
| 23. | வாகனம் பழுது பார்க்க | ... | 20,000 |
| 24. | விமானம் வர்ணம் அடிக்க | ... | 5,000 |
| 25. | முன் மண்டபம் | ... | 1,00,000 |
| 26. | பெருமாள் சந்நிதி மண்டபம் | ... | 4,50,000 |
| 27. | இடிதாங்கி | ... | 5,000 |
| 28. | பாண்டியநாயகர்கோயில் திருமாளிகைப்பத்தியை நீக்க | ... | 10,000 |
| 29. | நான்கு புறமும் குளியல் அறை | ... | 40,000 |
| 30. | எஸ்டிமேட் தயாரித்ததற்கு | ... | 51,880 |
| 31. | நடை செப்பனிட | ... | 10,000 |
| 32. | இதர செலவு | ... | 83,120 |
| 33. | பயணிகள் விடுதி | ... | 5,28,000 |
| | மொத்தம் | ... | 45,00,000 |



அழகர்கோயில் அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலின் சார்பில் நூபுரகங்கை மலைச்சாலையை அறநிலைய ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்., அவர்கள் திறந்து வைத்தல். தேதி: 18—7—'76.

# திருவுத்தர கோச மங்கை

## முன்னுரை :

திருவுத்தர கோசமங்கை என்னும் சிறந்த தலம், இராமநாதபுரத்தில் இருந்து, தென்மேற்கில் பத்துக் கல் தொலைவில் உள்ளது. இதற்கென ஒரு சிறு புகைவண்டி நிலையம் உண்டு. அந்நிலையத்தில் இருந்து நேர் தெற்கே, நான்கு கல் தொலைவில் திருவுத்தர கோச மங்கைக் கோயில், சிறப்புற விளங்குகின்றது. திருப்புல்லணை, திரு இராமேசுவரம், திருச்சுழியல், திருஆலவாய், திருமருதூர், திருப்புனவாயில் முதலிய தலங்கள் நாற்றிசைகளிலும் சூழ, அவற்றிற்கு நடுவே திருவுத்தர கோசமங்கை அழகுற அமைந்து திகழ்கின்றது.

## பண்டைத்தலம் :

பாண்டிய நாட்டில் உள்ள தலங்களில், இது மிகவும் பழமையும், பெருமையும் வாய்ந்த தலம் ஆகும். இப் பண்டைப் பெருந் தலத்திற்குத் தேவாரப் பாடல்கள் ஏதும் கிடைக்கவில்லையாயினும், மாணிக்க வாசகர் தம்முடைய திருவாசகத்தில் இத்தலத்தினைப் பற்பல பதிகங்களின்கண் பெரிதும் சிறப்பாகக் குறிப்பிட்டுப் பாடியருளியிருக்கின்றார்.

## பார்மேற் சிவபுரம் :

திருவாசகத்தில் திருத்தசாங்கம் என்னும் பகுதியில், சிவபிரானுகிய பேரரசனுக்குரிய நாடு, மலை, ஆறு, ஊர் முதலிய பத்து வகைச் சிறப் புறுப்புக்களையும் குறிப்பிடுங்கால், ஊர் என்னும் உறுப்பாக வைத்துத் திருவுத்தரகோசமங்கைத் தலமே, மாணிக்கவாசகரால் பெரிதும் சிறந் தெடுத்துப் பேசப் பெறுகின்றது.

''பத்தர் எல்லாம் பார்மேற் சிவபுரம் போற்
கொண்டாடும்
உத்தரகோச மங்கை ஊர்''

என்பது மணிவாசகர் அருளிய திருவாசகம், திருத்த சாங்கச் செய்யுள்!

இத்திருப்பாடலால், ஏறத்தாழ 1600 ஆண்டுக்கட்கு முற்பட்ட மாணிக்கவாசகர் காலத்திலேயே, இந்தச் சிறந்த தலமானது, ''இந்நிலவுலகில் விளங்கும் திருக்கயிலாயம் (சிவபுரம்)'' எனப் பக்தர்கள் எல்லோரும் புகழ்ந்து கொண்டாடும்படி, ஒப்புயர்வற்ற பெருமையினைப் பெற்றிருந்தது எனத் தெரிகின்றது.

## மகேந்திரம் :

சிவபெருமான் வலை வீசிய திருவிளையாடல் நிகழ்த்தியதும், வலைஞர்கள்பால் மகளாய் வந்து வளர்ந்த அம்பிகையை மணம் புரிந்து கொண்டருளியதும், கடலிற் சுறு மீனின் வாயினின்று மீட்ட ஆகம நூல்களை உலகுக்கு வெளிப்படுத்தி அருளியதும், இந்தத் தலத்திலேயே ஆகும்.

''சேவேடர் ஆகிக் கெளிறது படுத்து
மாவேட்டாகிய ஆகமம் வாங்கியும்:
மற்றவை தம்மை மகேந்திரத்து இருந்து
உற்றஐம் முகங்களாற் பணித்து அருளியும்''

எனத் திருவாசகத்தில் வரும் கீர்த்தித் திருவகவல் வரிகள், இச்செய்திகளை உணர்த்துதல் காணலாம். மகேந்திரம் என்பது, திருவுத்தரகோச மங்கையின் பிறிதொரு பெயரே என்றும் பெரியோர்கள் கூறுவது உண்டு.

## பெயர்க் காரணம் :

இத்தலத்திற்குத் திருவுத்தர கோசமங்கை எனப் பெயர் அமைந்ததற்குரிய காரணம் பின்வருமாறு: உத்தரம்-உபதேசம்; கோசம்-இரகசியம், மறை பொருள். மங்கை-உமாதேவியார். முன்பு ஒரு காலத்தில் சிவபெருமான் உமாதேவியாருக்கு வேதாகமங்களின் மறைபொருள்களை இத்தலத்தில் உபதேசித்த காரணம் பற்றி, இதற்கு உத்தர கோசமங்கை எனப் பெயர் ஏற்பட்டது.

## மற்ருெரு காரணம் :

இனி, இவ்வாறு அன்றி, மற்ருெரு வகையாகவும் அறிஞர்கள் இப்பெயர்க் காரணத்தை விளக்குவர். உ-உயர்ந்த. தரம்-தகுதிப்பாடு. கோசம்-நூல். மங்கை-மங்கலம். மங்கலம் என்பது ஊர்ப்பெயர்களின் ஈற்றில்வரும் ஒரு விகுதி போல்வது. வரகுண மங்கலம் வரகுணமங்கை எனவும், சீவரமங்கலம் சீவரமங்கை எனவும் வருதல்போல, உத்தரகோச மங்கலம் என்பதே உத்தரகோச மங்கை என்று மருவியது எனவும் அறிஞர்கள் கூறுவர். ''உயர்ந்த தகுதிப்பாடு மிக்க ஆகம நூல்களை இறைவன் வெளிப்படுத்திய மங்கலம் அமைந்த தலம்'' என்பது இதன் திரண்ட கருத்து.

## தலப்பெயர்கள் :

இத்தலத்திற்கு மங்களபுரி, பிரமபுரம், சாத்துவிகத்தானம், வதரிகாரணியம் (இலந்தைக்காடு), பார்வதிபுரம், சித்தக்ஷேத்திரம் (சித்தர்கள் வாழுந் தலம், சிந்திப்பவை யாவும் சித்திக்கச் செய்யும் தலம்), தட்சிண காசி, சதுர்வேதபுரி, கல்யாணபுரி (இறைவன் அம்பிகையை மணம் புரிந்துகொண்ட தலம்) எனப் பல பெயர்கள் உண்டு. இப்பெயர்களினுலேயே இத்தலத்தின் பெருமைகளை இனிது உணரலாம்.

**தீர்த்தங்கள் :**

இங்கே அக்கினி தீர்த்தம், பிரமதீர்த்தம், இந்திர தீர்த்தம், சார்வதி தீர்த்தம், கௌமார தீர்த்தம், பதும தீர்த்தம், சீதள தீர்த்தம், தேவி தீர்த்தம், அரித்துவச கூப தீர்த்தம் எனப் பல சிறந்த தீர்த்தங்கள் அமைந்திருக்கின்றன.

**இறைவன் பெயர்கள் :**

இத்தலத்தில் எழுந்தருளி விளங்கும் சிவபெருமானுக்கு மங்களநாதர், பிரளய காலேசுவரர் (பிரளய காலத்திலும் அழியாதவர்), துரிசாபகர் (துரிசுகளாகிய குற்றங்கள் யாவும் போக்குபவர்) முதலிய பல பெயர்கள் வழங்கும். இவர், "உத்தர கோச மங்கையுள் இருந்து வித்தக வேடங்காட்டிய இயல்பு" பற்றி, இவருக்குக் காட்சி கொடுத்த நாயகர் என்றும்; அம்பிகையை இங்கு மணந்து கொண்டதனால் கலியாணசுந்தரனார் என்றும் பெயர்கள் வழங்குகின்றன.

**இறைவி பெயர்கள் :**

இத்தலத்தில் உள்ள அம்பிகைக்கு, மங்களேசுவரி, மங்களதாயினி (நன்மைகளைக் கொடுப்பவள்), புட்பாதனி (மலர்களை ஆசனமாகக்கொண்டு பூசிக்கப் பெறுபவள்), சுந்தரநாயகி எனப் பல பெயர்கள் வழங்கும். அம்பிகை இங்கே இறைவன் பணித்தருளியபடி, வலைஞர்களிடையே வந்து தோன்றி வளர்ந்து, பின்னர் இறைவனால் மணந்து கொள்ளப் பெற்றாள். அதனால் "திரை சேர் மடந்தை" எனவும், அம்பிகை இங்கு வழங்கப் பெறுவள். இச்செய்தி "திரைசேர் மடந்தை மணந்த திருப்பொற்பதப் புயங்கா, வரை சேர்ந்து அடர்ந்தென்ன வல்வினைதான் வந்து அடர்வனவே' (37) என வரும் திருவாசகம் நீத்தல் விண்ணப்பப் பகுதியாலும் தெளியப்படும்.

**திருவாசகப் பதிகங்கள் :**

இந்தச் சிறந்த பெருந்தலத்தில் பிரமன், வேதமித்திரன், கந்தருவ கன்னியர், அரித்துவசன், நளன், அம்பிகை முதலியோர் சிவபிரானை வழிபட்டுப் பேறு பெற்றனர் எனத் தலபுராணம் கூறுகின்றது. எனினும், மாணிக்க வாசகப் பெருமான் இறைவனின் திருவருளாணைப்படி இங்குச் சென்று சிலகாலம் தங்கியிருந்து, இறைவனை வழிபட்டு, திருவாசகத்தில், நீத்தல் விண்ணப்பம், திருப்பொன்னூசல் என்னும் திருப்பதிகங்களை அருளிச் செய்துள்ளனர் என்பதே, இன்று இத்தலம் பெரிதும் சிறப்புடையதாகச் சிவநெறிச் செல்வர்களால் மதித்துப் போற்றப் பெறுவதற்குரிய பெருங்காரணம் ஆகும்.

**மரகத நடராசர் :**

இங்கே எழுந்தருளி விளங்கும் நடராசப் பெருமானின் திருவுருவம், மரகதம் என்னும் விலை மதிப்பு அரிய பச்சைநிறப் பளிங்கு மணியினால் அமைந்து ஒளிரும் சிறப்பு மிக்கது. தில்லைப் பொன்னம்பலத்தில் ஆடல் புரியும் முன்னரே, நடராசப் பெருமான் இங்குத் திருநடனம் புரிந்தான் என்பது தலபுராணம். ஆதலின் இத்தலத்திற்கு ஆதி சிதம்பரம் என்றும், இறைவனுக்கு ஆதிசிதம்பரேசுவரர் என்றும் பெயர் உண்டு.

**அருணகிரிநாதர் :**

ஏறத்தாழ 500 ஆண்டுகளுக்கு முன்பு விளங்கியிருந்த அருளாளராகிய அருணகிரிநாதசுவாமிகள், இத்தலத்திற்குச் சென்று வழிபட்டு மகிழ்ந்து, இரண்டு அழகிய திருப்புகழ்ப் பாடல்களை அருளிச் செய்திருக்கின்றார். "உத்தம மாவளங்கொள் உத்தரகோச மங்கை" என அவர், இத்தலத்தினை வியந்து புகழ்ந்து போற்றி இருத்தல், நாம் அறிந்து மகிழ்தற்கு உரியது.

**முடிவுரை :**

இத்தகைய பெருஞ்சிறப்பு மிக்க திருவுத்தர கோசமங்கை என்னும் தெய்விகத் திருவருள் செறிந்த தலத்தில் எழுந்தருளி, அருள்வழங்கி வரும் மங்களேசுவரி அம்மை உடனுறை மங்களநாதப் பெருமானின் திருவடி மலர்களை, அன்புடன் வணங்கி வழிபட்டு, நாம் அனைவரும் நலம்பல பெற்று வாழ்வோமாக!

[இத் திருக்கோயிலில், இதன் பரம்பரை அறங்காவலர் மாட்சிமிகு திரு. எஸ். இராமநாத சேதுபதி, B.A., அவர்கள் பெருமுயற்சியினால், சிறப்புறக் கருங்கல் திருப்பணிகள் பெரிய அளவில் நடைபெற்று வருவதும், கூடிய விரைவில் விமரிசையாகக் கும்பாபிஷேக விழா நிகழ இருப்பதும், அன்பர்கள் அனைவரும் அறிந்து மகிழத்தக்க செய்தியாகும். விருப்பம் உள்ள அன்பர்கள், தங்கள் தங்களால் இயன்ற அளவிலும், முறைகளிலும், திருப்பணிக்கு உதவிகள் வழங்கலாம்.]

—ஆசிரியர்.

# திருவிருத்தம்

திரு என்.எஸ்.தாதாசாரியார், தஞ்சை.

முன்னுரை :

'விண்ணுளாரிலும் சீரியர்' என அழைக்கப் படும் செந்தமிழ்த் தெய்வப் புலவர்களே ஆழ் வாராவார்கள். இவர்கள் ஆன்ற முனிவர்களை விட ஒருவகையில் சிறந்தவர்கள் என்பதை நிகமாந்தமஹாதேசிகன் என்ற மாபெரும் ஆசிரியர், 'மாசில் மனம் தெளி முனிவர் வகுத்த வெல்லாம், மாறுகந்த வாசிரியர் வார்த்தைக்கு ஒவ்வா'' என்று குறிப்பிட்டார். இவர் காட்டித் தந்த வார்த்தையே மெய்ம்மைப் பெருவார்த் தை, மறைகளும் காணு மாதவன் திருவுரு வத்தைக் காணும் அளவிற்கு எம்பெருமானல் மயர்வற மதிநலம் அருளப் பெற்றவர்கள். இவர்கள் காட்டித் தந்த சமயமே ஸ்ரீ வைஷ்ண வமாகும். இவர்கள் பன்னிருவர்களின் வரிசை யில் நம்மாழ்வார் என்ற தமிழ் மறை முனிவர் பல காரணங்களை முன்னிட்டு முதன்மை பெற் ருர். இவருக்குச் சடகோபர், சடாரி, பராங் குசர், வகுளாபரணர், காரிமாறன், திருநாவீ றுடையவர் என்றெல்லாம் சிறப்புப் பெயர்கள் அமையும். இவர் தமக்கே இட்டுக் கொண்ட புனிதத் திருப்பெயரே இன்பமாரி என்பதாகும். திருவரங்கம் பெரிய பெருமாள் தாமே அருளால் இவருக்கு நம்மாழ்வார் என்ற திருப்பெயரைச் சூட்டினுர். அதனடியாகவே பின்புளார்களான சில ஆசிரியர்களுக்கு நம் சீயர், நம்பிள்ளை என் றெல்லாம் திருப்பெயர்கள் வழங்கப்பட்டன. அரங்கநகர் அப்பனும் நம்பெருமாள் ஆகி விட்டார். இவர் அருளிச் செய்த நான்கு வேதங்களின் சாரமான நான்கு திவ்வியப் பிர பந்தங்களுள் மிகவும் சிறந்தது ''திருவாய் மொழி'' என்பதாகும். இச்சொல்லுக்கு வேத மொழி, வாய்மை பெற்ற மொழி, பொய்யா மொழி, திருவைப் பற்றிய மொழி, திருவருளால் தாமே வந்த மொழி என்ற புடையில் பல பொருள்கள் உண்டு. கம்பனும், ''தேவிற் சிறந்த திருமாற்குத் தக்க தெய்வக் கவிஞன் பாவிற் சிறந்த திருவாய்மொழி பகர் பண் டிதனே'' என்ருர். இப்பாவில் வரும் ''பகர் பண்டிதன்'' என்ற சொல்லுக்கு நயம் உண்டு. ஆயினும் இவர் இயற்றிய முதற் பிரபந்தமான திருவிருத்தத்துக்குத் தனியான ஒரு சிறப்பிட மும் உண்டு. அதில் 15-வது பாசுர விளக்கமாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

ஆழ்வாரின் பெண்மை :

படைப்புக் கடவுளாகிய பிரமன் தனது நான்கு முகங்களைக் கொண்டு நான்கு வேதங் களை வெளியிட்டதுபோல், ஆழ்வாரும் பேசும் வகையில் நான்கு முகங்களைக் கொண்டு நான்கு பிரபந்தங்களை அருளிச் செய்தார். அவையா வன, ஆழ்வார் தாமான ஆண்மை நிலையிலிருந்து 73 பதிகங்களும், பெண்மையை ஏற்றுத் தலை மகளாக 17 பதிகங்களும், தாயாக நின்று 7 பதிகங்களும், தோழியாக 3 பதிகங்களும் திரு வாய்மொழியில் வெளியிட்டார். இதனை அகத் துறை இலக்கணத்தின்கண்ணே ஒருமைப்படுத்தி யும், எம்பெருமானை புருஷோத்தமனுக்கு ஒரு சீவன் என்றும், அவனே எல்லாம் என்ற பெருந் தன்மையை மேற்கொள்வதே முறை என்ற உண்மையை அமைத்தும் இதனை உலகியலில் காணும் மட்டமான இன்பச் சுவையில் கணக் கிடுவது கூடாது என்பர்.

திருவிருத்தம்:

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில், மூன் ருவது அல்லது நான்காவது ஆயிரமான இயற் பா என்ற பகுதியில் ஐந்தாவது பிரபந்தமாக, 100 கட்டளைக் கலித்துறைப் பாக்களில் அமைந்த நூலே திருவிருத்தமாகும். ஆழ்வார் தமது அன்பு மிகுதியைக் காட்டிச் செய்திகளை எம்பெருமான் முன்னிலையில் விண்ணப்பம் செய்யும் நூலானதால் இதற்குத் திருவிருத்தம் எனப் பெயர் சூட்டப்பட்டது. இச்சொல் ஒரு காரியவாகு பெயராய் அமைந்தது. இதேபோல் அப்பர் பெருமான் அருளிய தேவாரத் திரு முறையும், பட்டணத்துப் பிள்ளையின் பாடல் திருமுறையும், திருவிருத்தம் என்றே அழைக்கப் படும் என்பர். இதற்கிணங்க ஆழ்வாரும் முதல் பாசுரத்திலேயே ''அடியேன் செய்யும் விண்ணப்பம்'' என்று அருளிச் செய்ததை நோக்கலாம். அன்றியும் இப்பிரபந்தத்தில் முதல், கடைப் பாசுரங்கள் நீங்கலாக யாவும் பெண் தன்மை எய்தி (பிராட்டி)த் தமது மன நிலையை—விருத்தத்தை—எம்பெருமான் பக்க லில் எடுத்து இயம்புவதாலும், அஃதின்றியும் திருமகளின் நிகழ்ச்சியைக் கூறுகின்ருர் என்ற படியாலும், இப்பிரபந்தத்திற்குத் திருவிருத்தம் என்ற பெயர் ஏற்பட்டதென்பர். இப்பிரபந் தம் அகத்துறையின் அமைப்பில் அருமையாக அமைந்துள்ளது. மாணிக்கவாசகர் அருளிய திருச்சிற்றம்பலக் கோவையாரும் இந்நூலும் கருத்தொற்றுமையில் நிழலிடுகின்றன. இந் நூலின் சிறப்பை ஸ்ரீ வைணவப் பேராசிரியரான கிடாம்பி ஆச்சான் என்பவர் தமது தனியன் பாசுரத்தில் ''மக்களே நீங்கள் தாயின் கருவில் இருந்து வெளிவந்த பின் உலகச் சிற்றின்பப் படு குழியிலே விழுந்து உழலும் நிலையில் தம் உயிர் இடையூறின்றி நற்பயன் பெறுவதற்குக் குருகை

வந்த குருநாதன் ஆழ்வாரின் திருவிருத்தத்தில் ஒரு பாசுரத்தையாவது கற்று நற்பதம் பெறுவீர்'' என்றார்.

''கயலோ நும்கண்கள் என்றுகளிறு வினவிநிற்றீர்
அயலோர் அறியிலும் ஈதென்னவார்த்தை கடல் கவர்ந்த
புயலோடு உலாம் கொண்டல்வண்ணன் புனவேங் கடத்துஎம்மோடும்
பயலோ இலீர் கொல்லைகாக்கின்ற நாளும்பலபலவே

சங்க இலக்கியங்களில் கூறப்படும் கலை மான்வினுதல், வழிவினுதல், பதிவினுதல், என்ற வகைகளில் 'களிறுவினுதல்' என்ற வகையில் இப்பாசுரம் அமைந்தது. இதனை வேழம் வினுதல் என்றும் கூறுவர். திருக்கோவையாரிலும் இது வேழம்வினுதல் என்று வரையப்பட்டுள்ளது. 'இவ்விடத்து ஒரு மதயானை வரக் கண்டீரோ?'' என வேழம் வினவா நிற்றல் என்ற அடியால் திருக்கோவையார் உரை காட்டியது. இதனைப்பற்றி ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை ஈட்டுரையில் 'இயற்கையிலே கலந்து, பிரிந்த தலைமகன் இரண்டாம் கூட்டத்துக்காகப் புனலிலே வந்து, கிட்டக் கடவதாகக் குறிவரவிட்டுப் போய்க் காலாதிக்ரமம் பிறந்த பின்பு, அங்கே சென்று கிட்டினவன் இவர்களைக் கண்டு கலங்கி ...பிடியை இழந்ததொரு களிறு தன் ஆற்றுமையாலே அமணுனைப்பட்டு, திருரியுமாப்போலே இவர்களை இழந்து...அந்யாபதேசத்தாலே ஆவிஷ்கரிக்கிறுன்' என. புனவேங்கடம் — பல தோட்டங்களை உடைய திருவேங்கடம் என்னும் மலை. எம்மோடும் பயலோ இலீர்—எங்களுடன் தாங்கள் சம்பந்தப்பட்டவரல்லீர்.

தலைவன் ஒருவன் தலைவியுடன் களவழியில் புணர்ந்து நீங்கிப் பிறகு குறிப்பிட்ட நேரத்தில் வாராமல் காலம் தாழ்த்தித் தலைவியை மறுமுறை அடைய விழைகிறுன். அந்நேரத்தில் தலைமகளும் தோழியும் திருவேங்கடமலையில் உள்ள ஒரு தோட்டத்தில் இருவரும் கொல்லை காத்து இருக்கிறுர்கள். தலைவியைக் கண்டதும் காமுற்ற தலைவன், தலைவியின் எண்ணமறிந்து கூட எண்ணி, அருகே வந்து காட்டில் தப்பிச் சென்ற களிறு ஒன்றைக் கண்டீர்களோ என்று பேச்சுக் கொடுத்து இடையில் வார்த்தை தடுமாறி தம் உள்ளத்தில் உள்ள கிடக்கையை மறைக்க முடியாமல் எடுத்த எடுப்பிலே ''நும் கண்கள் கயலோ'' என்றுன். இதனைக் கேட்ட தோழியானவள் எதிர்பார்த்த தலைவன் மீண்டும் வந்த மகிழ்ச்சியை மறைத்துக் கொண்டு அவனைக் கேலி செய்து மறப்பதுபோல், ஐயனே 'யானை ஒன்று இவ்வழி வரக்கண்டீரோ?' என்று வினவத் தொடங்கி உடனே எம் தலைவியின் கண்ணழகைக் குறிப்பிடுகிறீரே! இது என்ன தடுமாற்றம் உள்ள சொற்றெடை! அயலவர் யாராவது நும் சொல்லைக் கேட்டால் சிரிப்பார்களே. கடல் நீரை முற்றிலும் உண்டு உடல் கறுத்து மழை பெய்து கொண்டு உலாவும் முகில் போன்ற நிறம் கொண்ட எங்கள் முகில்வண்ணனுகிய திருவேங்கடவன் தோட்டத்திலே நாங்கள் பல நாட்கள் கொல்லை காக்கும் இத் தொழிலைச் செய்து வருகிறேம். நாங்கள் இங்கு இருக்கும் நாட்களில் தங்களுக்கும் எங்களுக்கும் பரிச்சயமுமில்லை. தொடர்பும் இல்லை. போய் வாரீர்' என்றுள். இது ஒரு தோழி பாசுரமாகும்.

**கயலோ நும்கண்கள் என்று களிறு வினவிநிற்றீர்:**

இதற்கு இரு வகையில் பொருள் கூறுவார்கள். 'நீர் யானையைப் பற்றிக் கேட்க வந்தவர் ஆயின் யானையைப் பற்றிப் பேசுவதுடன் நில்லாது தனிமையில் உள்ள பெண்களிடம் தகாத முறையில் எங்களது கண்ணழகைப் புகழ்கின்றீரே. பிறர் கேட்பின் எங்களைப் பற்றி என்ன நினைப்பார்கள்? இப்பெண்களுக்கு இத்தலைவனுடன் ஏதோ உறவு உண்டு போலும்? என எங்களைத் தவருக நினைக்க மாட்டார்களா ? போதும் பேச்சை நிறுத்தும். மற்றேர் வகையில் பொருள் : இனி ''நும் கண்கள் கயலோ'' என எங்கள் கண் அழகில் ஈடுபட்டீர்கள். எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சி. அதற்கு மேலே யானையைப் பற்றிக் கேட்டீரே. அது எதற்கு? எங்களிடம் ஆசையுடன் வந்திருக்கிறீர் என நாங்கள் மகிழ்வதைத் தடுப்பது போல், நான் வேட்டைக்கு வந்து தப்பிச் சென்றதொரு யானையைத் தேடி வந்தேன். உங்களைக் காண வரவில்லை என்ற கருத்தை வெளியிட்டீரோ? அது அழகன்று. அயலார் என்ன நினைத்தாலும் அதற்கு நாங்கள் வருந்துவோம் அல்லோம். நாங்கள் உங்களுக்கு அயலார் இல்லை என்றபடி.

பயலோ விலீர்:

எங்களோடு உங்களுக்குக் கூட்டுப் பயிர் இல்லையே. கூட்டுப்பயிராவது — தொடர்பு. ஆதலால் கூட்டுப் பயிர்த் தொழில் இல்லாத பொழுது இங்கு எதற்கு வந்தீர்? பயிலோ இலீர் என்ற பாடமாயின் பழக்கமுடையரல்லார் எனப் பொருள்.

**கொல்லைக் காக்கின்ற நாளும் பலபலவே:**

நாங்கள் பல நாட்களாக இங்குக் கொல்லை காத்து வருகிறேம். நெடுநாள் பழகியதுபோல் இங்குத் தனிமையில் எங்களுடன் பேசிக் கொண்டிருப்பது தகாது, என்று மேலெழுந்தவாரியாகக் கூறி, ''எம்மோடு கூட்டுறவு கொள்ள நீர் ஆசை கொள்ளவில்லையே, எத்தனை நாட்கள் பழகினுலும் முன்பு காணுதது போன்ற புதிய அழகு படைத்த தலைவரே, எங்கள் தலைமகள் தங்கள் நல்வரவை நோக்கிக் காத்திருக்கிறுள். வம்மின் என்று தலைவியின் காதலை எடுத்துத் தோழி இயம்புகிறுள்.

ஆழ்வார் தம்மை நாடிவந்த திருவேங்கடமுடையானுகிய தலைவன்பால் தமது அடங்காத காதலை வெட்கத்தினுலோ அல்லது தம்மை வஞ்சித்தானே என்ற சினத்தினுலோ நேரிடையாகக் கூறக் கூசித் தோழியின் மூலமாய் வெளியிடுகிறுர் என்றவாறு. அகத்துறை இலக்கிய வழியைத் தெய்வ நன்னூல் துறையில் பேசும் ஆழ்வாரது அருளிச் செயல் அமுதப் பெருக்கன்றி மற்றிது எது?

***




**முன்னுரை :**

மாணிக்கவாசகர் அருளிச் செய்த நூல், திருவாசகம் என்பதனை யாவரும் அறிவர். அவரே திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் பிறிதொரு சிறந்த அருள் நூலையும் இயற்றியுள்ளார். இன்று தமிழில் எத்துணையோ பலப்பல கோவை நூல்கள் பாடப் பெற்றிருக்கின்றன. எனினும் அவைகள் எல்லாவற்றுள்ளும் முதன்மையும் பெருமையும் மிக்குத் திகழ்வது, திருச்சிற்றம்பலக் கோவையார் ஒன்றே யாகும். இதனைத் 'திருக்கோவையார்' எனவும் சுருக்கமாக அறிஞர்கள் வழங்குவர்.

திருக்கோவையார்தான், இன்றுள்ள எல்லாக் கோவை நூல்களுக்கும் முதன் முதலில் தோன்றியது; பிறவற்றிற்கெல்லாம் அதுவே அடிப்படையும் வழிகாட்டியும், மேல்வரிச் சட்டமும் ஆக அமைந்தது! கோவை நூல்களின் வரிசையில், பழமையும் பெருமையும் மிக்க அருமைப்பாடு உடையதாய், ஈடும் எடுப்பும் அற்று விளங்குவது 'திருக்கோவையார்' என்பதனை அறிஞர்கள் அனைவரும் இனிது உடன்பட்டுப் போற்றி மகிழ்வர்.

**சிறப்பிலக்கியம் :**

''உலகியற்கைப் பொருள்களில், பரிணாமக் கொள்கையின்படி, முதன் முதலாகத் தோன்றிய பொருள்களைவிட, நாளடைவாகப் படிப்படியே தோன்றும் பொருள்களே மேன்மேல் உயர்ந்து, வளர்ச்சியுற்றுச் சிறந்து திகழக் காண்கின்றோம். ஆனால் இப்பரிணாமக் கொள்கையானது, இலக்கியங்களைப் பொறுத்தவரையில் பொருந்துவதாகத் தோன்றவில்லை. மிகச் சிறந்த இலக்கியங்களெல்லாம் துடுமெனத் தாமே முதன் முதலாகத் தோன்றுகின்றன; ஒப்புயர்வற்று விளங்குகின்றன. ஒரே ஒரு முறை மட்டுமே தோன்றும் அச்சிறப்பிலக்கியங்களுக்கு அருகே நிற்கத் தக்க நிலையிற் கூட, அவற்றிற்குப் பின்னர்ப் படிப்படியே, காலப் போக்கில் தோன்றும் இலக்கியங்கள் தகுதி பெறுவதில்லை'' என டாக்டர் ஐ. ஏ. ரிச்சர்ட்ஸ் (1)* என்னும் புகழ் பெற்ற அமெரிக்க நாட்டுப் பேரறிஞர், தம்முடைய இலக்கியத் திறனாய்வின்கண் குறிப்பிடுகின்றார். அது, நம்முடைய திருக்கோவையார்க்கு மிகமிகப் பொருந்துவதோர் உண்மையாகக் காணப்படுகின்றது.

**ஞானப் பனுவல் :**

திருச்சிற்றம்பலக் கோவையாருக்குப் பல வகைச் சிறப்புகள் உண்டு. அவைகளுள் மிகவும் தலையாயது, சங்ககாலப் புலவர்கள் பாடிய அகப்பொருள் ஆகிய உடலில், இறையியல் இன்பக் கருத்துக்கள் ஆகிய உயிரியல் அருட்பொருளும் பிரிவற விரவி நிற்க, அழியா இன்ப அருங்கலைக் கவிதைப் படைப்பாகக் கவின்மிக்குத் திகழ்தலே யாகும்.

திருக்கோவையார் நூலை அந்தணர்கள் வேதம் எனவும், யோகியர்கள் ஆகமம் எனவும், காமுகர்கள் காமநூல் எனவும், தருக்கநூல் வல்லவர்கள் ஏரணம் எனவும், புலவர் பெருமக்கள் சிறந்த இலக்கியம் எனவும், பலப்பல வகைகளில் வியந்து போற்றுவர்.

இந்நூலுக்கு இணையற்ற இனிய உரையினை வகுத்தருளிய பேராசிரியர், இதன்கண் அறிவன் நூற் பொருளும், உலகியல் வழக்கும் ஆகிய இரு திற நலங்களும் இயைந்து விளங்குகின்றன எனக் குறிப்பிடுகின்றார். இவ்வியல்பினைச் செவ்விதின் ஆய்ந்துணர்ந்த குமரகுருபர சுவாமிகள், தாம் இயற்றியருளிய சிதம்பர மும்மணிக்கோவையின் கண், இதனை ''ஞானப்பனுவல்'' என வியந்து போற்றுகின்றார். இத்தகைய சிறந்த ஞானப்பனுவலின் முதற் செய்யுளையும் அதன் பொருள் நலங்களையும், ஈண்டுக் காண்போம்!

**பாடலின் பொருள் :**

இப்பாடல், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு பொருள்களில், இன்பத்தைப் பற்றிக் கூறுதலை மேற்கொண்டு, அகப்பொருள் நூல்களிற் களவியல் எனப்படும் பகுதிக்கு உறுப்பாகிய கைக்கிளைத்திணையின்கண், காட்சி என்னும் துறையினைச் சேர்ந்ததாகும். அஃதாவது, ஒப்புயர்வற்றுச் சிறந்த அழகிய ஒரு தலைமகளை, இறைவன் திருவருள் துணைநின்று தலைமகன் ஒருவன் காணுமாறு செய்ய, அவன் அவள் அழகைக்கண்டு வியந்து மகிழ்ந்து புகழ்ந்து கூறுவதுபோல அமைந்தது. இப்பாடலின் பொருள் வருமாறு:—

''திருவளரும் தாமரைப் பூவினையும், அழகு வளரும் நீலப் பூக்களையும், இறைவனது தில்லை வரைப்பின்கண் உண்டாகிய பூங்குமிழினது நிறம் வளரும் பூவினையும், கோங்கின் அரும்புகளையும், செவ்விய காந்தட் பூக்களையும் உறுப்பாகக்கொண்டு, மேம்பட்ட தெய்வமணம் வளரும் மாலையானது, ஒரு வல்லியைப்போல நுடங்கி, அன்னத்தின் நடையினைப்போல நடைவாய்ந்து, அழகு வளரும் காமனது வெற்றிக்கொடியைப் போன்று விளங்குகின்றது. இஃது என்ன வியப்பு!''

---

* "Here is a very odd thing. In literature the best in each kind comes first, comes suddenly and never comes again. This is a disturbing, uncomfortable, unacceptable idea to people who take their doctrine of evolution over-simply. But I think, it muts be admitted to be true. Of the very greatest things in each sort of literature, the masterpiece is unprecedented, unique, never challenged or approached henceforth".

—Dr. I. A. Richards.

இப்பாடலின்கண் தான் கண்ட தலைமகளின் முகத்தைத் தாமரை மலராகவும், கண்களை நீலப் பூக்களாகவும், மூக்கினைக் குமிழம்பூவாகவும், தனங்களைக் கோங்கின் அரும்புகளாகவும், கைகளைக் காந்தள் மலர்களாகவும், தலைமகன் வியந்து பாராட்டுகின்றான்.

இங்ஙனம் தன்னுடைய ஒவ்வோர் உறுப்பும் ஒவ்வொரு மலருக்கு நிகராக விளங்க, இணையற்ற பேரெழிலும் இனிய நறுமணமும் வாய்ந்த அத் தலைமகள் விளங்கியதனால், அத்தலைமகளைத் தெய்வத்தன்மை மிக்கு நறுமணம் கமழ்கின்ற ஒப்பற்றதொரு மாலையாக உருவகம் செய்து, ''ஒங்கு தெய்வ மருவளர்மாலை'' எனத் தலைவன் புகழ்ந்து கூறி மகிழ்ந்து நிற்கின்றான்.

அவளுடைய மெல்லியல்பும் நடையழகும் கண்டு ''வல்லியின் ஒல்கி, அன்ன நடை வாய்ந்து'' என்றும்; முதன் முதலாகக் கண்ட அளவிலேயே, தான் அவள்பால் தன் உள்ளத்தை இழந்து தோல்வியுற்றுக் காதல்வயப்பட்டு நின்றனன் ஆகலின், அவளை மன்மதனின் வெற்றிக்கொடி போல்பவள் என நன்கு மதித்து ''உருவளர் காமன்றன் வென்றிக் கொடி'' என்றும்; நலம் புனைந்துரைக்கின்றான் தலைமகன்.

நுண்பொருள் :

இப்பாடலின்கண் அமைந்துள்ள நுட்பப் பொருள்கள் பலவற்றையும், இதற்கு உரை வகுத்துள்ள பேராசிரியர் துணைகொண்டு, ஈண்டுஇயன்ற அளவு காண்போம்;

(1) திரு: கண்டோரால் விரும்பப்படும் தன்மை நோக்கம். 'திருவளர் தாமரை' என்னும் தொடருக்கு 'அழகுவளரும் தாமரை' என்றேயல்லாமல் 'திருமகள் தங்கும் தாமரை' எனவும் பொருள் கொள்ளலாம்.

(2) திரு என்பது, யாவனொருவன் யாதொரு பொருளைக் கண்டானே, அக்கண்டவற்கு அப் பொருள்மேற் சென்ற விருப்பத்தோடே கூடிய அழகு. அதனால் 'திரு' என்றது அழகுக்கே பெயர் ஆகும்.

(3) தான்கண்ட வடிவின் பெருமையைப் புகழ்கின்றான் ஆகலின், ஒருத்தி இருந்த தவிசை இவளுக்கு முகமாகக் கூறுதல் வழுவாம்; அதனால் 'திருமகள் தங்கும் தாமரை' எனப்பொருள் கொள்ளுதல் ஈண்டுப் பொருந்தாது.

(4) இனி, எல்லோரும் விரும்பிப் புகழும் அழகையுடைய திருமகள் தானும், விரும்பித் தங்கியிருக்கும் சிறப்பையுடையதாதலின், தாமரைக்கு ஒத்ததும் மிக்கதும் இல்லை. எனவே திருமகளாலே தாமரை உயர்ந்திலது; தாமரையின் உயர்ச்சி கண்டு திருமகள் அதன்கண் தங்கி வதியலுற்றாள் எனக் கொள்க. இங்ஙனம் கொள்ளின், 'திருமகள் தங்கும் தாமரை' எனப் பொருள் கொள்ளினும் ஒரு வகையில் அமையும்.

(5) 'வளர்' என்னும் சொல்லுக்கு 'வளரும்' என உம்மை கொடுத்துப் பொருள் கொள்ளுதல் வேண்டும். ஏனெனில், வளர்ந்த எனக் கொள்ளின் இப்பொழுது இல்லதாய் முன்பே முடிந்து கழிந்ததனைக் கூறியவாறும்; வளர்கின்ற என உரைப்பின், முன்னும் பின்னும் இல்லதாய் இடைநடுவே வந்துள்ள தொன்றினைக் குறித்ததாம்: வளரவுள்ள எனப் பொருள் சொல்லின், பண்டும் இன்றும் இல்லதாய் இனிமேல் ஒரோவழியே தோன்ற இருப்பதனைச் சுட்டிற்றும். ஆதலின் முக்காலத்திற்கும் ஒப்பப் பொருந்தும் வண்ணம் ''வளரும்'' என உரைகோடலே சால்புடைத்தாம்,

(6) ''குருவளர் குமிழ்'' என்றதே அமையுமாயினும், ''பூங்குமிழ்'' என மேலும் சிறப்பித்துக் கூறியது, முன்னும் பின்னும் வருகின்ற பல பூக்களை நோக்கியும், செய்யுளின்பம் நோக்கியும், அதற்கு ஆகுபெயரை நோக்கியும் ஆகும்.

(7) திருவளர் தாமரை-சீர்வளர் காவிகள்-குருவளர் பூங்குமிழ் என்று ஏனையவற்றிற்கெல்லாம் அடைமொழி கொடுத்தார். ஆனால் கோங்கு என்பதற்கு மட்டும் அடைமொழி கொடுத்திலர். கோங்கு என்பது பாலைநிலத்திற்கு உரிய கருப்பொருள். பாலை நிலத்திற்கெனத் தனியே நிலம் கிடையாது என்பது தமிழிலக்கணம். ஆதலின் அக்குறிப்பை உணர்த்துதற் பொருட்டு, மணிவாசகர் பாலை நிலத்திற்குரிய கருப்பொருள் ஆகிய கோங்கிற்கு அடைமொழி ஏதும் கொடுக்காமலே குறிப்பிட்டார்.

(8) கருப்பொருட்டிறம் குறித்து அடைமொழி கொடாராயினும், கோங்கு என்பது ஈண்டுத் தலைமகளின் தனங்களுக்கு உவமையாக வந்ததாகலின், அத்திறம் கருதியேனும், அதற்கு அடைமொழி புணர்த்துக் கூறியிருத்தல் வேண்டுமென்றோ? எனின், அடைகொடுப்பின் பிறவுறுப்புக்களுடன் தனங்களையும் சமமாக வைத்துக் கூறியதாக முடியும். ஆதலின் அடைகொடாமையே, தனங்களின் தனிச் சிறப்பினை விளக்கி நிற்கும். அஃது எதுபோல எனின், திருக்கோயில்-திருவாயில்-திருவலகு எனச் சிறப்பித்துக் கூறி, இறைவனை மட்டும் திருநாயனார் என்னாமல், நாயனார் என்றே அடைமொழி கொடாது வழங்குதல் போலும் என்பது!

(9) மணிவாசகர் அருட்பொருளை அகப் பொருளின்கண் இயைத்து, இந்நூலிற் கூறத் தலைப் புகுகின்றார் ஆகலின், அகத்தமிழின் பொருளுக்குரிய ஐந்திணைகளையும் இப்பாடலிற் சுட்டியருள்கின்றார். தாமரை மருதமும், காவி நெய்தலும், குமிழ் முல்லையும், கோங்கு பாலையும், காந்தள் குறிஞ்சியும் ஆகிய ஐந்து திணைகளையும் குறித்து நிற்றல் கண்டு கொள்க. இங்ஙனம் எல்லாவற்றையும் கூறியது 'நிலமயக்கம்' எனப்படும்.

(10) இங்ஙனம் நிலமயக்கம் கூறினாராயினும், ''பைங்காந்தள்'' என்று இறுதியிற் குறிஞ்சிக்குரிய பூவிலேயே முடித்ததனால், அத்திணைக்குரிய புணர்தலும் புணர்தல் நிமித்தமும் ஆகிய குறிஞ்சியினையே ஈண்டுச் சிறப்பு முறையிற் கூறினர்.

(11) அற்றேற் குறிஞ்சியே கூற அமையாதோ? நிலமயக்கம் கூறியது எற்றுக்கு? எனின், ஓரிடத்தொரு கலியாணம் உண்டானால், எல்லாரிடத்தும் உண்டாகிய ஆபரணங்களெல்லாம் அவ்விடத்துக்கூடி, அக்கலியாணத்தைச் சிறப்பித்தாற்போலப் பல நிலங்களும் இக்குறிஞ்சியையே சிறப்பித்து நின்றன.

(12) 'உருவளர் காமன்றன் வென்றிக்கொடி' என்றது இறைவனின் நுதல் விழிக்குத் தோற்று உருவை இழப்பதன் முன் மடியாத ஆணையனுய் நின்று உயர்த்திய வெற்றிக்கொடியினை. இங்ஙனம் கூறியதனுல், இறவாத இன்ப அன்பினுலேயே நிகழ்ந்த அகப்பொருள் ஆகிய காமப்பொருளைச் சுட்டியவாறு ஆயிற்று.

(13) யாரும் கேட்போர் இல்லாமலே தலைவன் தன் நெஞ்சத்திற்குச் சொல்லினமையின், இது கந்தருவர் ஒழுக்கத்தையே போன்ற களவொழுக்கம்என்று சுட்டப்பெற்றது.

(14) 'ஈசர் தில்லை' என்றமையின், வீடுபேற்றின் பயத்ததெனச் சுட்டினுர். நில மயக்கம் கூறித் தில்லையைச் சிறப்பித்ததனுல், பல நிலங்களினும் சென்று துய்க்கும் இன்பமெல்லாம் தில்லையின் வாழ்வார் ஆண்டிருந்தே துய்ப்பர் என்பது போதரும். போதரவே இம்மையின்பத்திற்கும் மறுமையின்பத்திற்கும் தில்லையே காரணம் என்பது கூறியவாருயிற்று.


(15) யாரொருவரையும் கேசாதிபாதம் அல்லது பாதாதி கேசம் ஆக வருணித்தல் வேண்டும். அவற்றுள், இது கேசாதி பாதம் (முடி முதல் அடியீறு) ஆக வருணிக்கப் பெற்றது. என்னை? 'திருவளர் தாமரை' என முகம் முதலாக எடுத்துக் கொண்டு 'அன்ன நடை' என்று காலில் முடித்தலான். மனிதரை முடி முதல் அடியீருகவும், கடவுளரை அடிமுதல் முடியீருகவும் வருணித்தல் வேண்டும் என்பது மரபு.

(16) அற்றேல், இதன்கண், 'அன்ன நடை' எனும்படி நடைகண்டான் ஆயின், மேலே அடுத்து ஐயநிலையுணர்த்தல் வழுவாகும் அன்ருே? எனின், இவன் நடை கண்டானல்லன்; இம்மாலை நடக்குமாயின், அன்ன நடையை ஒக்கும் என்று வியந்தான். அவ்வளவே என்க.

முடிவுரை :

இங்ஙனம் பற்பல அரும்பெரும் நுட்பங்கள் செறிந்துள்ள இச்செய்யுளின் அருமைப்பாடும், இதனை முதலாகக் கொண்டு விளங்கும் திருச்சிற்றம்பலக்கோவையார் நூற்சிறப்பும், எல்லையற்றனவாகும். இவற்றைப் பலகால் ஓதியுணர்ந்து பயன் பெறுதல் நம்மனேரின் தலையாய கடமையாகும்.

ஆசிரியர்.




அழகர்கோயில் அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலின் சார்பில் நூபுரகங்கமலைச்சாலையை அறநிலைய ஆணையர் திரு எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ். அவர்கள் திறந்து வைத்தல். தேதி 18-7-'76.

158616

O.2 m211,N58
N06.19.12

C. S. T. No. 130
R. C. No. 184005/71-72

PHONE : 386



*FOR QUALITY COIR GOODS*

# The Cuddalore Coir Worker's Industrial Co-operative Society Limited

No. IND. 187

## CUDDALORE PORT

(TAMIL NADU)

BANKERS:
STATE BANK OF INDIA
CUDDALORE PORT

*Manufactures & Suppliers*

COIR ROPES

TEMPLE
CAR VADAMS

MAT & MATTINGS
IN ATTRACTIVE DESIGNS
CAR MATS

COIR FIBRE

Specialised in the manufacture and Supply of Temple Car Vadams of various thickness of 15″, 20″, 24″, 30″ and varying length from 100 feets. Suppliers of Mattings for offices, and Fancy Mats. Manufacturing all kinds of Coir ropes.

**FOR ALL YOUR COIR AND FIBRE REQUIREMENTS CONTACT THE SECRETARY**

**K. GOVINDARAJAN,**
PRESIDENT

**A. BALASUBRAMANIAN, B. Com.,**
SECRETARY

All Industrial Co-operative Society, Under the control of the Directorate of Industries and Commerce, Tamil Nadu.

# இல்லங்களைப் பொலிவுறச் செய்யும் சிறந்த இல்லம் – காதி கிராப்ட்

கோடைக்கேற்ற கதர் பருத்தி வகைகள் கண்ணைக் கவரும் வண்ண வண்ணப்பட்டு தினுசுகள், தாகம் தணிக்க பதநீர், சுவை மிகுந்த தேன், அக்மார்க் செய்யப்பட்ட செக்கெண்ணெய், உடலுக்கு உறுதி அளிக்கும் பனைவெல்லம், மணமும், அழகும் பெருக்கும் குறிஞ்சி வாசனை சோப்பு, வெள்ளை வெளேர் சலவைக்குக் கோபுரம் சோப்பு, சிறந்த முறையில் செய்யப்பட்ட காலணிகள், தோல் பொருட்கள், வேலைப்பாடு மிக்க மண்பாண்டங்கள், இல்லத்தை அலங்கரிக்க எழில்மிகு மரச் சாமான்கள், பிரம்பு, மூங்கிலிலான பொருட்கள் மலிவு விலை தீப்பெட்டிகள், அழைப்பிதழ் அச்சிட கைக்காகிதங்கள்.

தமிழகமெங்கும் அமைந்துள்ள 180

**காதி கிராப்ட்** களிலும்


மலிவு விலையில் கிடைக்கும்.
வாங்கிப் பயன் பெறுவீர்!
கிராமக் கைவினைஞர்களை ஊக்குவிப்பீர்!




வெளியீடு: தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

பதிவு எண். எம். 7039





திருத்தணிகை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு, வணிகவரி மற்றும் அறநிலையத் துறைகளின் செயலாளர் திரு. ஜி. எஸ். சேஷாத்திரி, I.A.S., அவர்களும், அறநிலைய ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், I.A.S., அவர்களும் வருகைதருதல்.

வெளியிடுபவர்; ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.